வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.


புத்தகம் 17 | திருவள்ளுவர் ஆண்டு 1994 ஆவணி திங்கள் 16-ம் நாள் (1—9—1963) ஞாயிற்றுக்கிழமை ரபி. ஆகி 12 | இதழ் 14




# சாகும்போதும் தமிழ் படித்துச் சாக வேண்டும்
# என் உடல்
# வேகும்போதும் தமிழ்மணத்து வேகவேண்டும்



தமிழுரிமைப் போரிலே தம்மோடு தோளோடு தோள் நின்று போரிட்ட திருமலைத் திரருக்கு தமிழரசுத் தந்தை செல்வநாயகம் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்துகிறார். டாக்டர் நாகநாதன், உட்பட சகல தமிழரசுப் பாராளுமன்ற உறுப்பினரும் கலந்து அஞ்சலி செலுத்தினர். தந்தைக் குரிய ஈமக்கிரியைகளைச் செய்து முடித்த செல்வன் சிறீதரன் தந்தையின் முகத்தைப் பார்த்த வண்ணம் நிற்கிறார்.



திருக்கோணேஸ்வரத்தின் பெருமையை திக்கெட்டும் பரப்பிய திருமலைத் தீரனின் பொன்னுடலை பொசுக்கிவிட தீ பரவுகிறது.

## இறுதி யாத்திரை காணத் திரண்டது மக்கள் கூட்டம்

தமிழ் காக்கும் பணியில் தலைமகனும், திருமலைத் தாய் ஈன்றெடுத்த தவக் கொழுந்தாய் சைவம் வளர்க்க வந்த சற்குருவாய், குணத்தைப் போற்றி குறுமதியைக் கண்டித்து, கொடுமைகளைச சாடி கொள்கைக்குயிர் கொடுத்த வள்ளலாம் திரு. இராஜவரோதயத்தின் இறுதியாத்திரை முடிந்தது. அவர் கொண்ட கொள்கைக்கு உயிர் கொடுக்க முன் வந்த இளைஞர்களும், அவருடைய அன்புக்குக் கட்டுண்ட அயலவர்களும, அவருடைய அரசியலுக்கு அணி செய்தவர்களும், அவருடைய எண்ணங்களுக்கு ஏற்ப உழைத்த உத்தமர்களும், உற்றாரும் உறவினரும், மற்றும் மதத் தலைவர்களும், மக்கள் கூட்டமும் இறுதி அஞ்சலி செலுத்த திருகோணமலையில் திரண்டு நின்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்குப் புறப்பட்ட திரு. இராஜவரோதயத்தின் பூதவுடல் புதன்கிழமை 4.15க்கு, திருமலை மடத்தடிச் சந்தியை வந்தடைந்தது.

தமிழுக்குரமளிக்கத் தன்னைத் தியாகம் செய்த திருமலைத் திரனைத் தரிசிக்க திருகோணமலை மக்கள் அனைவரும் அந்த அகால வேளையிலும் திரண்டு நின்றனர். கண்கள் நீரைப் பொழிய கருத்தில் கவலைகுடிகொள்ள திருமலை ஈன்ற தவக்கொழுந்தின் திருவுருவத்தைக் காண மக்கள் தவியாய்த் தவித்தனர். ஆயிரக்கணக் கானோர் புடைசூழ்ந்து வர பூதவுடலைத்தாங்கிய வண்டி ஊர்ந்து சென்றது.

### துணைவியின் துயர்

21ம் திகதி புதன்கிழமை அதிகாலை இருள் பிரியுமுன்னர், உடலுக்கு சிகிச்சை தேட யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்ட கணவர், அடுத்த புதன்கிழமை (28ந் திகதி) இருள் பிரியும் போழ்து உயிரற்ற உடலினராய், உணர்வற்ற சடலத்தினராய் வீடு திரும்புவதைக் கண்ட துணைவியார் கரை காணாத் துயரக் கடலில் மூழ்கித் துடிதுடித்தார்.

தலைவனைப் பறிகொடுத்துத் துயராற்றாது துடித்து

(9ம் பக்கம் பார்க்க)

## எவ்விதம் ஆறுதல் சொல்வேன்

—தமிழரசுத் தந்தை

ஒரு தலைவரை இழந்து துயர் ஆற முன்பு, அவரது இடம் பாராளுமன்றத்தில் நிரப்பப்பட முன்பு, இன்னொரு நல்லாரை இழந்து தவிக்கும் தமிழ் பேசும் மக்களுக்கு எவ்விதம் ஆறுதல் மொழி சொல்வதென்று தெரியாது தத்தளிக்கிறேன்.

எல்லோருக்கும் நல்லவர் என்று அன்பாக அழைக்கப்படும் இராஜவரோதயம் மறைந்துவிட்டார். நான்கு ஆண்டுகளுக்குள் நான்கு தலைவர்களை இழக்க நேர்ந்துள்ளது. ஒவ்வொரு நாட்டிலும் போல எமது விடுதலைப் போரிலும் தலைவர்களை இழந்து கொண்டே வருகிறோம். இயற்கையின் நியதியை யாம் வெல்ல முடியாது.

(8-ம் பக்கம் பார்க்க)

## பண்டாரவளையில் தி. மு. க. மாநாடு

"சென்ற 25 திகதி ஞாயிற்றுக்கிழமை பண்டாரவளை நகரில் தி. மு. கழகத்தினர் நடாத்திய நாடற்றவர் மறுப்பு மாநாடு நடைபெறாது குழப்பப்பட்டது, தி. மு. காவினர் அடித்துத் துரத்தப்பட்டனர்", என்றெல்லாம் பொய்ச் செய்திகளைச் சிங்களத் தினசரிகளும்—ஏன் தமிழ்த் தினசரி கூடப் பிரசுரித்துள்ளது. உண்மையில் நாடற்றவர் மறுப்பு மாநாடு நலமே நடைபெற்று முடிவுற்றது. ஆனால் முடிவடைந்த பின்னரே கலகம் நிகழ்ந்தது. அதுவும் சில சிங்களக் காடையர்களுடன், பொலிசாரும் சேர்ந்து நடாத்திய கலம்பகமாகும் என்று தெரியவருகிறது.

"குடியுரிமை கொடு!—அநீதி ஒழிக!" என்று உரிமைக் குரலெழுப்பிய வண்ணம் நாடற்றவர் மறுப்பு மாநாடு நடாத்த பண்டாரவளை நகரமண்டபம் நோக்கி ஏறுநடை போட்டனர் 2000 துக்கு மேற்பட்ட தி. மு. க. தொண்டர்கள். மாநாட்டு மண்டபத்தை அணுகும் வேளை உரிமைக் குரலுக்கு எதிராக ஈழம் வாழ் தமிழினத்தை நிந்திக்கும் வசை மொழி கேட்டது. ஏவி விடப்பட்ட சில காடையர்கள் கூட்டம் கூடிக் கூச்சலிட்டுப் பார்த்தனர். ஆனால் மறப்படை சற்றேனும் பாதிக்கப்படாது முன்னேறி மண்டபத்தை அடைந்தது. உரிமைக் குரல் எழுப்பினர்கள். மாநாடும் சுமுகமாக முடிவடைந்தது.

வீடு திரும்பிய பெருந்திரளான தமிழ் பேசும் மக்கள் கூட்டம் கூட்டமாகச் சென்றனர். அதைக் காணச் சகியாத காடையர்கள் மறைவிடங்களிலிருந்து கல்லாலும் மண்ணடைத்த போத்

(13-ம் பக்கம் பார்க்க)

# இடத்திற்கேற்ப கலாச்சார மாற்றம் ஏற்படுவது இயற்கையே

# தனித்தன்மை பேணாத தேசியம் அடித்தளமற்ற கற்பனைக் கோட்டை

## கலாயோகி ஆனந்தக் குமாரசாமி விட்டுச் சென்ற உண்மைகள்

கலாயோகி ஆனந்தக் குமாரசாமி 1877-ம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 22-ம் நாள் இலங்கையில் பிறந்தார். இவரது தந்தையார் யாழ்ப்பாணம் மானிப்பாயைச் சேர்ந்தவரும், சேர். பொன். இராமநாதன் சேர். பொன். அருணாசலம், ஆகியோரின் பெரிய தந்தையுமான சேர். முத்துக்குமாரசுவாமி, ஆவார். இவரது தாயார் இங்கிலாந்தைச் சார்ந்த எலிசபெத் கிளேபீபி அம்மையார் ஆவார். இவரது ஊர் கென்ற் ஆகும். எனவே இவர் பிறந்த பொழுது ஆனந்தா என்ற பெயரைச் சூட்டியதுடன், தாயாரின் ஊர்ப் பெயரான கென்றைத் தழுவி "கென்றிஷ்" என்ற பெயரையும் சேர்த்துக்கொண்டார் தந்தையார்—ஆகவே அவர் பெயர் ஆனந்தா கென்றிஷ் குமாரசாமியாக் அமைந்தது.

இவரது தந்தையாரான சேர். முத்துக்குமாரசாமி இலங்கைச் சட்டசபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு புகழ் பெற்ற தமிழர்-விக்டோரியா இராணியாரால் நீதி மன்றத்திற்கு அழைக்கப்பட்ட முதல் இலங்கையர்—'சேர்' என்ற மதிப்புப் பட்டம் பெற்ற முதல் ஆசியர். இவர் இலக்கியப் புலமையும் கொண்டவர்—பாளியில் உள்ள தாதவம்சம், சுத்தாநிபதம் ஆகியவற்றையும், சில பௌத்த இலக்கியங்களையும், தமிழ் அரிச்சந்திர புராணத்தையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தருளினார். பல் கலைப் புலவரான இவர் வாழ்வு 44 ஆண்டுகள் மட்டும் நிலைக்கும் துர்ப்பாக்கியம் தமிழரைக் கூடியது. புலிக்குப் பிறந்தது பூனைக் குட்டியாக இருக்க முடியுமா! திரு. ஆனந்தக்குமாரசாமி சிறு குழந்தையாக இருக்கும் பொழுதே தாய் சுகயீன முற்றிருந்த காரணத்தால், உடல் நலம் கருதித் தாயை இங்கிலாந்துக்கு அனுப்பியிருந்தார் தந்தையார். அவர்களை இங்கிலாந்

**ஆ. தேவராசன்**

தில் காண்பதற்காகப் புறப்படவிருந்த சேர். முத்துக்குமாரசாமி, பிரயாணத்திற்குக் குறித்த நாளன்றே இறந்தார் என்ற துயரச் செய்தி அறியக்கிடக்கிறது. தந்தை துணையின்றி வளர்ந்த பொழுதிலும், தாயின் அறிவும், நற்பண்பும் இவரைச் சான்றோனாக் கிற்று.

### ஐரோப்பாவில் கல்வி

ஆனந்தக்குமாரசாமி தொடக்க காலத்தில் வைக்கிளிவ் கல்லூரியிலும், பின்பு லண்டன் பல்கலைக் கழகத்திலும் கல்வி கற்றார். லண்டன் பல்கலைக் கழகத்தில் ஆனந்தக் குமாரசாமி விஞ்ஞான இளவல் பட்டம் சிறப்பியலுடன் பெற்றார். இதைத் தொடர்ந்து விஞ்ஞானக் கலாநிதி என்னும பட்டமும் பெற்றார். தனது 25-ம் வயசில் இலங்கைக்கு வந்தார். அரசாங்க சேவையிலிருந்து அரும்பணி ஆற்றிய காலத்தில் சமூக, கலை இயக்கங்களிலும் பங்கு கொண்டார். 1903 முதல் 1906 வரை தீவிரமாக இத்துறைகளில் ஈடுபட்ட இவர் 1907-ம் ஆண்டு இலங்கையை விட்டுச் சென்றார். 1905-ம் ஆண்டுக்கும் 1917-ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் ஆனந்தக்குமாரசாமி ஐரோப்பாவின் பல பாகங்களிலும் சுற்றுப் பிரயாணம் செய்தார்—பல நாடுகளின் கலை, இலக்கிய நுட்ப திட்பங்களை ஆராய்ந்து அறிந்தார். இக்காலத்தில் அமெரிக்காவில் உள்ள பொசுட்டன் கவின் கலை அரும்பொருட்சாலையில் பல்வேறு தொழிலில் அமர்ந்து ஆராய்ந்தார். ஏறத்தாழ முப்பது ஆண்டுகள் அங்கு பணியாற்றினார்—இல்லை, கலையுலகில் புதிய ஒளிபாய்ச்சினார். அவரது முயற்சிகளில் அவரது ஆசெந்தின வாழ்க்கைத் துணைவி (தோனாலூயிசா ஆனந்தக் குமாரசாமி) பெரிதும் உதவினார். உண்மையில் இந்த அம்மையாரும் மொழியியலில் திறமை வாய்ந்தவர்—பொதுவில் புலமைசான்ற ஒருவர். மனைமாட்சி கொண்ட இல்லாளை விட வாழ்க்கையில் என்ன துணை வேண்டும்?

பல்வேறு நாடுகளின் கலை வளத்தைக் கண்டு, உற்றுணர்ந்து, ஆராய்ந்து அனுபவித்த ஆனந்தக்குமாரசாமி அவர்கள் இந்தியக் கலையின் தனிச் சிறப்பை, செழிப்பான வளத்தை மிகுதியாக அனுபவித்தார். அவற்றைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தார். உலகில் எதற்குமே அதை விற்றுவிடக் கூடாது என்ற உறுதி நீள வேண்டும் என்று இந்தியர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

### இந்தியக் கலை

இந்திய மக்கள் கலை கலைக்காகவே என்று வாழ்ந்தவர்கள் அல்ல. கலை அவர்கள் வாழ்வின் ஒரு பகுதியாக அமைந்தது, கலையைக் காதலித்து வாழ்ந்துவந்தார்கள் இந்திய மக்கள் என்பது அவர் கருத்து. கலை வாழ்க்கைக்கு ஒரு மாற்று நிலையன்று; கலை வாழக்கைக்கு ஒரு ஏது—வாழ்க்கையில் இழையோடிய நீங்கலறியா நிலை என்பது ஆனந்தக் குமாரசாமியின் கருத்து. இந்தியக் கலையின் இன்னோர் மகிமைபற்றி ஆனந்தக் குமாரசாமி சொல்வது என்ன வென்றால், மேலை நாடுகளில் கலைப் படைப்புகளைப் பற்றிய திறனாய்வு கலைஞர்கள் பெயர் அடிப்படையில் நடக்கும் போது, இந்தியக் கலைகளின் திறனாய்வு கலைப் படைப்பை மையமாக வைத்தே நடைபெறுகிறது என்பதே. கலப் படைப்பை வைத்துத் திறனாயும் போது கலையின் எழில் மட்டுமல்லாது, கலைஞன் உள்ளத்தின் கற்பனை ஊற்று, சிந்தனை ஊற்று எல்லாம் ஆய்வாளன் கருத்து மேடையில் களிநடனம் புரிய விடப்படுகின்றன. இது இந்தியக் கலையின் ஒரு தனிச் சிறப்பியல்பாகும்.

இந்தியக் கலைகள் விஞ்ஞானத்துடன் மோதிக் கொள்ளாது, விஞ்ஞானத்தையும் உள்ளடக்கிக் கொண்டு தன் எழில் குன்றாது மிளிர்கின்றது என்பது அன்னார் கருத்து. சமய, முருகியல் விஞ்ஞானக் கருத்துக்கள், இசை, இலக்கிய, சிற்ப, ஓவியப் படைப்புகளின் உள்ளடக்கத்துடன் மோதாது இணைந்து எழில் பொங்க இசைக்கின்றது இந்தியர் வாழ்வில் என்பது ஆனந்தக் குமாரசாமியின் ஆராய்ந்த அருமையான கருத்து.

இந்திய இசையைப் பற்றிச் சொல்லும் போது அது ஒரு அபார ஆற்றலும் அபூர்வ நுட்பமும் கொண்டு அமைந்தது என்பது அன்னார் கருத்து.

"இந்திய இசை தற்கூட்டற்றது. அது ஒரு தனி ஆளுடைய உணர்ச்சியிலும் நுட்பத்திலும் பார்க்க ஆழமும், பரப்பும் மூப்பும் கொண்ட ஒரு உணர்ச்சியையும் அனுபவத்தையும் பிரதிபலிக்கிறது; அது கண்ணீரற்ற துயரமும், துள்ளலற்ற இன்பமும், துல்லியம் இழக்காத உள்ளக் கிளர்ச்சியும் கொண்டது."

இந்தியக் கலையின் முழுமை ஆரிய திராவிடக் கலைகளின் கலப்பினால் ஏற்பட்டது என்பது அவர் கருத்து. ஆரியப் படையெடுப்பின் பின் திராவிட, ஆரிய நுண்மாண் நுழை புலத்தின் சேர்க்கையால் ஏற்பட்டது என்பதை அவர் வற்புறுத்தியிருக்கிறார். 1908-ம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் கொப்பன்கேகனில் நடைபெற்ற கீழைத் தேசவியல் மாநாட்டில் இந்தியக் கலை கிரேக்கக்

(15-ம் பக்கம் பார்க்க)

## கவிதைப் பூங்கா

### கவியைப் பொழியும் அவ்வெழில்

—"சத்தியசிலன்"—

மயிலைப் பிடித்துச்—சிறு
துயிலை உடுத்து—நடை
பயில விடுத்த மெல்இயல்!
பட்டை விரித்து—புது
மொட்டைப் பரத்தி—அதில்
தொட்ட தெனும்மெல் உடல்!
கிளியைப் பிடித்து—தமிழ்
மொழியைப் பயிற்றி—உரை
பொழிய விடுத்த தெனும் சொல்!
கயலைப் பிடித்து—இரு
அயில்கைக் கொடுத்து—கொலை
பயில விடுத்த கொல்விழி!

கொவ்வைப் பழமி—ரண்டில்
மௌவல் தவழ—உயிர்
கௌவப் படைத்த செவ்விதழ்!
முத்தைப் பதித்து—முல்லைக்
கொத்தை நிரைத்துத்—தெய்வச்
சித்தன் அமைத்த வெண்நகை
நிலவைப் பிடித்து—ஒரு
குமுதைப் பதித்து—அதில்
அமுதை இருத்திய முகம்
முகிலைப் பிடித்து—இருள்
தகையக் குழைத்து—அதில்
அகிலைச் சுமத்திய குழல்!

மயலைக் கொடுத்து—எந்தன்
செயலைத் தடுத்து—நிசித்
துயிலைக் கெடுத்த தெனினும்,
உயிரில் புகுந்து—அதன்
உணர்வில் திரிந்து—புதுக்
கவியைப் பொழியும் அவ்வெழில்!

### சங்கே நீ முழங்கு!

—"ஜெயம்"—

சங்கு முழங்கு, சங்கு முழங்கு, சங்கே நீ முழங்கு!
சங்கம் வளர்த்த எங்கள் தமிழ்மொழி எங்கும் விளங்கிடவே!

வங்கமவென்று தங்கம்குவித்துப் பங்கம் அறுத்தவர்தான்
—தமிழ்
பொங்கும்உரிமை இங்கும்வளர்ந்துவி ளங்கிடசெய்தவர்தான்
எங்கள்தமிழ்மொழி எங்கள்தமிழ்மொழி என்றுமுழங்கி
விட்டார்—விண்(க)
ளங்கம்செய்திட கங்கணம்கொண்டவர் அங்கம்அறுத்துவிட்டார்!

சங்கு முழங்கு, சங்கு முழங்கு, சங்கே நீ முழங்கு!
சங்கம் வளர்த்த எங்கள் தமிழ்மொழி எங்கும் விளங்கிடவே!

தங்கம்நிகர்த்த சிங்கத்தமிழர் எங்கள்உரிமையென்றார்—நல்ல
திங்கள்நிகர்த்த கங்கையர்முதலாய் பங்கென்றுவந்துவிட்டார்
பங்கம்அறுத்திட தங்கும்புகழ்பெற வந்துகுவிந்துவிட்டார்
—எனில்
மங்களவெற்றி எங்களதென்று முழங்குகசங்கே நீ

சங்கு முழங்கு, சங்கு முழங்கு, சங்கே நீ முழங்கு!
சங்கம் வளர்த்த எங்கள் தமிழ்மொழி எங்கும் விளங்கிடவே!


கலப்பற்ற உயர்தர அலுமினியம்
மங்காத பிரகாசம் * நீடிய உழைப்பு
இவற்றிற்கு




டொலர்
அலுமினியப் பாத்திரங்கள்
டொலர் கோப்பரேசன்,
14, டாம் வீதி, கொழும்பு-12.




வி. ஏ. எஸ். ஹமீது, சாவகச்சேரி.

கே: சில பெண்கள் உதட்டில் 'லிப்ஸ்டிக்' பூசுகிறார்களே, ஏன்?

ப: எதற்காகப் பூசுகிறோம் என்பது தெரியாமலே இக்காலப் பெண்கள் பூசுகிறார்கள். உதட்டில் சாயம் பூசுவது உதட்டில் ஏற்படும் வெடிப்பு, தேமல், கருமை ஆகியவற்றை மறைப்பதற்கே.

ஃ

ஆர். கணபதி, கேகாலை.

கே: ஈழ நாட்டில் வாழும் சிறுபான்மை மக்களுக்கு ஒரு பகுதியைப்பிரித்துக்கொடுத்தால் பெரும்பான்மையோருக்கு என்ன?

ப: பெரும்பான்மையோருக்குரிய பகுதி நிச்சயமாக அவர்களுக்குக் கிடைக்கும்? ஆனால் முழுவதும் அவர்களுக்கே வேண்டும் என்று அல்லவா இன்று கேட்கிறார்கள்!

கே: பெரும்பான்மையோருக்கும், சிறுபான்மையோருக்கும இடையே கலவரங்கள் ஏற்படுகின்றனவே. இதைப் போக்க என்ன வழி உண்டு?

ப: ஒரே ஒரு வழிதான் உண்டு. அதுதான் சமஷ்டி ஆட்சி முறையை இந்நாட்டில் அமுலுக்குக் கொண்டு வருவது.

ஃ

ஹென்றி மணி, மஸ்கெலியா.

கே: தமிழரசுக்கட்சி மலையகம் வருவதென்றால் எங்கள் பிணங்களின் மீது நடந்துதான் செல்ல வேண்டும் என்று திரு. இலங்கரத்ன அன்று கூறினரே, அப்படியென்றால் இன்று.........?

ப: தமிழரசுக் கட்சி இராசபாட்டையில் செல்லும் கட்சி என்பதை அவர்கள் புரிந்துகொண்டதால், கட்சி நடப்பதற்காக அவர்கள் யாரும் பிணமாகவில்லை. அதற்குப் பதிலாக அவர் இப்பொழுது பணத்தின் மீது (நிதி அமைச்சரல்லவா?) நடக்கிறார்.

கே: சமசமாஜக் கட்சியின் மொழிக் கொள்கையில் மாற்றம் ஏதும் நிகழவில்லை என்று திரு. எட்மண்ட் சமரக்கொடி சமீபத்தில் கூறியுள்ளாரே?

ப: திரு. சமரக்கொடி கற்பனை உலகில் சஞ்சரிக்கிறார்.

ஃ

மு. கருணாநிதி, ஏழாலை மேற்கு.

கே: நிதி மந்திரி ஒரு கையால் கொடுத்ததை மறுகையால் பிடுங்குகிறார். எதற்காக அவர் அப்படிச் செய்கிறார்?

ப: எதையும் கொடுக்காமலிருக்க.

கே: ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் ஏற்படுவதற்கு முன் ஒருவரின் சராசரி வயது 56 ஆக இருந்தது, இன்று சராசரி வயது 66 ஆக இருக்கிறது என்று திரு எஸ். கே. சூரியாராச்சி கூறுகிறாரே, உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: அவரது ஆரா(ய்)ச்சி அடுத்த தேர்தலில் மஹரப் பகுதியில் பயன் படலாம். வயதை உயர்த்திக் கூறுவதிலும் ஏன் அவர் சிக்கனம் கடைப் பிடிக்க வேண்டும்? 66 ஆக இருந்த வயது 560 ஆக உயர்ந்துவிட்டதெனத் தாராளமாகக் கூறலாமே.

ஃ

எம். எஸ். எம். மஃறூப், திருகோணமலை.

கே: என் நண்பர் ஒருவர் சொல்லுகிறார் பெண்கள், சமுதாயத்தின் ஆணிவேர், அவர்கள் வீழ்ந்தால் சமுதாயம் வீழ்ந்துவிடும் என்று!

ப: ஆண்கள் மட்டும் என்னவாம்! அவர்கள் வீழ்ந்தாலும் சமுதாயம் வீழ்ந்துவிடுமே.

ஃ

க. சண்முகநாதன், அல்லைப்பிட்டி.

கே: மூதூர் இடைத் தேர்தலுக்குப் பிரசாரம் செய்யச் சென்ற அம்மையார் ஊர்காவற்றுறை இடைத்தேர்தலுக்குச் செல்லாததேன்?

ப: ஒரு முறைபட்ட சூடு, போதாதா?

ஃ

கு. செ. அந்தோனி, தலவாக்கொல்லை.

கே: இ. தொ. காங்கிரஸ் காரியாலயங்களில் சாதி வேற்றுமையுண்டாம். தொண்டமான் சாதியினர் மட்டும்தான் காரியாலயத்தில் வேலை பார்க்க முடியுமாம்.

ப: காரியாலயத்தின் சங்கதி எனக்குத் தெரியாது. ஆனால் இ. தொ. கா.வினுள் சாதியின் அடிப்படையில் இரு கோஷ்டியினர் சிண்டு பிடித்துக் கொள்வதாகக் கேள்வி.

ஃ

லெ. பெரியசாமி, தெரனியகல.

கே: நான் இந்திய ராணுவத்தில் சேர்ந்து பணியாற்ற விரும்புகிறேன். என் ஆசையை இந்திய அரசாங்கம் நிறைவேற்றி வைக்குமா?

ப: இலங்கையிலுள்ள இந்தியத் தூதர் மூலம் இந்திய அரசாங்கத்திடம் உங்கள் ஆசையைத் தெரிவியுங்கள். ஆசை நிறைவேறக்கூடும்.

ஃ

ஹென்றி மணி, மஸ்கெலியா.

கே: நாடற்றவர்களின் குடியுரிமையைப் வழக்காடி பெறுவதற்கு வழி ஏதும் இல்லையா? தமிழரசு கட்சியின் சட்ட நிபுணர்கள் இதற்கு என்ன கூறுகிறார்கள்?

ப: நமது அரசியற் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வெறும் சட்டங்களை நம்புவதில் பயனில்லை. சட்டம் ஒரு கழுதை. முன்னால் சென்றால் கடிக்கும், பின்னால் சென்றால் உதைக்கும்.

ஃ

எம். எம். மர்ஜினா, கிண்ணியா-9.

கே: கல்வி அமைச்சர், தனது அரசாங்கத்தை ஆதரிப்பவர்களுக்கு மட்டுந்தான் ஆசிரியத் தொழில் கொடுக்கப் போகிறாராமே, அப்படியானால் அரசாங்கத்தை ஆதரியாதவர்கள் என்ன செய்வது?

ப: வேலையில்லாப் படைக்குத் தலைமை தாங்கி வேலை கிடைக்கும் வரை "யுத்தம்" செய்வது.

ஃ

மலையக மன்னன், இராணியப்பு.

கே: துன்பம் அடுக்கடுக்காக வரும் பொழுதெல்லாம் தாங்கி, தாங்கி, தாங்க முடியாத நிலையில் என்ன செய்தல் வேண்டும்?

ப: துன்பத்தைத் துச்சமாகக் கருதி, துன்பச் சுமையை இறக்கிக் கீழே வைத்துவிட்டு கவலையின்றி இருக்க வேண்டும்.

ஃ

வி. சண்முகலிங்கம், பலாங்கொடை.

கே: அமைச்சரின் வரவேற்புக்கு 4 ஆயிரம் ரூபாயைச் செலவழித்து, அதன் மூலம் நாட்டு மின்சார வினியோகத்திற்கு 2 ஆயிரம் ரூபாயை நமது தமிழ் பேசும் பகுதியிலுள்ள ஒரு பட்டின சபை பெற்றதாமே?

ப: வரவேற்பு அளித்தவர்கள் இதைப் போல எத்தனை ஆயிரங்களைப் பெற்றார்களோ!

கே: யான் "தலைப் பாகை" அணிய விரும்புகிறேன். அதை எங்கிருந்து பெறலாம் குயுக்தியாரே?

ப: ஒன்றே ஒன்றுதான் உண்டு செனட் வட்டாரத்தில் சுற்றித் திரிந்தால் கிடைக்கலாம்.

ப. இராசன், பண்டாரவலை.

கே: ஒரு குற்றமும் செய்யாத வலை நண்பனும், உற்றாரும், உறவினரும், சமுதாயமும் வெறுக்கின்றனரே, காரணம் யாதோ?

ப: குற்றங்கள் நிறைந்த சமுதாயத்தில் குற்றம் செய்யாதவன் குற்றவாளியே! எனவே வெறுக்கப்படுகிறான்.

ஃ

க. சுப்பிரமணியம், காரைநகர்.

கே: சம அந்தஸ்தில் இருந்து வழுவிய சமசமாஜிகளும், சிங்களம் மட்டும் என்பதில் பிடி தளர்ந்த மக்கள் ஐக்கிய முன்னணியும், பச்சோந்தி கம்யூனிஸ்டுகளும் சேர்ந்து தரும் மொழிக் கொள்கை எப்படி இருக்கும்?

ப: அது ஒரு தெளிவற்ற சாம்பார்.

திருவாளர்

**குயுக்தியார்**

மே/பா சுதந்திரன்

தபால் பெட்டி இல. 1183

கொழும்பு-12.

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினாக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

## செப்டம்பர் 15ம் திகதி இதழ்

தமிழினத்தைக் காக்கவும், தமிழ் மொழியைக் காக்கவும் சிறை சென்று உயிர் நீத்த செம்மல்;—எல்லாம் தமிழென வாழ்ந்த ஏந்தல், கோப்பாய் தந்த கோமான் அமரர் வன்னியசிங்கம் நினைவு இதழாக வெளிவரும்.

அண்ணலின் அடிச்சுவட்டில் நின்று, நடக்கவிருக்கும் அறப்போராட்டத்தில் தமிழ் பேசும் மக்களின் பணியென்ன; பங்கென்ன என்பதைத் தெள்ளென விளக்கும் கட்டுரைகள், தீஞ்சுவைக் கவிதைகள் இடம்பெறும்.

கே: மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் உங்கள் வாழ்வில் ஏதாவது சந்தர்ப்பம் ஏற்பட்டதுண்டா?

ப: ஒரு தடவை தண்ணீர் தொண்டையில் அடைத்துக் கொண்ட போது.

ஃ

ஹென்றி மணி, மஸ்கெலியா.

கே: நாடற்றவர்களாக்கப்பட்டவர்களில் ஒரு பகுதியினரை பணம் கொடுத்து இந்தியாவிற்கு அனுப்ப இ. தொ. கா. வும், ஜ. தொ. கா. வும் ஒப்புக்கொண்டுள்ளனவே! தமிழரசுக் கட்சியின் இ. தொ. க இந்த ஏமாற்று வித்தையை ஏற்க மறுக்குமல்லவா?

ப: நாடற்றவர் பிரச்சினையைத் தீர்க்க இ. தொ. கா. விடமோ, ஜ. தொ. கா. விடமோ எந்த உருப்படியான திட்டமும் கிடையாது. ஆனால் இ. தொ. க. விடம் அதற்கு நல்ல திட்டம் உண்டு.

ஃ

வி. க. இராமலிங்கம், மாத்தளை.

கே: தமிழ் பேசும் மக்கள் எல்லோரும் ஒரு கட்சியின் கீழ் ஒன்றுபடும் காலம் வருமா?

ப: அந்தக் காலம் ஏற்கனவே வந்துவிட்டது. அவர்கள் ஒரே கட்சியில், ஒரே கொடியின் கீழ் ஒன்று பட்டு விட்டார்கள்.

கே: தமிழ் எந்த நாட்டிலாவது அரசாங்கப் பாஷையாக இருக்கின்றதா?

ப: சென்னை இராச்சியத்தில் அரசாங்க அலுவல்கள் பல தமிழில் நடைபெறுகின்றன.

ஃ

தமிழரசு அபிமானி, இராமநாதபுரம்.

கே: சத்தியாக்கிரகம், பகிஷ்காரம் என்பன போன்றவைகளைத் தமிழரசுக் கட்சி நடத்தப் போகிறது என்றால் சில தமிழ் மக்கள் பயப்படுகிறார்களே, காரணமென்ன?

ப: மகஜர் சமர்ப்பித்தல், காவடி தூக்குதல், தீர்மானங்கள் நிறைவேற்றுதல் முதலிய இலகுவான வழிகள் மூலம் விடுதலை பெற்றுவிடலாம் என்று கருதுபவர்களும், தியாகம் செய்வதைவிட அடிமையாயிருப்பது எவ்வளவோ மேல் என்று எண்ணும் சுகவாசிகளுமே போராட்டமென்றால் அஞ்சி அஞ்சிச் சாவார்கள். அடக்குமுறை யென்றதும் அலறிப் புடைத்து ஓடி விழுந்து உயிரை விடும் இனமாகத் தமிழ் இனம் இருக்கக் கூடாது.

கே: சிறிமா அரசாங்கம் சில பொருட்களின் விலைகளைக் குறைத்தது அடுத்த தேர்தலுக்கு பொதுமக்களின் ஆதரவைப் பெறுவதற்காக என்று சிலர் கூறுகிறார்களே! உண்மையா?

ப: அல்ல- அரசாங்கக் கட்சி எம். பி. கள் சிலர் எதிர்க் கட்சிக்கு மாறுவதை உடனடியாகத் தடுப்பதற்காகக் கையாண்ட உபாயம்தான் இந்த விலைக் குறைப்பு.

ஃ

வி. கணேசன், சாவகச்சேரி.

கே: கட்டப்பொம்மனைக் கொள்ளைக்காரன் என்றும், புலித்தேவனைத் தமிழன் என்றும் ஒரு பத்திரிகை பிரசுரித்ததே! உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: ஒரு குறுக்கு வழியைக் கையாண்டால் பத்திரிகை 10 பிரதியாவது அதிகமாக விற்காதா என்ற நப்பாசைதான் காரணம்.

தமிழ்ச்செல்வன், கொழும்பு-14.

கே: எனது நண்பர் ஒருவர் கண்டியிலிருந்து கதை ஒன்று அனுப்பியிருக்கிறார். சுதந்திரனுக்கு அனுப்பும்படி. ஆகவே இக் கதையை அனுப்பினால் தயவு செய்து பிரசுரிப்பீர்களா? நேரில் கொண்டு வரட்டுமா? தபால் மூலம் அனுப்பட்டுமா?

ப: எப்படி வேண்டுமானாலும் அனுப்புங்கள். கதையின் தகுதியைப் பொறுத்தே பிரசுரமாகும்.

ஃ

ச. செபரெட்ணம், பெரிய கல்லாறு.

கே: யாழ்ப்பாணத்தில், படித்த பெரியோர்கள் பலிருந்தும் சாதிப் பாகுபாடு மிகக் கொடுரமாக அனுட்டிக்கப்படுவதேன்?

ப: சமுதாயப் புரட்சி மூலமே தீண்டாமையை ஒழிக்க முடியும். அது ஏற்கனவே தொடங்கிவிட்டது.

ஃ

அ. லாகிர், யாழ்ப்பாணம்.

கே: முஸ்லிம்கள் மீது சிங்களத்தைத் திணிக்க முடியாதென்று ஒரு பத்திரிகையில் படித்தேன். இதைப் பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: அப் பத்திரிகையின் கருத்துத்தான் எனது கருத்தும். ஒரு தேசிய இனத்தின் மொழியை மற்றொரு தேசிய இனத்தின் மீது திணிக்கவே முடியாது.

ஃ

ந. சிவநேசன், கரவெட்டி கிழக்கு.

கே: ஊர்காவற்றுறை இடைத் தேர்தலில் போட்டியிடும் சுயேச்சையால், தேர்தலில் வெற்றி பீட்ட முடியாவிட்டாலும் தன் கட்டுப் பணத்தையாகுதல் காப்பாற்றுவார் என்று என் நண்பர் எனக்குக் கூறுகிறார்.

ப: அவரது பணம் பறிமுதலாவதில் எனக்கும் மகிழ்ச்சியில்லைத்தான். ஆனாலும், வாக்காளர் சித்தம் எப்படியோ!

**விகார்பில்ஸ்**



விலை 30 மாத்திரைகள். ரூ. 4-50

பின்வரும் இடங்களிலும் கிடைக்கும்

1. வி. எஸ். கைலாசபிள்ளை அன்ட் சன்ஸ், 76, பெரியகடை, யாழ்ப்பாணம்.
2. மட்டக்களப்பு ஸ்டோர்ஸ், மட்டக்களப்பு.
3. கே. எம். ஹஸன், 251, திருமலை வீதி, கண்டி.
4. எஸ். சுப்பிரமணியம் அன்ட் கம்பெனி, 53, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
5. லீலா ஸ்டோர்ஸ், 249, நோரிஸ் ரோட், கொழும்பு-11.
6. எஸ். ஞானம் அன்ட் சன்ஸ், 47, செட்டியார் தெரு, கொழும்பு-11.
7. சென்ட்ரல் மெடிக்கல் ஸ்டோர்ஸ் லிமிட்டெட், மெயின் வீதி, கொழும்பு-11.
8. சென்ட்ரல் மெடிக்கல் ஸ்டோர்ஸ், இல. 123, மெயின் வீதி, மஸ்கெலியா.
9. சி. எஸ். கணபதிப்பிள்ளை அன் சன்ஸ், 51, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
10. ஜி. டி. பின்டோ அன் சன்ஸ், 80, காலி ரோட், வெள்ளவத்தை.
11. பரஞ்சோதி மருத்துசாலை, திருகோணமலை.
12. நாகலிங்கம் குரோசரி ஸ்டோர்ஸ், 208, வார்ட் பிளேஸ், பொரளை.

எஸ். என். குரு மெடிக்கல் ஹால்
60 புதுச் செட்டித் தெரு
கொழும்பு 13.

# மறைந்தும் மறையாத தியாக மாமலை!

**தாமரைமணாளன்**

கள்ளிக்காடு இருக்க கற்பூரக் காட்டை வெட்டி விட்டான் காலன்!

ஐயகோ! கொடுமை! கொடுமை!!

நினைக்க நினைக்க நெஞ்சம் தீயாக வேகிறது. துக்கம் தொண்டையை அடைக்கிறது. கண்கள் குளமாகின்றன!

கோப்பாய்க் கோமகன் வன்னியனாரின் மறைவின் முழு வேதனையிலிருந்து விடுபடுமுன், அண்ணல் ஏகாம்பரத்தின் பிரிவினால் ஏற்பட்ட துயரம் நெஞ்சில் இன்னமும் மண்டிக் கிடக்கும் பொழுது, அமரர் கந்தையாவின் சாவு விழிகளில் ஏற்படுத்திய கண்ணீரை துடைத்து முடிப்பதற்குள்... திருமலை தந்த தியாகமாமலையும் சாய்ந்து விட்டதென்ற செய்தி, தேளாக உள்ளத்தைக் கொட்டுகிறதே!

இப்படியும் ஒரு கொடுமையா? இடிக்குமேல் இடியா?

பட்டகாலே படுவதா?

கெட்ட குடியே கெடுவதா?

யாருக்கு நாம் என்ன பாவம் செய்தோம்?

நமக்கு மட்டும் ஏன் இந்தச் சோதனை?

திருமலை தந்த தியாக மாமலை மறைந்து விட்டதென எப்படி நம்புவது?

பார்வை கெட்டு, ஈழை கட்டி கோல் கொண்டு நடக்கும் தொண்டு கிழமா?

குருடன் கூட அப்படிச் சொல்லமாட்டானே!

கொற்றமும், கொடியும் கொண்டு கோலோச்சிய பண்டு தமிழ் மன்னர்களை இன்று ஞாபகப்படுத்தும் எழிலான மேனி, எடுப்பான தோற்றம், கம்பீர நடை, தங்கத்தைப் பழிக்கும் நிறம் —இவையல்லவா அந்த தியாகமாமலையின் திரு உருவம்!

ஐம்பத்து நான்கு ஆண்டுகள்—சாகிற வயதா இது?

இருந்தும் அந்த அழியாத் திருமேனியைத் தீ தீண்டி விட்டதே!

சுகயீனமென்ற செய்தி கேட்டு முழுதாக ஒரு வாரம் கூட ஆகவில்லையே!

விரைவில் குணமடைவாய், பணி புரிவாய் என்றல்லவா வழிமேல் விழி வைத்துக் காத்திருந்தோம்!

இப்போது எல்லோரையும் ஏமாற்றிவிட்டல்லவா போய் விட்டீர்கள்!

கராக்கிரகம் உங்கள் உயிரை மெல்ல மெல்லக் குடித்து விட்டதா?


நேர்மைக்கும், தன்னலமற்ற தியாகத்திற்கும் உன்னை இலக்கணமாகவும், இலக்கியமாகவும் எடுத்துக் காட்டி வாய் கமழப் பேசுவோமே, இனி யாரை நினைந்து அப்படிப் பேசப் போகிறோம்!

ஏன் ஐயா இப்படிச் செய்தீர்கள்?

நாங்கள் கோழைகள், பகைவனின் பாதம் கழுவிப் பல்லிளித்து நிற்பவர்கள், சுதந்திர வாழ்வுக்கு அடியோடு அருகதையற்றவர்கள் என்று எண்ணியா போய் விட்டீர்கள்!

இல்லை—கோப்பாய்க் கோமான் வன்னியனாரிடமிருந்து அழைப்பு வந்ததா? அண்ணல் ஏகாம்பரம அரசியல் பேசி மகிழ அழைத்துக் கொண்டாரா? இல்லை, அமரர் கந்தையாதான்


(5ம் பக்கம் பார்க்க)



"வங்காளவிரிகுடாக் கடலின் அலைகள். கோணேச மலையில் வந்து மோதும் காலம் மறையும் வரை, திருமலைத் தீரர் இராஜவரோதயத்தின் பெயர் மறையாது" என்று கூறி மட்டுநகர் முதல் பிரதிநிதி திரு. செ. இராசதுரை, மறைந்த தலைவரின் சேவையைப் பாராட்டி இரங்கல் உரை நிகழ்த்துகிறார். அருகில் திரு. பாரிஸ் பெரேரா, திரு. டி. பி. இலங்கரத்தின, உடுப்பிட்டிப் பிரதிநிதி திரு. மு. சிவசிதம்பரம், தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. சி. மூ. இராசமாணிக்கம், தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் ஆகியோர் கவலை தோய்ந்த முகத்துடன் காணப்படுகின்றனர்.

## துடைக்கப் போமோ?

—தமிழ்ப்பித்தன்—



கத்தும் தரங்கம் எடுத்தெறியும்
    கடல்சூழ் அழகுத் திருமலையின்
முத்தே, மணியே முழுமதியே.
    மோனத் தவத்தின் திருவுருவே
நித்தம் நிதமும் உனைநினைந்து
    நீண்டபொழுது நீர் சிந்த
செத்தீர் எனினும் நும்புகழை
    செகத்தோர் என்றும் மறவாரே!

சாதியின் பேதம் நீக்கி
    சமத்துவம் காண வேண்டி
நீதியின் வழியே நின்று
    நீண்புகழ் தேடிக் கொண்டாய்
பாதியில் உந்தன் சேவை
    பக்குவம் அடையு முன்பே
சோதியின் சுடரே யானாய்;
    சோகத்தைத் துடைக்கப் போமோ?

எம்மைப் படைத்த இறைவா உனக்கு
    இதய மொன்றே கிடையாதோ
கைம்மைக் கொடுமையிலும் பார்க்க
    கொடிய கொடுமை ஏன் செய்தாய்?
கையைத் துணித்தாய் கால் துணித்தாய்
    கழுத்தைத் துணித்து முடித்தாயே
உம்மைக் கடவுள் என வழுத்த
    ஒருபோதும் மனம் துணியாதே!


இவர்



யார்

தெரிந்துகொள்ளுங்கள்!

இவரைப்பற்றி அறிந்திருந்தால் என்றாவது ஒரு நாள் இவருடைய உதவியினால் உங்களுக்கு ஏற்படும் இன்னல்களைத் தீர்த்துக் கொள்ளலாம்.

பல தரத்திலுமுள்ள லட்சக் கணக்கான மக்கள் இவர் மூலம் தவிர்க்க முடியாத பிரச்சினைகளுக்கு வழிதேடிக் கொண்டுள்ளனர் என்பதை காரியாலயத்திலுள்ள நற்சாட்சிப் பத்திரங்களின் மூலம் அறியலாம். திறமை மிக்க இவர் மந்திர பலத்தினாலும், தெய்வ பலத்தினாலும் மைமூலம் பார்த்தும் யந்திரம், மந்திரம், வசியம், வைத்தியம் முதலியவற்றை சரிவர செய்து பலவித காரணங்களிலும் வெற்றி அடையச் செய்வார். ராஜவசியம், ஆண் பெண் வசியம், சர்வஜன வசியம், விவாஹம், காதல், வழக்கு பந்தயங்கள். பரீட்சை, நிலபுலன், வியாபாரம், வேளாண்மை ஆகியவற்றிலும் வெற்றி, உயர்வு, முன்னேற்றம் அடையவும் மற்றும் கிரக தோஷங்கள், ருது தோஷம், பேய் பிசாசு கோளாறுகளையும் பலவிதமான நோய்களையும் விலகும்படி செய்வார். உங்களுக்கு ஏற்படும் சகல பிரச்சினைகளுக்கும் வழிதேடிக்கொள்ள இவரைச்சந்தியுங்கள். அல்லது இலவச விபரங்களுக்கு எழுதுங்கள். ஞாயிற்றுக் கிழமைகளில் நேரில் சந்திக்கலாம்.

விலாசம்:-

கவர்மெண்ட் ரெஜிஸ்டர் மாந்திரிக வைத்தியர்

**பி. எம். திசாநாயக்க,**

நாலு தேவாலய பிரதம தர்மகர்த்தா

**அருத எண்ணை காரியாலயம்**

கம்பளை.


## திருமலை தந்த மாமலை மறைந்து விட்டது

### அ. எ. வி. சங்கப் பொதுச் செயலாளர் இரங்கல் அறிக்கை

பட்ட காலே படும், கெட்ட குடியே கெடும் என்பது போல அமரர் கந்தையா அவர்களுடைய மறைவு குறித்து விழிகளில் வழியும் கண்ணீரைத் துடைத்து முடிப்பதற்குள், திருமலை தந்த மாமலை இராஜவரோதயம் அவர்கள் காலனுக்குப் பலியாகி விட்டார் என்ற துயரச் செய்தி எங்களை மறுபடியும் துன்பக் கடலில் தள்ளிவிட்டது.


அரசாங்க எழுதுவினைஞர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. இ. பாலசுப்பிரமணியம், திரு. இராஜவரோதயத்தின் இழப்பை பொட்டிப் பத்திரிகைகளுக்கு விடுத்த இரங்கற் செய்தியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

திருமலையின் முடிசூடா மன்னனாகப் பதினெரு ஆண்டுகள் விளங்கியவர் திரு. இராஜவரோதயம். அது ஒன்றே தமிழ்பேசும் மக்களினது இதய பீடத்தில் அவர் பெற்றிருந்த சிறப்பை விளக்குவதாகும்.

நேர்மை, பண்பாடு, தியாக வாழ்க்கை இவற்றிற்கு இலக்கணமாக விளங்கியவர் திரு. இராஜவரோதயம். எல்லோருடனும் இனிமையாக அளவளாவி தனக்கொரு பகைவன் இல்லை என்று சொல்லுமளவிற்கு வாழ்வாங்கு வாழ்ந்தவர்.

அப்படிப்பட்ட உத்தமரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தாரினது துயரத்திலும் தமிழினத்தினது துயரத்திலும் நாமும் கலந்து கொள்கிறோம்.



மறைந்த தலைவருக்கு தங்கள் இறுதி அஞ்சலியைச் செலுத்த திருமலை நகரசபையை முற்றுகையிட்ட மக்கள் பெருவெள்ளத்தின் ஒரு பகுதி.

படம்: அருணா போட்டோ, திருமலை.

# இராஜவரோதயம் ஒரு புரட்சிவாதி

# இழந்த உரிமை பெற உழைத்தவர் யாருமில்லை

## எமது லட்சியம் தமிழினத்தின் உரிமை காப்பதே

### இ. தொ. கழகக் கூட்டத்தில் செனட்டர் மாணிக்கம்

"மலை நாட்டுப் பகுதியிலே எத்தனையோ தொழிற் சங்கங்கள் கடந்த பல ஆண்டுகளாகச் செயலாற்றி வருகின்றன. ஆனால் எந்தச் சங்கமாவது தோட்டத் தமிழ் மக்களின் இழந்த உரிமைகளை மீட்டுக் கொடுப்பதிலோ, அவர்களது வாழ்க்கைத் தரத்தின் உயர்வுக்காகவோ மொழிக்காகவோ எத்தகைய போராட்டங்களையும் நடத்தவில்லை. சலுகைகள் பெறவுமில்லை. தொழிலாளர் ஆங்கிலேயரின் கீழ் வாழ்ந்த அடிமை வாழ்வை விட மிகவும் கேவலமான நிலையிலேயே இன்றும் வாழ்கின்றனர். தொழிலாளர்களின் சக்தியை அவர்களின் உரிமைக்காகப் பாவிக்காது விட்டமை அவர்களின் வழி காட்டிகளாகச் சென்ற தலைவர்களின் பிழையே"

இவ்வாறு செனட்டர் எம். மாணிக்கம் மஸ்கெலியாவைச் சேர்ந்த லெட்சுமி தோட்டத்தில் இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் சார்பில் நடைபெற்ற தொழிலாளர் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

"தமிழரசுக் கட்சி வகுப்புவாதக் கட்சி என்று இதர கட்சிகளும், சுயநலமிகளும் பொய்ப் பிரசாரம் செய்து வருகின்றனர். இந்நாட்டிலே ஆட்சியாளரின் சூழ்ச்சிகளால் தமிழ் இனம் நசுக்கப்பட்டும், அடிமைப்படுத்தப்பட்டும் வருகின்றது. தமிழ் இனத்தைப் பாதுகாக்கவே தமிழரசுக் கட்சி பல உன்னதமான திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. அதன் ஒவ்வொரு நடவடிக்கையும் மாற்றுக் கட்சியினருக்கு அருவருப்பாக இருக்கலாம். ஆனால் தமிழ் இனத்தைப் பாதுகாப்பதே அதன் தலையாய கடமை. இதனை மறந்து பலர் அது வகுப்புவாதக் கட்சி என்று தூசித்து வருவது வருந்தத் தக்கதாகும்."

ஒரு இனத்தைப் பாதுகாப்பதே ஒரு ஸ்தாபனத்தின் முழு நோக்கமாகும். இனம் அழியாமலிருந்தால் தான் ஸ்தாபனம் வளரும்—மிளிரும். ஆகையால் தான் மொழிவாரியாகவும் இனத்தின் அடிப்படையில் ராஜ்ஜியங்கள் அமைக்க வேண்டும். இந்தியா, ரஷ்யா போன்ற நாடுகளிலெல்லாம், இனவாரியாகவும், மொழிவாரியாகவுமே ராஜ்ஜியங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இலங்கையைப் பொறுத்தமட்டில் அத்தகைய மொழிவாரி ராஜ்ஜியங்கள் அமைக்கப்படாமலிருப்பது மிகவும் கேவலமான ஒரு அரசியலமைப்பேயாகும்.

இன்றைய ஆட்சியாளரின் திட்டம் இந்நாட்டை "தனிச் சிங்களமய" நாடாக்க வேண்டுமென்பதேயாகும். இந்நாட்டில் வாழும் சகல இன மக்களும் ஏகோபித்த சிங்களவர்களாகவும், பௌத்த மதத்தினர்களாகவும், இருக்க வேண்டுமென்பதே அரசாங்கத்தின் பேராசையாகும். ஆனால், அத்தகைய திட்டத்துக்கு தமிழ் இனம் செவி சாய்த்து விடாது என்பதனை ஆட்சியாளர்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

"தமிழினத்தை வாழச் செய்வதே தமிழரசின் புனிதமான திட்டமாகும். அதனை மாசுபடுத்தும் அனைவரும் இனத்துரோகிகளே.

#### பயமுறுத்தல்கள்

"தமிழரசுக் கட்சி அதன் தொழிற்சங்கப் பிரிவை மலைநாட்டிலே ஆரம்பிக்க முன் இன்றைய நிதி மந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன அவர்கள் தமிழரசுக் கட்சியினரைத் தடுத்தார். மலைநாட்டுள் பிரவேசிக்க வேண்டாம். அத்துமீறிப் பிரவேசித்தால், எங்களுடைய பிரேதங்கள் மீதுதான் நடந்து செல்ல வேண்டுமென்றெல்லாம் பயமுறுத்தினார். ஆனால், இன்று நடப்பதென்ன? அவர்களுடைய பயமுறுத்தல்களெல்லாம் புஸ் வாணங்களாக மாறிவிட்டன. தோட்டத் தொழிலாளர்கள் அனைவரும் இனம் காக்க, மொழிகாக்க வீறுகொண்டு விட்டனர் அவர்களை இனி எத்தகையோரும் தடுத்து நிறுத்தவே முடியாது.

கூட்டத்தில் இ. தொ. க. பொருளாளர் திரு. க. சிவானந்தசுந்தரம், இ. தொ. க. மஸ்கெலியா அலுவலகப் பொறுப்பாளர் திரு எஸ். சுவாமிநாதன், அட்டன் பிரமுகர் திரு. எஸ். கெங்கரட்னம், திரு. எஸ். சோமசுந்தரம், திரு. தம்பிரான், திரு. எம். நடராஜன் முதலியோரும் பேசினர்.

கூட்ட இறுதியில் கழகத்தின் சார்பில் தோட்டக் கமிட்டி ஒன்றும் அமைக்கப்பட்டது. நிர்வாகிகள் தெரிவு வருமாறு: தலைவர்: திரு. எம் எம். நடராஜன், உப—தலைவர்: திரு. எஸ். வேலாயுதம், காரியதரிசி: டே. சுலேமான், உப-காரியதரிசி: திரு. த. மாணிக்கம், பொக்கிஷதாரர்: திரு. மா. பெரியசாமி, சந்தா வசூலிப்பவர்கள்: திரு. பெருமாள், திரு. மு. சடையாண்டி.

#### குழு உறுப்பினர்கள்

திருவாளர்கள்: வி. ஆறுமுகம், செ. சுப்பிரமணியம், நாராயணசாமி, வெ. தம்பிரான், சி. சீனி, பெ. ராசமாணிக்கம்.

#### வாலிப முன்னணி

திருவாளர்கள் தேவன்பு, க. வேலு, செல்லையா, தர்மலிங்கம் பெ. தர்மலிங்கம், மாணிக்கம், சுப்பையா, பெருமாள், ராசமாணிக்கம், மருதை, சாமிநாதன், சுப்ரமண்யம் வைத்திலிங்கம், தங்கச்சி, பழனியப்பன், காளியப்பன், ராமர், சுப்பிரமண்யம்.

#### இலங்கைத் தொழிலாளர் கழகம்

##### பால்காமம் தோட்டக் குழு உத்தியோகத்தர்கள்

தலைவர்: திரு. வே. நாகமுத்து, துணைத் தலைவர் திரு. நா. சுப்பிரமணியம், செயலாளர்: திரு. எஸ். எம். சுப்பையா, துணைச் செயலாளர் திரு. பி. எஸ். கே. சாமிப்பிள்ளை, பொருளாளர்: எம். பி. மருதமுத்து, சந்தா வசூலிப்பவர்: திரு. எம். கே. குழந்தைவேல்.

#### குழு உறுப்பினர்கள்

திவாளர்கள்: எஸ். முத்துவீரன், வி. பெருமாள், எம். டி. செல்லையா, ஏ. எஸ். ஆண்டு, கே. சங்கிலி, ஏ. பிச்சை, எம். ஏ. கோவிந்தன், எம். எம். பழனியாண்டி, பி. எஸ். சுப்பிரமணியன்.

#### வாலிப முன்னணி

திருவாளர்கள்: எஸ். கோவிந்தராஜ், வி. எம். முத்துசாமி, கே. சிவலிங்கம், எம். இராமலிங்கம், எஸ். மருதை, ஏ. சிவலிங்கம், பி. எஸ். சே. அண்ணாமலை, ஈ. எஸ். சிவனு, எஸ். கே. கருப்பன், பி. கே. சின்னதம்பி, பி. இராமசாமி.

**தமிழ் விழா**

மட்டக்களப்பு தமிழ் விழா பற்றிய நமது நிருபரின் விமர்சனம் அடுத்த வாரம் இடம் பெறும்.

# மலைநாடு

### மறைந்தும்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

துணைக்குக் கூட்டிச் சென்றாரா?

'நான் உண்டு என் குடும்பம் உண்டு' என்று நீங்கள் வாழ்ந்து விட்டிருந்தால் வேதனையும்—வாதனையும் வீட்டோடு நின்று இருக்குமே!

ஆனால் நீங்களோ தமிழர் வாழ்வு — தமிழர் விடுதலை என்று உயிரைப் பணயம் வைத்து தியாகத் தீயில் குளித்தபடியால் இன்று முழுத் தமிழினமே சோகக் கடலில் மூழ்கி விட்டதே!

யாருக்குக் கிடைக்கும் இந்தப் பெரும் சிறப்பு? பெருவாழ்வு?

எல்லோருக்கும் கிடைக்காத பெரு நிதியம் உங்களுக்குக் கிடைத்து விட்டது!

காற்றுள்ளவும் கடலுள்ளளவும் உங்கள் பெயர் தமிழ் மக்களது உள்ளங்களில் நீடு வாழும்!

## பிரதிநிதிகள் சபையில் இ. தொ. கழகத் தலைவர் இரங்கல் உரை

"இச் சபை ஒரு அருமையான பாராளுமன்றத்தவரை, நல்ல, நேர்மையான சேவையாளரை இழந்துள்ளது. இந்நாடு தனது பெரும் மகன் ஒருவனை இழந்து விட்டது. எமது கட்சி, துணிவும் திறமையுமுள்ள தோழனை இழந்துவிட்டது."

இவ்வாறு, திருக்கோணமலைப் பாராளுமன்றப் பிரதிநிதி திரு. ந. இ. இராஜவரோதயத்தின் மறைவையொட்டி, சனப்பிரதிநிதிகள் சபையில் பேசுகையில் நல்லூர்த் தொகுதிப் பிரதிநிதியும், இ. தொ. கழகத் தலைவருமான டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் குறிப்பிட்டார்.


அவர் மேலும் தமது பேச்சில் கூறியதாவது: திரு. இராஜவரோதயம், எமது கட்சியின் அக்கிராசனராக மூன்று வருடங்கள் 1955 தொடக்கம் 1958 வரை கடமையாற்றியவர். திருக்கோணமலைத் தொகுதியில் தேர்தலுக்கு நின்று, தொடர்ந்து நான்கு முறை 1956, 1956, 1960ல் இரு தடவை—அவர் வெற்றியீட்டினார், மிகப் பெரும்பான்மை வாக்குகளால். வேறு எதற்குமன்றி, அவருடைய குணத்துக்காகவே அவரைத் திருக்கோணமலையில் எல்லோரும் மதித்தனர்; விரும்பினர்.

கட்டுப்பாடான, அமைதியான முறையில் வாழும் நோக்குக் கொண்ட அவரை உசுப்புவதென்றால், அது ஒரு பூகம்பத்தால்தான் முடியுமென்று கூடச் சில சமயம் நாம் யோசித்ததுண்டு. ஆனால், அவர் ஆறுதலான மனிதரென்றாலும், தமது கடமையில் கண்ணுங் கருத்துமாக உழைப்பவர்.

பலருக்கும், திரு. இராஜவரோதயம் பழமைவாதியாகத் தோன்றியிருக்கலாம். ஆனால், சில விஷயங்களில் அவர் ஓர் புரட்சிவாதியாக நடந்து கொண்டார். தமக்குச் சொந்தமான ஒரு கோவிலை அவர் சாதி, மத பேதமின்றி எல்லோருக்கும் திறந்துவிட்டார். அப்படித் திறக்கப்பட்ட முதற் கோவில் இலங்கையில் அதுவேயாகும். எல்லோருக்கும் சம உரிமைகள் அளிக்கப்பட வேண்டுமென்றும், அப்படி உரிமைகள் அளிக்க மறுப்பவர்களுக்கெதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்றும் ஓர் தனி அங்கத்தவர் பிரேரணையை அவரே பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தவராவர்.

தமிழ் பேசும் மக்களின் பக்திக்குப் பாத்திரமான, முது பெரும் கோவிலான கோணேஸ்வரர் கோவிலைப் புனருத்தாரணம் செய்வது, திரு. இராஜவரோதயத்தின் மிக நெருங்கிய இலட்சியங்களில் ஒன்றாகும். அவர் அதில் அதிக சிரத்தை காட்டியதுடன், புனருத்தாரணம் செய்வதில் ஈடுபடவும் செய்தார். அக்கோவிலைச் சுற்றியுள்ள ஓர் சிறிய இடம், புனித இடமாகப் பிரகடனப் படுத்தப் பட வேண்டுமென்பதே அவருடைய ஒரே அவா.

(13-ம் பக்கம் பார்க்க)


ராஜபீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும் எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்

ராஜ பீடி ஸ்பெஷல் ஒன்றேதான்

புகைத்து பலனடையுங்கள்

ராஜாபீடி கம்பனி

கொழும்பு-14.

# புதுவாழ்வு காணப் போர்ப் பரணி

## பாடிப் புறப்படுங்கள்

## இன்னலை ஏற்போம் இரத்த தானமும் கொடுப்போம்

## இறுதிப்போர் இதுவே இனியேன் தயக்கம்?

பூங்குன்றன்

அரிமாவின் அசந்த நடையை அதன் தளர்ச்சியாக, பலவீனமாகக் கருதிக் கொண்டு வாலை முறுக்கி விளையாட எண்ணுகின்றவர்கள் யாரானாலும்; பெரும் பேராபத்தைச் சந்தித்துத் தீர வேண்டிய சங்கடத்தில் மாட்டிக் கொண்டவர்களாவார்கள்.

அமைதியாக ஆறுதலாகச் செயல்படும் விடுதலை உணர்வும் அத்தகைய ஒன்றுதான்.

இளைஞர்களின் குருதியில் கொந்தளித்துக் கொண்டிருக்கும் பேரார்வம்—உள்ளத்தில் அழுந்திப் போயிருக்கும் நாட்டுப் பற்று—இதயத்தில் துடித்துக் கொண்டிருக்கும் விடுதலை உணர்ச்சி கட்டுக்கு அடங்காமல் பேரலையெனப் பொங்கி எழுகின்ற பொழுது—எத்தனை வல்லமை படைத்த பேரரசானாலும், அந்தப் புரட்சியில் பெரும் புயலில் தூள் தூளாகிவிடும். இது கடந்த கால விடுதலைப் போராட்ட வரலாறுகள் காட்டும் உண்மை.

ஆதவனே அஸ்தமிக்காத ஆங்கில ஏகாதிபத்தியத்தை ஆட்டிப் படைத்து பிறந்த நாட்டுக்குப் புதுவாழ்வு தேடிக் கொடுத்தார் அண்ணல் காந்தியடிகள்.

அதே ஏகாதிபத்தியத்தின் வெறிப் பிடியில் அடங்கிக் கிடந்த அயர் மக்கள் தனித் தன்மை பெற்றுப் பெரு வாழ்வு வாழ்கிறார்கள் இன்று.

ஏன், அண்மைக் காலத்தில் நடைபெற்ற அல்ஜீரிய மக்களின் எழுச்சி எதைக் காட்டுகிறது?

இவையனைத்தையும் இந்த நாட்டின் ஆட்சி பீடத்தில் அமர்ந்திருப்போர் தெரிந்திருக்கிறார்கள்— அறிந்திருக்கிறார்கள் என்றாலும் ஆட்சி பீடத்தின் உச்சியில் உள்ளோம் என்ற மமதை உண்மை நிலையைத் தெரிந்திருந்தும்—புரிந்திருந்தும் செயல்பட மறுக்கிறது.

ஆதிக்க அதிகாரத்தின் துணை கொண்டு அடுத்த ஆண்டு ஆரம்பத்துடன் எல்லாத் துறைகளிலும், எல்லா நிலையங்களிலும் சிங்களத்தை அமுல் நடத்துவதென்று சிங்கள வெறிபிடித்த அரசு முடிவு செய்துள்ளது. இந்த மொழித் திணிப்பை எதிர்த்து தீவிரமாக அறப் போர் நடவடிக்கையில் ஈடுபடுவதென்று கடந்த மாதம் கூடிய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் காரிய சபை முடிவு செய்துள்ளது.

சிங்களத் திணிப்பை எதிர்த்து நடத்தும் அறப் போராட்டத்திற்கான அறப் போர்க்களங்களைக் காணவும் பாசறைகள் அமைக்கவும் அறப்போர் வீரர்களின் பட்டியலைத் திரட்டவும் அறப் போராட்டத்திற்கான ஆயத்தங்கள் அத்தனையையும் செய்யவும் தமிழரசுக் கட்சி முனைந்து விட்டது.

தமிழரசுக் கட்சி தொடுக்க இருப்பது 'போர்' அல்ல, 'அறப் போரா'கும். போர் என்பதற்கும் அறப் போர் என்பதற்கும் நிறைய வேறுபாடு உண்டு.

அறப்போர் என்பது ஒரு அரசின் கீழ் வாழ்கின்ற மக்கள் வன்முறையால் அரசை எதிர்க்காமல், கடமையுணர்ச்சியோடு தாம் கொண்ட கொள்கைகளை அறவழியில் நிலைநாட்ட முற்படும்போது, ஆட்சியாளரால் கட்டவிழ்த்துவிடப்படும் அடக்குமுறைகளுக்கு இலக்காகி, இன்னல்களையும் இழப்புக்களையும் சிரித்த முகத்துடன் ஏற்றுத் தம்மைத் தாமே வருத்திக் கொள்கிற நிலைமைக்கு உள்ளாகி, உலக நாடுகளினது அன்பையும் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெற்று அதன் மூலம் தம் கொள்கைக்கு—நோக்கத்திற்கு வெற்றி தேடிக் கொள்ள முயல்வதாகும். இது தமிழ் பேசும் மக்களுக்குப் புதியதுமல்ல, இன்றைய ஆட்சியாளருக்குத் தெரியாததுமல்ல. இப்படிப்பட்டதொரு போராட்டத்தைப் பல புதிய அம்சங்களுடன் நடத்துவதற்கான முயற்சிகளை இலங்கைத் தமிழரசுக் கட்சி திட்டமிட்டு வருகிறது.

இத்தகைய முடிவொன்றை இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள் என்பதையும்—இது தவிர்க்க முடியாத ஒன்று என்பதையும் கடந்த வாரம் நாட்டின் முதல்வருக்குத் திட்டவட்டமாகத் தெரியப்படுத்தியுள்ளார் தமிழரசுத் தந்தை அவர்கள்.

தமிழ் பேசும் இனம் இந்த நாட்டில் நேற்று இன்று வந்து குடியேறிய இனம் அல்ல; தொன்றுதொட்டு இந்நாட்டில் தனியினமாகத் தனித்தன்மை பேணி வாழ்ந்து வந்திருக்கிறது.

ஆனால் அந்நிய ஆட்சியில் இருந்து விடுபட்ட பின்னர் படிப்படியாக நாம் நசுக்கப்பட்டு வந்துள்ளோம். இன்று நிலைமை முன் எப்போதையும் விட மோசமாகி விட்டது.

இரண்டாம் தரப்பிரஜை என்ற நிலை மாறி—வாழ முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுவருவதை உணர முடிகிறது. சொந்தப் பிரதேசத்திலேயே அடிமைகளாகவாழ வேண்டிய நிலைமைக்கு—ஆட்சியாளரால் தள்ளப்பட்டுள்ளோம்.

எத்துறையிலும்— எந்நிலையிலும் சிங்களம். சிங்களம் இன்றிச் சீவனம் செய்ய முடியாத நிலை உருவாகி வருகிறது. இல்லை-உருவாகி விட்டது. இந்நிலையைப் பார்த்துக் கொண்டு தமிழ் பேசும் மக்கள் கண்மூடி மௌனியாக வாழ்வதா?

அரசாங்கத்தில் ஊழியம் செய்யும் தமிழ் பேசும் ஊழியர்கள் ஆயிரக்கணக்கில் வெளியேற வேண்டிய நிலைமை உருவாகி விட்டது. சிங்களம் கற்றாலும் சீரான வாழ்வு கிடையாது என்பது உறுதியாகி விட்டது.

ஆட்சியாளர் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையும் தமிழ் மொழிக்கு எதிரானது மட்டுமல்ல, தமிழ் பேசும் இனத்தை ஒழித்துக் கட்டுவதற்கு எடுக்கப்படும் இனவொழிப்பு நடவடிக்கையுமாகும்.

குடியுரிமையும் வாக்குரிமையும் மொழியுரிமையும் பறிக்கப்பட்ட மக்கள் இன்று இலங்கையர் ம··ம் என்ற சிங்கள மயத்தின் மூலம் தொழில் ·ரிமையும் இழக்கிறார்கள். தொழில் உரிமை இன்றேல் நமது நிலையென்ன? வாழ முடியுமா?

பல வழிவகைகளைக் கொண்டு இனவொழிப்பு நடவடிக்கையில் ஓரளவு வெற்றி கண்ட ஆளவந்தார் இன்று பட்டினி போட்டு சாகடித்து தமிழ் பேசும் மக்களை ஒழித்துக் கட்டுவதென்ற நிலைக்கு வந்துள்ளார்கள்.

இன்னும் தமிழ் பேசும் இனம் கைகட்டிக் கொண்டிருக்க முடியுமா? நாம் வாழவிருந்தால் நமது நிலையென்ன? ஆணவத்துடன் அல்ல, அடிமை நிலையிலும் வாழ முடியாத நிலை.

காலம் மாறாதா? கவலைகள் தீராதா? என்று காத்திருக்க முடியாது. இன்று நமக்கு முன் உள்ள ஒரேயொரு வழி போராட்டம்: அறப் போராட்டம்.

இது நமக்குப் புதியதல்ல; அடக்கு முறையைக் கண்டு அஞ்சும் தொடைநடுங்கிகள் அல்ல நம்மவர்கள்.

சிங்களத் திணிப்பை எதிர்த்து முறியடிப்பதில் நமது இயக்கத்திற்கு வரலாற்றுச் சிறப்புமிக்க பாரம்பரியம் உண்டு. இது உண்மை, வெறும் புகழ்ச்சியல்ல. உச்சிமீது வான் இடிந்துவிழுகின்ற போதும் அச்சமின்றி ஆர்ப்பரித்து எழும் ஆண்மைச் சிங்கத்தின் கோட்டம் இது.

எனவே இன்று தமிழ் பேசும் மக்களை எதிர்நோக்கியுள்ள ஆபத்தைக் களைந்தெறிய, களம் நோக்கி வாரீர் வாரீர் என்று அழைக்கிறோம்.

நடக்க விருப்பது வெறும் மொழிப் போராட்டம் மட்டுமல்ல, தமிழினத்தையே காக்கும் போராட்டம். நீண்ட நெடுங்காலமாக உச்சி வானிடிக்க கொடி கட்டி ஆண்ட முது பெருமிதத்தின் பண்புகாக்கும் போராட்டம். சீரியதொரு வரலாறு காக்கும் போராட்டம். தனித் தன்மை பேணும் போராட்டம்.

இன்னும் ஓரிரு திங்களில் நமக்கு அழைப்புக் காத்திருக்கிறது. நாம் அணி அணியாகச் சென்று களத்தை மட்டுமல்ல சிறைக் கூடத்தையே நிரப்ப வேண்டும்.

கடந்த போராட்டங்களில் எதைச் செய்தோமோ அதை விடப் பன்மடங்கு உறுதியோடும் உணர்ச்சியோடும் இம்முறை செயல்பட வேண்டும்.


இறுதிப் போர் இதுவே என்ற நிலை உருவாகி விட்டது.

இந்தப் போராட்டம் தமிழர்களைத் தமிழர்களாக வாழ்விக்கும் போராட்டம்.

இந்தப் போராட்டம் இல்லை என்றால் தமிழ் பேசும் மக்களே இல்லை.

எனவே தந்தை அவர்களின் அழைப்பை ஏற்று வெறி கொண்ட ஆட்சியாளரின் திமிரை உடைத்தெறிந்து, நம்மவர்க்கு நிரந்தரமான வாழ்வும் வாழ்விடமும் சமைப்போம். வாரீர்! வாரீர்!

## இனிக் காண்பது எப்போ.......!



சீறிவரும் சிங்களத்தின் கொட்டம் அடக்க தீந்தமிழர் தலைநகரில் வெள்ளம் போல் தமிழர் கூடியிருப்பதைக் கண்டு பெருமிதப்பட்ட இரு உள்ளங்களான திருமலை தந்த தீரனை, செயல் வீரனை; மூதூர் தந்த முதல்வனை, கொடிய கூற்றுவன் என்ற உருவில் இந்நாட்டின் ஆதிக்க வெறி பிடித்த ஆளவந்தாரின் அடக்குமுறை விழுங்கி ஏப்பம் விட்டு விட்டது.

அன்புத் தலைவர்களின் அரவணைப்பில் வாழ்ந்த, திருமலை மாவட்ட தீந்தமிழ் வீரர்களின் தோள் புடைக்கும் இக் காட்சியை இனிக் காண்பது எப்போ......!


## உங்கள் வியாதி எதுவானாலும் தீர்த்துத் தருகிறோம்



நரம்பு பலவீனம், பலக் குறைவு, குண்டிக்காய், மூத்திரப்பை கோளாறுகள், அசுத்த இரத்தத்தால் ஏற்படும் பண்புறைகள், பற்றுகள், க்ஷயரோகம், இளைப்பு, இருமல், வலிப்பு, தீராத வயிற்று வலி, வாதம், வயிற்றுக் கோளாறுகள், பித்த காமாலை, சோகை, பாண்டு, அண்டவாய்வு, இரத்த மூலம், சீழ்மூலம், வெளி மூலம், பெண்களுக்கு ஏற்படும் சூதக கோளாறுகள், கெர்ப்பக் கோளாறுகள் இன்னும் பல டாக்டர்களால் கைவிடப்பட்ட நாட்பட்ட வியாதிகளினின்று பூரண குணமடைவதற்கு உடனே காலதாமதமின்றி புகழ்வாய்ந்த ஆயுர்வேத டாக்டர் T. H. மதுரநாயகம் வைத்தியராஜ் MD. MS. (H) Cal. அவர்களைக் கலந்தாலோசியுங்கள்.

63 வருட பரம்பரை வைத்திய நிபுணர்.

### ஞானசுந்தர வைத்தியசாலை,

187, செட்டியார் தெரு, கொழும்பு-11.

# சமரச முயற்சியில்: சாதக பாதக நிகழ்ச்சிகள்

மூன்றும் பாகம்

## பேச்சு வார்த்தைக்கு முன்னோடியாக தலைவர்கள் விடுதலை

### அரங்கம் 1

பிரித்தானியப் பிரதமர் லொயிட் ஜோர்ஜைச் சந்தித்துப் பேச்சு வார்த்தைகள் நடாத்துவதற்கு முன்னர் தன் நாட்டிலுள்ள சிறுபான்மையினரின் பிரதிநிதிகளான இணையாளர்களைச் சந்திக்கக் குடியதிபதி ஏமன் டி வேலரா முடிவு செய்தார். அதன்படி வட அயர்நாட்டின் பிரதமராக ஆங்கிலேயரால் நியமிக்கப்பட்ட சேர் ஜேம்ஸ் கிறெயிக்கையும் இன்னும் நான்கு புரட்டஸ்தாந்துத் தலைவர்களையும் தன்னைச் சந்திக்கும்படி அழைப்பு விடுத்தார். கிறெயிக் அழைப்பை நிராகரித்தார்; மற்றவர்கள் ஏற்றுக கொண்டு குடியதிபதி டி வேலராவைச் சந்தித்தனர்.

## ஆளவந்தார் சபையில் அதிகார ஒலி

இந்தச் சந்திப்புக்காக ஆதர் கிரிபித், றொபட் பார்ட்டன், ஜன் மக்னீல் முதலிய தலைவர்கள் சிறைச்சாலைகளிலிருந்து விடுதலை செய்யப்பட்டனர். எனினும் 'தோள் அயரின்' உறுப்பினர்கள் 34 பேர் இன்னும் கைதிகளாகவே இருந்தனர்.

பேச்சுவார்த்தைகளுக்கு முன்னோடியாகப் பிரித்தானிய இராணுவத்திற்கும் அயர் குடியரசு இராணுவத்திற்கும் இடையில் ஒரு யுத்த நிறுத்தம் கைச்சாத்திடப்பட்டு 11-7-1921 திங்கட்கிழமை அமுலுக்கு வந்தது. இந்த யுத்த நிறுத்தத்தை விரும்பாத இணையாளர்களின் ஆதரவாளர்கள் பெல்பஸ்றறில் வாழ்ந்த கத்தோலிக்கர்களை யூலை 10ம் திகதியே மிருகத்தனமாகத் தாக்கிக் கொடுமைப்படுத்தினர். அதன் காரணமாக அந்நாள் குருதி ஞாயிறு என்று அழைக்கப்படலாயிற்று.

யூலை 14ம் திகதி நடைபெறவிருந்த பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதற்காகக் குடியதிபதி டி வேலரா, ஒஸ்ரின் ஸ்ரக், ஆதர் கிரிபித், றொபட் பார்ட்டன், பிளங்கே பிரபு, ஏஸ்கின் சிட்டேஸ் ஆகியோர் 12ம் திகதியே லண்டன் போய்ச் சேர்ந்தனர். 14ம் திகதி குடியதிபதி டி வேலரா பிரித்தானியப் பிரதமர் லொயிட் ஜோர்ஜைத் தனிமையாகக் கண்டார். இருவரும் அரசியல் சம்பந்தமற்ற விடயங்களை மூன்று மணித்தியாலங்களாகப் பேசியபின் அடுத்த கூட்டத்தை 21-7-1921க்குப் பின்போட்டனர்.

டி வேலராவைச் சந்தித்தபின் லொயிட் ஜோர்ஜ், சேர் ஜேம்ஸ் கிறெயிக்குடன் பேச்சுவார்த்தைகள் நடாத்தினார். அந்தப் பேச்சுவார்த்தைகளின் பின்னர், அள்ஸ்ரர் மாகாணத்திலுள்ள 6 மாவட்டங்களைப் பற்றிப் பேச டி வேலராவுக்கு அருகதையில்லை என்ற பாணியில் கிறெயிக் பத்திரிகைகளுக்கு அறிக்கை விட்டார். இந்த அறிக்கையை ஆட்சேபித்து உடனே டி வேலரா லொயிட் ஜோர்ஜுக்குக் கடிதம் எழுதினார். கிறெயிக்கின் அறிக்கைக்கும் தனக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை என்று பிரித்தானியப் பிரதமர் பதிலளித்தார்.

அயர்நாட்டுக்கும் பெரிய பிரித்தானியாவுக்கும் இடையில் உள்ள வேற்றுமைகளை அகற்றும் நோக்கத்துடன் பிரித்தானிய அரசாங்கம் உத்தேசித்திருக்கும் திட்டங்களை லொயிட் ஜோர்ஜ் 20-7-1921ல் குடியதிபதி டி வேலராவுக்கு அனுப்பினர்.

'பிரித்தானியப் பேரரசில் கனடாவும் தென் ஆபிரிக்காவும் ஒளஸ்திரேலியாவும் பெற்றிருக்கும் ஆநிலப் பதம் அயர்நாட்டுக்கு அளிக்கப்படும். அயர்நாட்டின் தரப்படை கட்டுப்படுத்தப்படும்; கடற்படையும் விமானப் படையும் பிரித்தானியாவின் கையில் இருக்கும். பேரரசு இராணுவத்திற்கு அயர்நாட்டில் ஆள் திரட்டும் உரிமை பிரித்தானிய அரசாங்கத்திற்கு இருக்கும். அயர்நாட்டுக்கும் பிரித்தானியாவுக்கும் இடையில் தடையெதுவுமற்ற வர்த்தகம் நடைபெறும். அயர்நாடு என்று குறிக்கப்படுவது அள்ஸ்ரர் மாகாணத்திலுள்ள 6 மாவட்டங்களைத் தவிர்ந்த பகுதியே. அந்த 6 மாவட்டங்களும் வட அயர்நாடு என்ற பெயரில் தனித்து இயங்கும்.'

இதுதான் உத்தேசத் திட்டத்தின் சாராம்சம். இந்தத் திட்டம் 'அயர்நாட்டை இரண்டு துண்டுகளாக்குகின்றது என்ற ஒரே காரணத்துக்காக அதை நிச்சயமாக அயர் மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்று டி வேலரா லொயிட் ஜோர்ஜுக்கு எடுத்துக் கூறினர். எனினும் தான் தனது தோழர்களுடன் பேசித் திட்டமான முடிவை மிகவும் தெளிவாக அனுப்புவதாகக் கூறி டி வேலரா அயர்நாட்டுக்குப் புறப்பட்டார்.

## இரத்த வெள்ளம் அளித்த ஐரிஷ் விடுதலை

அயர் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ளாத திட்டத்தை அயர் குடியரசு மந்திரிசபை ஒருமனமாக நிராகரித்தது. அயர்நாடு பிரித்தானிய அமைப்பிலிருந்து பிரிவதே சமாதானத்தை ஏற்படுத்தக் கூடிய ஒரே வழியென டி வேலரா பிரதமர் லொயிட் ஜோர்ஜுக்கு எழுதினர். பிரிந்தபின் இரு சுதந்திர நாடுகளுக்குமிடையில் ஒரு சமாதான உடன்படிக்கையை ஏற்படுத்த அயர்நாடு தயாராக இருக்கும் எனவும் அவர் எழுதினர்.

குடியதிபதி டி வேலராவின் பதிலைப் பெற்ற பிரித்தானியப் பிரதமர் லொயிட் ஜோர்ஜ் திரும்பவும் 13-8-1921ல் டி வேலராவுக்கு ஒரு கடிதம் எழுதினர். அதில், அயர்நாடு பிரித்தானியாவிலிருந்து பிரிந்து போவதை ஏற்க முடியாதெனவும் பல நூற்றாண்டுகளாக ஆங்கில ஆட்சியின் கீழிருந்த அயர்நாடு அவ்வாறு செல்ல உரிமையற்றது எனவும் வட அயர்நாடு ஏனைய பகுதிகளிலிருந்து பிரிந்துதான் இருக்க வேண்டும் எனவும் கூறினர்.

குடியதிபதி டி வேலராவுக்கும் பிரதமர் லொயிட் ஜோர்ஜுக்கும் இடையில் நடைபெற்ற கடிதப்போக்குவரத்துகளின் விபரங்கள் 15-8-1921ல் பத்திரிகைகளில் வெளியாயின.

### அரங்கம் 2

ஆங்கில அரசாங்கத்தின் திட்டங்களை ஆராய்வதற்கும் குடியதிபதியைத் திரும்பவும் தெரிவுசெய்வதற்காகவும் மீண்டும் அமைச்சர்களைத் தெரிவு செய்வதற்கா காகவும் 16-8-1921ல் அயர் மன்றம் கூடியது. இதற்கு முன்னோடியாகத் தளபதி மக்கியனைத் தவிர்ந்த ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆங்கில ஆட்சியினரால் சிறைகளிலிருந்து விடுதலை செய்யப்பட்டனர். கொலைக் குற்றத்திற்காக அடைக்கப்பட்ட தளபதி மக்கியன் விடுதலை செய்யப்படாவிட்டால் ஆங்கில ஆட்சியினருடன் மீண்டும் பேச்சு வார்த்தை நடாத்தத் தாம் தயாராக இல்லை என்று டி வேலரா முழங்கினர். பேச்சு மூச்சின்றித் தளபதி மக்கியன் விடுதலையானார்!

'கோமகன்'
'மாமல்லன்'

16ம் திகதி தொடங்கிய கூட்டத் தொடரில் 'தோள் அயரின்,' லொயிட் ஜோர்ஜின் திட்டங்களை ஒருமனமாக நிராகரித்தது. இச் செய்தி பிரித்தானியாவை அடைந்ததும் மக்கள் சபையிலும் பிரபுக்கள் சபையிலும் அயர் நாட்டுக்கு எதிரான உரைகள் நிகழ்த்தப்பட்டன. உடனடியாக ஆங்கில அரசு போரர் முரசு கொட்டவேண்டும் என்று ஆங்கிலப் பத்திரிகைகள் ஆங்கில ஆட்சிக்குப் புத்திமதி கூறின! ஆனால் இவற்றைப் பொருட்படுத்தாத வகையில் குடியதிபதி டி வேலரா அயர் மன்றத்தின் முடிவை 24-8-1921ல் பிரித்தானியப் பிரதமருக்கு அறிவித்தார். அவர் தனது கடிதத்தில் அயர்நாட்டின் மீது போர் பிரகடனப்படுத்தப்பட்டால் அதை எதிர்ப்பதற்காக ஒவ்வோர் அயர் மகனும் ஒவ்வோர் அயர் மகளும் போராடியே தீர்வார்கள் என்று குறிப்பிட்டதுடன் ஆளப்படுபவர்களின் இசைவோடுதான் அரசுகள் அமைகின்றன என்ற தத்துவத்தின் அடிப்படையில் அயர்நாட்டின் பிரதிநிதிகள் ஆங்கில அதிகாரிகளைச் சந்திக்கத் தயாராகவுள்ளதாகவும் கூறியிருந்தார்.

அயர் மன்றம் குடியதிபதியையும் அமைச்சரவையையும் தெரிவு செய்வதில் ஈடுபட்டது. தொண்டர் படையில் ஒரு படைஞனாகத் தனது அரசியல் வாழ்வை ஆரம்பித்து இப்பொழுது பழுத்த அரசியலறிஞனாகத் திகழும் ஏமன் டி வேலரா மீண்டும் போட்டியின்றிக் குடியதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். இதுகால வரையும் இயங்கி வந்த அமைச்சர்கள் மீண்டும் தெரிவு செய்யப்பட்டனர்.

## தலைவர்கள் பிடிவாதம் தளபதி விடுதலை

குடியதிபதி டி வேலராவின் கடிதத்திற்குப் பதிலிறுக்கும் முகமாக 26-8-1921ல் லொயிட் ஜோர்ஜ் ஒரு கடிதம் எழுதினர். அதில், முன்னைய அயர் தலைவர்களான கிராட்டன், பாணல், றெட்மண்ட், டானியல் ஓகொணல், தோமஸ் டேவிஸ் ஆகியோர் கோரியவற்றிலும் அதிகப்படியான அதிகாரங்களை ஆங்கில அரசு தற்பொழுது அளிக்க முன்வந்துள்ளதாகவும் ஒரே மன்னரின் கீழுள்ள பிரித்தானியப் பொதுநலவமைப்பு நாடுகளுள் ஒன்றுகத்தான் அயர்நாடு இருக்க முடியும் எனவும் கூறினர். இந்த அடிப்படையை அயர் தலைவர்கள் ஏற்காவிட்டால் மீண்டும் யுத்தம்தான் ஏற்படும் எனவும் பிரதமர் பயமுறுத்தினர்.

இந்தக் கடிதத்திற்குக் குடியதிபதி அமைச்சரவையைக் கலந்தாலோசித்த பின்பு 30-8-1921ல் மறுமொழி எழுதினர். அவரது பதிலில், அயர் மக்கள் ஒரு தேசஇனம் எனவும் அவர்கள் தமது சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஒரு குடியரசை நிறுவியுள்ளார்களெனவும் பிரித்தானியாவோடு அயர்நாடு அயர் மக்களின் விருப்பத்திற்கெதிராகவே இணைந்துள்ளதாகவும் அயர் மக்களுக்கு எதிராகப் போர் பிரகடனப் படுத்தப்பட்டால் முன்னைய தலைமுறைகள் எதிர்த்துப் போராடியது போல் தற்போதைய தலைமுறையும் போராடும் எனவும் வலியுறுத்தினர். ஆளப்படுபவர்களின் இசைவோடுதான் அரசுகள் அமைகின்றன என்ற தத்துவத்தின் அடிப்படையில் அயர் பிரதிநிதிகள் ஆங்கில ஆட்சியினரைச் சந்திக்கத் தயார் என மீண்டும் கூறினர்.

பிரச்சினை இழுபட்டுக் கொண்டிருப்பதை விரும்பாத பிரித்தானியப்பிரதமர், ஆங்கிலேயரின் பெருந்தன்மையை மீண்டும் புகழ்ந்து, பிரித்தானியப் பேரரசு எனப் பெயர் பெற்ற நாடுகள் சமுதாயத்துடன் அயர்நாட்டின் கூட்டு அயர் தேசிய மனவெழுச்சியை எவ்வாறு தணிக்கும் என்று ஆராய்வதற்காக அயர் பிரதிநிதிகள் ஆங்கில அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தைகள் நடாத்த உடன்படுவார்களா எனக் கேட்டும் அவ்வாறு உடன்படுவார்களானால் 20-9-1921ல் அயர் அரசாதிகாரிகள் தம்மைச் சந்திக்க வேண்டும் எனவும் எழுதினர்.

## கூறுபோட்டு குதர்க்கம் விளைவிக்க ஆட்சியாளர் முயற்சி

தமது கொள்கைகளைக் கைவிடாது பேச்சுவார்த்தைகளுக்குச் செல்லக்கூடிய வசதிகள் பிரதமரின் கடிதத்தில் இருப்பதைக் கண்ட டி வேலரா, அயர்நாடு கண்டிதமாகத் தனது சுதந்திரத்தைப் பிரகடனப்படுத்தியிருக்கின்றதெனக் கூறி, பிரித்தானியப் பேரரசு எனப் பெயர் பெற்ற நாடுகள் சமுதாயத்துடன் அயர் நாட்டின் கூட்டு அயர் தேசிய மனவெழுச்சியை எவ்வாறு தணிக்கும் என்பதை ஆராயத் தாம் தயாராக இருப்பதாகவும் பேச்சு வார்த்தைகளுக்காக அயர் மன்றம் உடனடியாகப் பேராளர்களை நியமிக்கப் போவதாகவும் எழுதி லொயிட் ஜோர்ஜுக்கு அனுப்பினர்.

அயர்நாடு கண்டிதமாகத் தனது சுதந்திரத்தைப் பிரகடனப்படுத்தியிருக்கின்றது என்னும் வாக்கியத்தைக் கடிதத்திலிருந்து நீக்கினால்தான் பேச்சுவார்த்தைக்கு வருவதைத் தாம் ஏற்க முடியும் என்று லொயிட் ஜோர்ஜ் உடனடியாகக் குடியதிபதி டி வேலராவுக்கு அறிவித்தார். ஆனால் அவ்வாறு செய்வதற்கு மறுத்ததோடல்லாமல் டி வேலரா, தனது கடிதத்தின் முழு விபரத்தையும் பத்திரிகைகளுக்குக் கொடுத்தார்.

(வளரும்)

## சமய பாடத் தேர்தல்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரால் ஆண்டுதோறும நடத்தப்படும் சமயபாடப் பரீட்சை வருகிற மார்கழி மாத நடுப்பகுதியில் நடத்தப்படும்.

தேவாரம், உபந்நியாசம், புராணபடனம் ஆகிய மூன்றும் தேர்தலுக்குரிய பாடங்களாகும். தேர்தல் மேற்பிரிவு, மத்திய பிரிவு, கீழ்ப் பிரிவு, ஆரம்பப் பிரிவு என்ற பாகுபாடுகளையுடையது. ஒவ்வொரு பிரிவுக்கும் மூன்று பரிசில்கள் மேற்படி சபையாதரவில் மார்கழி மாதத்தில் நடைபெறும் அகில இலங்கை சைவ மகாநாட்டில் சித்தி பெறும் பிள்ளைகளுக்கு வழங்கப்படும். பெண் பிள்ளைகளுக்கும், ஆண் பிள்ளைகளுக்கும் வெவ்வேறு பரீட்சைகள் வைத்துப் பரிசில்கள் வழங்கப்படும். பிரவேசப்பணம்:- ஆரம்பப் பிரிவு -/50 சதம், கீழ்ப் பிரிவு -/75 சதம், மத்திய பிரிவு ரூபா 1-00, மேற் பிரிவு ரூபா 1-25.

தேர்தல்களிற் பங்குபற்ற விரும்பும் பிள்ளைகள் தங்கள் பெயரையும், வயதையும் குறித்துத் தலைமையாசிரியருடைய கைச்சாத்துடன் நுழைவுப் பத்திரங்களை 30—9—63க்கு முன் கீழ்க் காணும் விலாசத்துக்கு அனுப்புவீர்களாக: மு. மயில்வாகனம், சமயப் பிரசார அமைச்சர், சைவ பரிபாலன சபை, யாழ்ப்பாணம்.

சுதந்திரன்
SUTANTIRAN

1963 செப்டம்பர் மாதம் 1-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411 சு. பெ 1183

# திருமலை ஜோதி அணைந்தது

தமிழ் பேசும் மக்களுக்கு மற்றோர் அதிர்ச்சி! திருமலை தந்த மாமலை மறைந்து விட்டது. நமது முன்னணித் தலைவர்களில் ஒருவரான திரு. இராஜவரோதயம் அவர்களைத் திடீரெனப் பறி கொடுத்து விட்டோம். எதிர்பாராத பேரிடி இது!

அமரர் கந்தையா அவர்களைப் பிரிந்து கண்ணீர் வற்ற முன்பே இழந்து விட்டோம் திருமலை தந்த தங்கத்தை. ஓர் அதிர்ச்சியிலிருந்து விடுபட முன்பே மற்றோர் அதிர்ச்சியா? சுதந்திரப் போரின் ஒரு தளபதியை இழந்து தவிக்கும் மக்களுக்கு நாம் வேறு என்னதான் ஆறுதல் கூற முடியும். எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்று கூறுவதைத் தவிர.

அமரர் திரு. இராஜவரோதயம் மக்களின் ஒரு புதல்வன். அவர்களின் அன்பையும் ஆதரவையும் அபிமானத்தையும் நன்மதிப்பையும் பெற்றவர். திருமலைச் சீமையிலே கிராம மக்களுக்கெல்லாம் அவர் ஓர் உற்ற நண்பனுகவும் சிறந்த வழிகாட்டியாகவும் பணி புரிந்தவர். ஆகையால்தான் அவரது மறைவை பல்லாயிரக் கணக்கான குடும்பங்கள் தத்தம் சொந்த வீட்டில் நடந்த துக்க சம்பவமாகவே கருதி இன்று கண்ணீர் வடிக்கின்றனர்.

மறைந்த நம் தலைவர் வெறும் வாய்ச் சொல் வீரரல்ல—அன்பும் பண்பும் நிறைந்த செயல் வீரர். போதனையை விட சாதனைதான் அவருக்கு முக்கியம்.

அடக்கம், பெருந்தன்மை, கடவுட் பக்தி, கொள்கைப் பற்று தியாக உணர்ச்சி, நேர்மைத் திறன் முதலிய அருங்குணங்கள் ஒருங்கே அமையப் பெற்ற உத்தம சீலர். அவரது நிதானமான போக்கும் தாராள மனப்பான்மையும் தர்ம சிந்தனையும் மக்களைப் பெரிதும் கவர்ந்தன. மக்களுக்குத் தலைவராகவும், தொண்டராகவுமிருந்து அரும் பணியாற்றியவர்.

சமூகப் பணியும் சமயப் பணியும் அவரது இரு கண்கள். திருமலையில் தீண்டாமைக்குச் சாவுமணி அடித்த சீர்திருத்தச் செம்மல் அவர். தீண்டாமை என்னும் சாபத் தீட்டைச் சமுதாயத்திலிருந்தே துடைத்தெறிய அவர் அயராது உழைத்தார். அவரது உழைப்பின் பயனுகவே தீண்டாமை ஒழிப்பில் திருமலை இன்று யாழ்ப்பாணத்துக்கு வழிகாட்டியாக விளங்குகிறது.

அமரர் இராஜவரோதயம் கூட்டுறவு இயக்க வளர்ச்சியில் பெரிதும் பங்குபற்றினுர். திருமலை பலநோக்கு கூட்டுறவு சங்க சமாஜத்தின் தலைவராகப் பல ஆண்டுகள் பெரும்பணியாற்றினுர்.

அவர் ஓர் உண்மையான சைவத் தொண்டர். மறைந்த கோணேஸ்வரத்தை மீட்டுந் தந்தார். திருக்கோணேஸ்வர ஆலய புனருத்தாரண சபையின் முக்கிய பிரமுகராகச் சிறந்த பணியாற்றி, ஆலய கும்பாபிஷேக வைபவங்கள் சிறப்பாக நிறைவேற பெருந்தொண்டாற்றினுர். கோணேஸர் மலையையும் கோட்டையையும் சைவர்களின் புனித நகராக்கும் முயற்சியில் முன்னின்று உழைத்தார். சுருங்கக் கூறின், சைவத்துக்குப் பெரும் பணியாற்றிய ஒரு சைவாபிமானி அமரர் திரு. இராஜவரோதயம் அவர்கள்.

தமிழ் பேசும் மக்கள் மட்டுமின்றிப் பெருந் தொகையான சிங்கள பௌத்த மக்களும் வந்து அமரர் இராஜவரோதயம் அவர்களுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினுர்களென்றுல், அவர்களுக்கும் சகோதரராகவே வாழ்ந்தார் என்பது புலனுகிறது. தட்சண கைலாசம் என்றழைக்கப்படும் திருமலைப் புண்ணிய பூமியில் சகல மதத்தோராலும் ஒரேமுகமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தலைவர்தான் நமது இராஜவரோதயம் அவர்கள்,

தமிழ் பேசும் இனத்தின் உரிமைகளுக்காக 1952-ம் ஆண்டு தொடக்கம் பாராளுமன்றத்துள் தொடர்ந்து குரல் எழுப்பிய திருமலைத் திலகம், வடக்கையும் கிழக்கையும் இணைத்துப் பாலமும் அமைத்தார்.

கிழக்கு மாகாணத்திலே தமிழரசுக் கட்சியைக் கட்டி வளர்த்துக் காப்பாற்றி வந்த உரிமைப் பாதுகாவலர் திரு. இராஜவரோதயம். கிழக்கு இலங்கையில் தமிழரசுக் கட்சிக்கு வித்திட்டவர் அவரே. சரித்திரப் பிரசித்தி பெற்ற திருமலைத் தீர்மானம் தீட்டிய திருக்கோணமலை மாநாட்டைச் சிறப்புற நடத்தியதில் பெரும் பங்கு கொண்டார்.

அவர், கட்சி ஆரம்ப காலந்தொட்டு இடையருது கட்சிப் பணியாற்றி வந்தவர். 1958-ல் கட்சியின் தலைமையை ஏற்று, வவுனியா மாநாட்டில், "இன்று நமக்கு வேண்டியது செயல் ஒன்றுதான்" என்று அவர் முழங்கியது இன்றும் நம் செவிகளில் ஒலிக்கிறது. கட்சிக்குத் துன்பங்கள் ஏற்பட்டபோதெல்லாம் அசையாது, நிலைகுலையாது அஞ்சாநெஞ்சத்துடன் அவற்றைத் தாங்கி நின்றுர் இந்தத் தீரர்.

தமிழ் பேசும் மக்களின் ஜீவாதாரமான உரிமைகளுக்காக எந்தத் தியாகத்தைச் செய்யவும் அவர் என்றுமே தயங்கியதுமில்லை, பின்வாங்கியதுமில்லை. இரு முறை காவற் கைதியாகவும் சிறைப்படுத்தப்பட்டார்.

தமிழ் பேசும் இனத்துக்கு மிக நெருக்கடியான வேளை இது. இனத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் இறுதிப் போராட்டமும் வெகு தூரத்தில் இல்லை. இந்தச் சமயத்திலே முன்னணியில் நின்று வழிகாட்டும் வீரத் தளபதியின் மறைவு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும்.

# எவ்விதம் ஆறுதல் சொல்வேன்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திருமலைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு ந. இ. இராஜவரோதயத்தின் மறைவையொட்டி, துயரக் கடலில் மூழ்கியிருக்கும் தமிழ்பேசும் மக்களுக்கு 'சுதந்திரன்' மூலம் தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்கள் விடுத்த இரங்கற் செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவரின் செய்தி மேலும் தெரிவிப்பதாவது:

எமது கட்சி உருவாக்கிய காலம் தொட்டு, எமது கட்சியின் உறுப்பினராயும் திருமலைத் தொகுதிப் பிரதிநிதியாயும்விளங்கி அமைதியாக, ஆனுல் ஆழ்ந்தசிந்தனையுடன் எமது இனத்தின் நிலைத்த நல்வாழ்விற்கு அல்லும் பகலும் உழைத்தவர் நம் இராஜவரோதயம் அவர்கள்.

ஈழத் தமிழ் பேசும் இனத்திற்கு மிகவும் முக்கியத்துவம்வாய்ந்த இடமாக விளங்குவது திருக்கோணமலை. இப்பகுதியின் பல் துறை முன்னேற்றத்திற்கும்ஓயாது உழைத்தவர் திரு. இராஜவரோதயம் அவர்கள். தமிழ் பேசும் இனத்திற்கு மிக நெருக்கடி சூழ்ந்துள்ள இவ் வேளையில் இவர் மறைந்தது எமக்குப் பேரிழப்பே. அவர் விட்டுச் சென்ற பணியைத் தொடர்ந்து செய்வதே அவருக்கு யாம் செய்யும் கைம்மாறு.

தமிழ் பேசும் இனம் தன் கடமையுணர்ச்சியிலிருந்து தவறுது என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவரும் பட்டிருப்புப் பிரதிநிதியுமான திரு. சி. மூ. இராசமாணிக்கம் சுதந்திரன் மூலம் தமிழ் பேசும் மக்களுக்கு விடுத்த இரங்கற் செய்தியில் தெரிவித்துள்ளதாவது:-

'திரு. இராஜவரோதயத்தின் மறைவுச் செய்தி கிழ் மாகாணத்திற்கு ஒரு பெரிய அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. தமிழினத்தின் தலைவிதியை நிர்ணயிக்க வேண்டிய இவ் வேளையில் திரு. இராஜவரோதயத்தின் மரணம் ஈடு செய்ய முடியாத ஒரு நஷ்டமாகும்.

திரு. இராஜவரோதயம் அஞ்சா நெஞ்சம் படைத்த உள்ளன்புடன் அளப்பரும் தொண்டாற்றித் தமிழ் மக்களின் அணையா விளக்காகத் திகழ்ந்து வந்தார். வன்னித்சிங்கம், ஏகாம்பரம், கந்தையா ஆகிய பெரியார்களின் மறைவினுல் துயரப் பட்டுக் கொண்டிருக்கும் தமிழ் பேசும் மக்களுக்குத் தாங்க முடியாத ஓர் அதிர்ச்சியைத் திருமலை உறுப்பினரின் அகால மரணம் ஏற்படுத்தியுள்ளது.'

ஊர்காவற்றுறைத் தொகுதித் தமிழரசுக் கட்சி வேட்பாளர் திரு. வ நவரத்தினம் தனது அனுதாபச் செய்தியில் தெரிவித்ததாவது:

'திருக்கோணமலையிலிருந்து தமிழினத்தின் உரிமைக் குரலை இடையருது எழுப்பிக் கொண்டிருந்த திருமலை ஜோதி மறைந்து விட்டது.

ஓர் இனத்தின் சுதந்திரம் என்பது விலை கொடுத்துப் பெறக் கூடிய பொருள் அல்ல. வன்னியசிங்கம், ஏகாம்பரம், கந்தையா, இராஜவரோதயம் இவர்களெல்லாம் விலைமதித்தற்கரிய மாணிக்கங்கள். மிகவும் அபரிதமான விலையைக் கொடுத்து விட்டோம். ஆனுல் இன்னும் அள்ளிக் கொடுக்கத் தயாராய் இருக்கிறோம்.'

திருக்கோணமலை நகர சபை உறுப்பினரும், தமிழரசுக் கட்சியின் திருமலைக் கிளைத் தலைவருமான திரு இ. சோமசுந்தரம் தனது அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளதாவது:-

'திருக்கோணமலையின் பிதாவை நாம் இழந்து விட்டோம். இது ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு. இச் சந்தர்ப்பத்தில் நல்லவரை இழப்பது எங்கள் தலைவிதியேதான்.

திருமலை நகரசபைத் தலைவர் டாக்டர் சிவானந்தன் தனது அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளதாவது:- பொறுமையே உருவான அவர் பொது மக்களால் பெரிதும் விரும்பப்பட்டார். அவரின் மறைவு தமிழ் பேசும் மக்களுக்கு ஈடு செய்ய முடியாத பெரு நஷ்டமாகும்.

உடுப்பிட்டிப் பிரதிநிதி திரு. மு. சிவசிதம்பரம் சுதந்திரன் மூலம் விடுவித்த அனுதாபச் செய்தி பின்வருமாறு:-

எனக்குத் தனிப்பட்ட முறையில் ஏற்பட்ட நஷ்ட துக்கவுணர்ச்சியினைக் காரணமாகக் கொண்டே இந்த அனுதாபச் செய்தியை வெளியிடுகிறேன். மிகக் குறுகிய கால கட்டத்திற்குள் தமிழ் பேசும் மக்கள் தலைவர்கள் நால்வரை இழந்து விட்டனர்.

திரு. இராஜவரோதயம் எந்தப் பணியைச் சிரமேற் கொண்டாரோ அந்தப் பணி நிறைவேற்றப்பட்டே தீரும். அன்னுருக்கு யாம் செய்யும் மிகப் பெரிய மரியாதையும் அதுவேயாகும்.

டாக்டர் டபிள்யூ. பாலேந்திரா விடுத்த அனுதாபச் செய்தி பின்வருமாறு:-

காலஞ் சென்ற திரு. இராஜவரோதயம் அவர்கள் நமக்குத் தெரிந்த விதத்தில் பொதுமக்களுக்காகப் பல தியாகங்களைச் செய்து அயராது உழைத்தவர். எனக்கும அன்னுருக்கும் கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும் அன்னுர் ஒரு நேர்மையான மனிதர் என்பதை நான் ஒப்புக் கொள்வேன். அன்னுர் தமது நடுத்தரவயதுப் பிராயத்தில் மறைந்தது குறித்து நான் மிகவும் மனமிழந்து போயிருக்கிறேன்.

நியமனப் பிரதிநிதியும், இ. தொ. காங்கிரஸ் தலைவருமான திரு. எஸ். தொண்டமான் தெரிவித்துள்ளதாவது:-

திரு. இராஜவரோதயம் ஒரு சாதாரண ஆனால் மிகவும் மன உறுதி கொண்ட தமிழர். தமிழருக்கு அவர் பெரும் சேவை செய்துள்ளார்

யாழ். நகர முதல்வர் திரு. டி. எஸ். துரைராசா விடுத்த அனுதாபச் செய்தியில் கூறியதாவது:

திரு. இராஜவரோதயம் வருங்காலச் சந்ததியினருக்கு ஒரு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தார் நாட்டுக்குச் செய்த தியாகமும் இடையரு உழைப்புந்தான் அவருடைய உடம்பைத் தாக்கி அவரது அகால மரணத்திற்குக் காரணமாக இருந்தது என நினைக்கிறேன். திரு. இராஜவரோதயத்தைப் போல் திருமலை மக்களுக்குச் சேவை செய்யப் பிறிதொருவரைத் தேர்ந்தெடுப்பது மிகவும் கஷ்டமானது. இவரை நாம் இழந்தது சிறப்பாகத் திருமலைக்கும் குறிப்பாகத் தமிழ் நாட்டுக்கும் ஈடுசெய்ய முடியாத நஷ்டமாகும்.

அகில இலங்கை உரிமை குறைந்த தமிழர் அபிவிருத்தி இயக்கத் தலைவர் திரு ஜே. ச. சுந்தரம் விடுத்த அனுதாபச் செய்தி கூறுவதாவது:

அமரர் இராஜவரோதயம் எம் மத்தியில் ஒரு சாதாரண மனிதன் போன்று வசிக்கவில்லை. தமிழ் பேசும் சமுதாயத்தின் சுதந்திரப் போராட்டத்தின் முன்னணியில் நின்ற போர்வீரன். உரிமைப் போராட்டம் வெற்றியளிக்க, தமிழ் பேசும் மக்களிடையேயுள்ள சமயப் பாகுபாடும், சாதிப் பாகுபாடும் நிர்மூலமாக்கப்பட வேண்டுமென்று உணர்ந்து அத்துறையிலே தனது சேவையை விஸ்தரித்தார், தமிழ் பேசும் மக்களிடையே இஸ்லாமியர், கிறிஸ்தவர்கள், இந்துக்கள் என்ற பாகுபாடுகள் முற்றுக வேரறுக்கப்படத் தீவிரமாகத் தொண்டு புரிந்து வந்தார்,

சிறுபான்மைத் தமிழரின் மேல் அன்பும், ஆதரவும் காட்டி அவர்களில் ஒருவராகவே வாழ்ந்தார். 1957ல் அங்கு வசித்த அருந்ததியார் அளித்த விருந்திலே தானே பந்தியில் முந்தியிருந்து தனது மக்களுக்குத் தீண்டாமையில்லையென்று வலியுறுத்தினுர். தன் முகாமையுள்ள சைவ ஆலயங்களைச் சிறுபான்மைத் தமிழருக்குத் திறந்து வைத்தார், திருகோணமலையிலுள்ள சாதிக் குறைபாடுகள் முற்றையும் நீக்கி எல்லாம் ஒரு குலம் என்பதை நிறுவிய கர்ம வீரன்.

மேலும் ஈழத்தின் ஏனைய பகுதியிலும் சமூகக் குறைபாடுகள் வேரறுக்கப்பட வேண்டுமென்ற காரணத்தினுல் தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தை உருவாக்கப் பாராளுமன்றத்திலே பிரேரணை கொண்டு வந்தார். அச்சட்டம் பாராளுமன்றத்தால் 1957ல் நிறைவேற்றப்பட்டது. இவ்வாறு சிறுபான்மைத் தமிழருக்காக இவர் புரிந்த சேவைகளை எமது சமுதாயம் எக்காலமும் மறக்க முடியாது.

என்ன துரதிர்ஷ்டமோ, தமிழ் பேசும் சமுதாயம் நான்கு ஆண்டுகளுள் நான்கு தலைவர்களை—பறிகொடுத்து விட்டது. தியாக மூர்த்திகளான திருவாளர்கள்: வன்னியசிங்கம், ஏகாம்பரம், கந்தையா ஆகிய விலை மதிப்பற்ற மாணிக்கங்களை ஒன்றன்பின் ஒன்றுக இழந்தோம். இப்போது இராஜவரோதயரையும் பறிகொடுத்துவிட்டோம்.

சுதந்திரப் போராட்டப் பலிபீடத்திலே விடுதலை வீரர்கள் உயிர்த்தியாகம் செய்த எத்தனையோ சான்றுகள் உலக வரலாற்றிலே உண்டு. இந்திய சுதந்திரப் போராட்டம் நடைபெறும் போதே தேசபந்து, லாலா லஜபதி, மோதிலால் நேரு, சத்தியமூர்த்தி, நேத்தாஜி போன்ற உலகப் புகழ் பெற்ற பாரத சுதந்திரத் தளபதிகள் சுதந்திரத்தைக் காண முன்பே மறைந்து விடவில்லையா?

ஆயினும் குறுகிய காலத்தில்—நான்கே ஆண்டுகளில் நான்கு தலைவரை பறி கொடுத்துவிட்டோமே என்பதை நினைக்கும் போதுதான் நெஞ்சம் வெடிக்கிறது. மரணத்தை யாரால்தான் வெல்ல முடிந்தது?—வெல்ல முடியும்?

திருமலையிலிருந்து உரிமைக் குரலை இடையருது எழுப்பிய திருமலைச் சிங்கம் ஓய்ந்து விட்டது என்பது என்னவோ உண்மை! அந்த உரிமைக் குரலின் ஒலியும் அடங்கியிருக்கலாம். ஆனுல் அவர் முழங்கிய இலட்சிய கீதம் இலட்சக் கணக்கான உள்ளங்களில் முழங்கிக் கொண்டேயிருக்கும்.

திருமலை தந்த தியாகச் செம்மலின் திருநாமம் குன்றின்மேலிட்ட தீபமாக என்றென்றும் ஒளிவீசிக் கொண்டிருக்கும். அந்த ஒளியிலே அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றிச் சென்று, அவர் விட்டுச் சென்ற புனிதப் பணியை நிறைவேற்றுவதொன்றே தமிழ் பேசும் சமுதாயம் அவருக்குச் செய்யும் கைமாறு. அவரது ஆத்மா சாந்தியடைய மக்கள் நிறைவேற்ற வேண்டிய கடமை இது வொன்றேயாகும்.

# திருமலை தந்த தீரர் மறைந்தார்

## மற்றுமொரு மாபெரும் இழப்பு

### தமிழ் பேசும் இனம் தவியாய்த் தவிக்கிறது

தமிழ் பேசும் மக்களின் உரிமைப் பாதுகாவலராகக் கடந்த வாரம் வரை இருந்த திருமலை தந்த தீரர் திரு. ந. இ. இராஜவரோதயம் இன்று நம்மிடையே இல்லை. பாசமும் பற்றும் நிறைந்த குடும்பத்தினரை விட்டு, ஊரை விட்டு, பிரதிநிதித்துவம் வகித்த தமிழர் தலைநகராம் திருமலையை விட்டு, நிற்க கதியற்ற நிலையில் நிலைதடுமாறும் ஈழம் வாழ் தமிழ் பேசும் மக்களை விட்டு, உலகை விட்டே பிரிந்து விட்டார் அவர். தாங்கொணுந் துயர் தமிழ் பேசும் மக்களுக்கு தவியாய்த் தவிக்கின்றனர். துடியாய்த் துடிக்கின்றனர். ஆற்றுவார் இல்லை. தேற்றுவார் இல்லை.

சிறு நோய் பிடித்து, செங்கமாரியாகி அது மங்கமாரியாகி கூற்றுவன் உருவெடுத்து அவரை மாய்த்து விட்டது. அவரை இழக்க வேண்டிய குற்றம் எதையும் தமிழ் பேசும் மக்கள் செய்ய வில்லை. என்ருலும் கூற்றுவன் அவர் உயிரைக் கவராது விட்டான் இல்லை. தந்தை செல்வா கூறியது போல ஒரு தலைவரை இழந்த துயர் ஆறமுன்பு, அவரது இடம் பாராளுமன்றத்தில் நிரப்பப்பட முன்பு, இன்னெரு நல்லவரை, வல்லவரை இழந்து தவிக்கும் தமிழ் பேசும் இனத்திற்கு எவ்வித ஆறுதல் மொழி கூறுவது என்று தெரியவில்லை. விழிகளில் வடியும் கண்ணீரைத் துடைத்து முடிப்பதற்குள் மற்றுமொரு மாபெருமிழப்பா?

தமிழ் பேசும் இனத்தைச் சூழ்ந்துள்ள சாபக்கேடு— தலைவர்களையும் விட்டு வைக்கவில்லை. 59ல் கோப்பாய் தந்த கோமான் அண்ணல் வன்னியசிங்கத்தை இழந்தோம். 61ல் மூதூர் தந்த முதல்வர் ஏகாம்பரத்தை இழந்தோம். மூன்று திங்களுக்கு முன்னர் தீவுப் பகுதி தந்த செம்மல் கந்தையாவை இழந்தோம். இன்று திருமலை தீரர் இராஜவரோதயத்தை இழந்து விட்டோம்.

நாட்டிலுள்ள வேறு எந்த இயக்கமும இத்தனை குறுகிய காலத்திற்குள், இத்தனை பெரும் ஒப்பற்ற தலைவர்களை, மாசற்ற மாணிக்கங்களை இழக்கவில்லை.

முப்பெரும் போரில் மூன்று தலைவர்களை இழந்தோம். நாலாவது போருக்கு நம்மை தயார்படுத்திக் கொள்ளும் இவ் வேளையில் நாலாவது தலைவனையும் இழந்து விட்டோம்.

இத்தனைக்கும் நாம் செய்த தவறுதான் என்ன? எம் மீது கூற்றுவனின் கடும் கோபம் ஏற்படக் காரணம் தான் என்ன?

58ல் தலைவிரித்தாடிய அடக்குமுறை தடுப்புக் காவல் என்ற பெயரில் கூற்றுவனுக வந்து எமது ஒப்பாரும் மிக்காரும் அற்ற, குடும்பத்தின் மூத்த கொழுந்தை— தலைமகனுரை பலிவாங்கியது.

அடுத்து நடந்த வரலாற்றுப் புகழ் மிக்க சாத்வீகப் போரில் கடற்படை வீரர்களின் முரட்டுத்தனத்திற்கு இலக்காகி மூதூர் தந்த முத்தமிழ்க் காவலனை இழந்தோம்.

சிங்கள ஏகாதிபத்தியத்தின் சின்னமாகத் தமிழ்ப்பிரதேசத்திற்குப் பவனி வந்த மந்திரியாருக்கு அமைதியான முறையில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்ட பொழுது பொலீசாரின் மூர்க்கத்தனமான தாக்குதலுக்கு இலக்காகிய நற்றமிழின் பொற்காவலனை இழந்தோம்.

இன்று திருமலை தந்த தீரர் நம்மை விட்டுப்பிரிந்து விட்டார். கடந்த சாத்வீகப் போரின் பின்னர் அவர்கள் தொடர்ந்து நோய்வாய்ப்பட்டு வந்திருப்பதை நாடேயறியும். இன்று அந்தச் சிறு நோய் பெரு நோயாகி அவர் உயிரையே மாய்த்து விட்டது.

கடும் மங்கமாரி நோய் காரணமாகக் கடந்த 20ம் திகதி திருக்கோணமலைமருத்துவ மனையிலிருந்து யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்ட திரு. இராஜவரோதயம் யாழ்ப்பாணத்தில் ஒரு வார காலம் சிகிச்சை பெற்ருர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இவரது உடல் நிலை பெரிதும் கவலைக்கிடமாகவிருந்தது. அதன் காரணமாக விசேட இரத்தம் ஊட்டப்பட்டு நிலைமையில் மாற்றம் ஏற்பட்ட போதிலும், திங்கட்கிழமை நிலைமை மோசமடைந்தது. சரியாக யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு ஒரு வார காலத்தின் பின்னர் செவ்வாய்க்கிழமை அதிகாலை ஆறு மணியளவில் உயிர்நீத்தார்.

இவர் உயிர்நீத்த சமயம் அவர் அருகில் ஜனுப் முகம் மதலி, செனட்டர் திரு. ஜி. நல்லையா, உடுவில் பிரதிநிதி திரு. வி. தர்மலிங்கம், தமிழரசு வாலிப முன்னணித் தலைவர் திரு. சி. கதிரவேற்பிள்ளை ஆகியோரும் மனைவி, மக்கள், உறவினரும் கூட இருந்தனர்.

திரு. இராஜவரோதயம் இறந்துவிட்டார் என்ற செய்தி காட்டுத் தீ போல் பரவ ஆரம்பித்ததும், பொது மக்களும் நகரப் பிரமுகர்களும் ஆஸ்பத்திரியில் மறைந்த தமிழ்த் தலைவரைக் காண விரைந்தனர். திருமலையிலிருந்தும் பெருந்தொகையானேர் மோட்டார் வண்டிகளில் யாழ். நகர் நோக்கிப் பிரயாணமானுர்கள்.

மறைந்த தலைவரின் பூதவுடல் யாழ். நகரசபை மண்டபத்தில் அலங்கரிக்கப்பட்ட விசேட ஆசனத்தில் பொது மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. பெருந் தொகையான மக்கள் சாரி சாரியாகச்சென்று, மறைந்த தலைவருக்குத் தங்கள் இறுதி அஞ்சலியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

நகர மண்டபத்தில் மறைந்த தலைவரின் சேவையைப் பாராட்டி திருவாளர்கள்: அ. அமிர்தலிங்கம், செ. இராசதுரை, செனட்டர் ஜி. நல்லையா, யாழ். நகர முதல்வர் திரு. டி. எஸ். துரைராசா மற்றும் பலரும் இரங்கல் உரை நிகழ்த்திஞர்கள்.

மாலை 6-15 மணிக்குத் தமிழ் சிறி பொறித்த மோட்டார் வாகனத்தில் மறைந்த தலைவரின் பூதவுடல் திருமலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. மறைந்த தலைவரின் உடல் தமிழரசுக் கட்சியின் மூவர்ணக் கொடியால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. யாழ். நகர முதல்வரும வட பிரதேசப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் பிரேத ஊர்வலத்துடன் திருமலைக்குச் சென்ருர்கள்.

வழி நெடுகிலும் மக்கள் குழுமி நின்று தங்கள் இறுதி மரியாதையை மறைந்த தலைவருக்குச் செலுத்திஞர்கள். ஓமந்தையிலும், வவுனியாவிலும் பெருந்தொகையான மக்கள் நடுநிசியில் குழுமி நின்று தங்கள் இறுதி மரியாதையைத் தெரிவித்தனர். ஓமந்தையில் வவுனியாப் பிரதிநிதி திரு. சிவசிதம்பரமும், வவுனியாவில் பட்டின சபைத் தலைவர் திரு. சுப்பிரமணியமும் அவரது சேவையைப் பாராட்டி இரங்கல் உரை நிகழ்த்திஞர்கள். விடியற்காலை 4 மணியளவில் பிரேத ஊர்வலம் திருமலை எல்லையை அடைந்தது.

## இறுதி யாத்திரை........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அழுத திருகோணமலை மக்களின் சோககீதம் அன்று கதிரோனின் வரவின்போது கேட்க ஆரம்பித்தது.

வயதைக் கடந்த வயோதிபர்கள் தம்மை வழிநடத்தும் வழிகாட்டியை இழந்து பரிதவித்தனர் தம்புதல்வர்களின் முதல்வனைப் பறிகொடுத்த தாய்மார்கள் துன்பக் கடலாடினர். அறிவு வழங்கிய அண்ணலை இழந்த இளைஞர்கள் கோவெனக் கதறினர். கொள்கைக்குரம் கொடுத்த கோமகனை இழந்த காளைகள் கருத்தழிந்து கலங்கினர். திருமலை மக்களின் திசைகாட்டும் கருவி உடைந்து தமிழ் பேசும் மக்களின் ஒளிவிளக்கு அணைந்துவிட்டதே என்று புலம்பல் ஒலிஎங்கும் கேட்ட வண்ணமேயிருந்தது.

### எங்கும் கறுப்புக் கொடி

திருமலைத் தெருக்களெங்கும் மூவர்ணக் கொடிகளும், கறுப்புக்கொடிகளும், வெள்ளைக் கொடிகளும் தொங்கின. சோகமே உருவாக திருமலை காட்சி அளித்தது. இரண்டு நாட்கள் திரைப்படங்கள் காண்பிக்கப்படவில்லை. எந்தவிதமான கேளிக்கைகளும் நகரில் இடம்பெறவில்லை. திருகோணமலை நகர பிதாக்கள் தெருக்களில் உள்ள அசுத்தங்களை இரவோடு இரவாக நீக்கி, வெண்மணலைப் பரப்ப ஏற்பாடு செய்தனர்.

காலை 10 மணிக்கு வீட்டில் கிரியைகள் முடிந்தது. உறவினர்களின் அஞ்சலியும் முடிந்ததும் நகர மண்டபம் நோக்கி பவனி புறப்பட்டது. மண்டபத்து வாயிலில் நின்ற நகர பிதாக்கள் பெரியாரின் பூதவுடலை ஏந்திச் சென்று மண்டபத்துள் வைத்தனர். சாரணச் சிறுவர்கள் அணிவகுத்து நின்று அண்ணலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

கரங்களில் மலர்களை ஏந்திய தந்தை செல்வா, தம்முடன் தோளோடு தோள் நின்று தளராது போராடிய வீரனுக்கு இறுதி மரியாதையைச் செலுத்திஞர். டாக்டர் நாகநாதன் குளமாகி விட்ட தம் கண்களை மறைக்க கறுத்தக் கண்ணுடி அணிந்திருந்தாலும் தோல்வியுற்ருர். தமிழரசுத் தலைவர்களின் மலர் அஞ்சலி முடிந்ததும், பாடசாலை மாணவ மாணவிகளின் அஞ்சலி நடைபெற்றது.

### தந்தையின் தவிப்பு

நகரமண்டபத்தில் நகர சபைத் தலைவர் டாக்டர் எஸ். சிவானந்தம் தலைமையில் ஆரம்பித்த இரங்கற் கூட்டத்தில், தழதழத்த குரலில் தந்தை செல்வா பேசுகையில், "தமிழ்பேசும்இனம் இன்றுள்ள இக்கட்டான நிலையில் ஏற்பட்டுள்ள இப்பேரிழப்பை எப்படி ஈடு செய்வதென்பது தெரியவில்லை' என்று கூறிஞர். கொழும்பிலிருந்து வந்த மந்திரி திரு. இலங்கரத்தின, ஜனுப் பதியுதீன் மஹ்மூது முதலியோரும் இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

### இரங்கல் உரை

தம்முடன் இணைந்து நின்று இன விடுதலைக்காகப் போரிட்ட ஒப்பற்ற வீரனைப் பறி கொடுத்தோம் என்று தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. இராசமாணிக்கம் கூறிஞர். திரு டி.பி.எம். ஹேரத் (வலப்பனை), திரு பேர்ஞட் டி. சொய்சா (கொழும்பு தெற்கு), திரு. எஸ். தொண்டமான், திரு. ரி. சிவசிதம்பரம் (வவுனியா), ஜனுப் முகம்மதலி (மூதூர்), திரு. செ. இராசதுரை (மட்டக்களப்பு), திரு. எம். சிவசிதம்பரம் (உடுப்பிட்டி), திரு. பேர்சி விக்கிரமசிங்கா (கம்புறுப்பிட்டிய), ஜனுப் மஜீத் (மூதூர் 2வது உ.), ஜனுப் ஜீத் (நிந்தவூர்) ஆகியோர் இரங்கலுரை நிகழ்த்தினர்.

சரியாக 5 மணிக்கு திரு. இராசவரோதயத்தின் இனிமை காட்டும் முகம் மறைக்கப்பட்டு விட்டது. நகர மண்டபமே அதிர்ந்து விழும் வண்ணம் அஞ்சலி

(13-ம் பக்கம் பார்க்க)

## சப்பளம் வேண்டாம்!

### துறைமுகச் சிங்களத் திணிப்புக்கு ஊழியர் எதிர்ப்பு

துறைமுகக் கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றும் 400க்கு மேற்பட்ட தமிழ் பேசும் ஊழியர்கள், கடந்த 26ம் திகதி தங்கள் சம்பளத்தை ஏற்க மறுத்து விட்டார்கள். இதுவரையும் ஆங்கிலத்தில் எழுதி வழங்கப்பட்டு வந்த சம்பள உறைகள் யாவும் திடீரென சிங்களத்தில் எழுதப்பட்டிருந்தமையிஞலேயே, எல்லாத் தமிழ் ஊழியர்களும் ஐக்கியப்பட்டு ஆட்சேபம் தெரிவித்தார்கள்.

அங்குள்ள ஒரு சில சிங்கள சாகித்திய மண்டலத்தார் தான் தோன்றித்தனமாக மேற்கொண்ட தனிச் சிங்கள நடவடிக்கையின் பிரதிபலிப்பே இது. பல வழிகளிலும் சிங்களத்தைத் திணிக்கலாமென்று அவர்கள் எடுத்த முயற்சிகள் யாவும் படுதோல்வியில் முடிந்தன. இறுதியாக, தமிழ் ஊழியர்களின் சம்பள உறைகளில் சிங்களத்தைத் திணித்தனர்: பணத்துக்காக அதை எதிர்ப்பின்றி ஏற்பார்கள் என்று கருதிப் போலும் இவ்வாறு செய்தார்கள். பணத்துக்காகவோ, உத்தியோகத்துக்காகவோ தமிழ் பேசும் மக்கள் தங்கள் உரிமைகளை விட்டுக் கொடுக்க மாட்டார்கள் என்ற மான உணர்ச்சியோடு தமிழ் ஊழியர்கள் கிளர்ந்தெழுந்தார்கள்.

தங்கள் சம்பள உறைகளில் தனிச் சிங்களம் இருக்கும் வரையும், சம்பளம் எடுக்க மாட்டோம், தொடர்ந்து ஒற்றுமையாக இறுதி வெற்றி கிடைக்கும் வரையும் போராடுவோம் என்று கூட்டுத்தாபன ஜெனரல் மனேஜரிடம் தெரிவித்தார்கள். நிலைமை மோசமாக இருந்தபடியால், மனேஜர், மந்திரி உட்பட அதிகார சபையை உடனடியாகக் கூட்டி, 24 மணித்தியாலத்துக்குள் தனிச் சிங்களத்தை மாற்றி, அவர்கள் வேண்டிக் கொண்ட மொழியில் சம்பளம் வழங்குமாறு உத்தரவு கொடுக்கப்பட்டது.





சுகாதாரமான நவீன முறைப்படி
கைபடாமல் தயாரிக்கப்பட்ட

ரோஸ் பிராண்ட்,
சுவீட்ஸ் டொபீஸ்

இலங்கையில் முதல் இடத்தை வகிப்பவை
ஒரு முறை சுவைத்தால் போதும்
மறுமுறை டொபி சுவீற்ஸ் வாங்கும்பொழுது

'ரோஸ்' பிராண்ட்

என்றே கேட்பீர்கள்.




கூட்டாக எழுதும் தொடர்கதை

## கதிர் நான்கு

## நதி

மலை நாட்டில் பெய்கின்ற மழை, விலைமகளைப் போன்றது. இரண்டையும் ஒருபோதும் நம்பமுடியாது எப்போது மழைபெய்யும், எப்போது மழை வரும் என்று கூற முடியாது. இருந்தாற்போல் சோணவாரியாக அடித்துக் கொட்டும் மழை, இருந்தாற்போல் நின்றுவிட, மலை நாடு புத்திளமையில் சிரித்துக் குலுங்கும்.

மழையைப் பொழிந்த சுவடே தெரியாமல் வானம் வெறிச்சிட்டுக் கிடக்கிறது. உயர் நீல வானத்தின் கீழே வெண்பனிப்புகார் போல மேகம் இடைவிட்டுக் கவிழ்ந்து, காற்றிலே மிதந்து கொண்டிருக்கிறது. தூரத்திலே வெண்மேகக் கூட்டத்தைப் பிளந்து கொண்டு உயர்நீல வானத்தை அளாவியபடி மலைச் சிகரங்கள், அரசனின் கம்பீரத்தோடு தலைநிமிர்ந்து நிற்கின்றன. பெண்ணின் உடல் நெளிவுகளைப்போல, மலைத் தொடர்கள் கவர்ச்சிகரமாகத் தொடர்ந்து செல்கின்றன.

சுற்றி வளைத்துச் செல்லும் அந்த மலைப்பாதையில், சரிவில் இறங்கும் வேகத்துடன், நடையைக் கட்டுப்படுத்தி, நடந்து வந்து கொண்டிருக்கின்றான் அவன். இயற்கையின் எழில் கலந்த உடலைக் கண்கள் ஆசைதீரப் பருகிக் கொண்டுவர கால்கள் தம்பாட்டிற்கு விரைகின்றன. கண்களின் துளாவலில் பட்டதெல்லாம் அழகுதான்.

'இந்த அழகுக் காட்சிகளைப் புவனம் அருகில் வர இரசிப்பதனால்......' அவன் உள்ளம் நினைவின் இனிப்பில் இலயிக்கின்றது.

'புவனம் அருகே நடந்து வர நான் அவள் கரத்தைப் பற்றி, மலைமகளின் எழில் நடனங்களைச் சுட்டிக்காட்ட அவள் கண்கள் என் சுட்டு விரலின் திசையில் பதிய...'

நினைவுகள் கற்கண்டுதாம்.

'புவனம் அருகில் வந்தால் எப்படி என்னால் மலை நாட்டின் அழகுக் காட்சிகளை இரசிக்க முடியும்? அவளையே பார்த்துக் கொண்டிருக்கத்தான் முடியும். புவனமும் ஒரு மலைமகள்; புவனமும் இயற்கையின் ஒரு அம்சம் தான். அருவியின் துள்ளல் அவள் நடையில் இருக்கிறது! மந்த மாருதத்தின் இனிமை அவள் குரலில் இருக்கிறது! பனியின் தண்மை அவள் உடலில் இருக்கிறது!......'

'புவனம் இப்போது எப்படியிருப்பாள்? என்னை மறந்து விட்டிருப்பாளோ? சாச்சாய்...அவளின் உயிர் நான்!'

அவளுக்குக் கடிதம் எழுதிப் போட அவன் பலமுறை விரும்பி இருக்கிறான்; ஆனால், அவனுக்கு அவ்வாறு செய்யத் துணிவில்லை. குடிகாரக் கந்தையரின் வன்மம் கலந்த பார்வை அவனைக் கோழையாச்கியது. கந்தையரின் கரங்களில், அவன் புவனத்திற்கு எழுதுகிற கடிதம் ஒரு வேளை சிக்கிவிட்டால்......?

புவனத்திற்கு என்னதான் நடக்குமோ?

புவனம் சுவரோடு நிலை குலைந்து போய்க் கிடந்த அக்காட்சி அவன் நினைவில் இரத்தக் கண்ணீரை வருவிக்கிறது. அந்தஒரு வேதனை தரும் நினைவு அவன் கரங்களுக்குக் கட்டுப் போட்டு விட்டது.

அவன் நடந்து கொண்டிருக்கிறான்; அவனுடைய அறையை அடைய இன்னும் அரை மைல் தூரமாவது நடக்க வேண்டும். மலைப் பாதையின் ஒரு திருப்பத்தில் அவன் திருப்பியபோது, அவன் கண்கள் எதேச்சையாகப் பாதையை அண்டி, மலைச் சரிவில் அமைந்திருந்த சிறு குடிசையில் நிலைக்கின்றன. அக்குடிசையின் முன்னால் மலைவாழைகள் சோலையாக வளர்ந்திருக்கின்றன. அம்மலை வாழை ஒன்றினை அண்டி ஒரு காட்சியை அவன் கண்கள் காண்கின்றன.

பருவம் வந்த ஒரு சிறு பெண்ணை-அவள் பாவாடை சட்டைதான் அணிந்திருக்கிறாள்—ஒரு ஆடவன் அணைத்து முத்தமிடுகின்ற காட்சி அவன் கண்களைக் குத்துகின்றது.

'இது தான் வாழ்க்கையா?' வாழ்க்கையைப் பற்றி அவன் பலதடவைகள் ஆழமாகச் சிந்தித்திருக்கிறான்; ஆனால், வாழ்க்கை என்றால் என்ன வென்றோ, அதன் பயன் என்னவென்றோ அவனால் ஒரு முடிவிற்கும் வர முடிந்ததில்லை. சமயங்கள் கூறுகின்ற வாழ்க்கையைப் பற்றி அவனுக்கு நம்பிக்கை கிடையாது.

ஆச்சி, அண்ணன் என்ற குடும்பப் பாசத்தில் இருக்கும்போது, 'அன்பும், அமைதியும் கொண்டு வாழ்வது தான் வாழ்க்கை என்று எண்ணியிருக்கிறான். புவனத்தைச் சந்தித்துப் பேசும் வேளைகளில் 'புவனம் தான் வாழ்க்கை' என்று எண்ணியிருக்கிறான். வாழ்வு என்பது அன்பும், பாசமும், காதலும் நிறைந்தது தான். அவனுக்காக வாழ்கின்ற ஆச்சி, அண்ணன்; அவர்களுக்காக வாழ்கின்ற அவன்......ஒருவருக்காக ஒருவர் வாழ்வது தான் வாழ்க்கையா?

அவன் வாழ்க்கையில் பல இன்ப துன்பங்களை அனுபவித்தவன்; அனுபவங்களின் மலர்ச்சியில் தான் உண்மையான வாழ்க்கை அமைய முடியும் என்பதை உணர்ந்

**செங்கை ஆழியான்**

தவன். அவன் அனுபவங்களிடையே தான் வாழ்ந்து கொண்டிருக்கிறான். அனுபவங்களின் கூட்டுத் தான் வாழ்க்கையா?

ராஜாவின் கால்கள் பழக்கப்பட்ட பாதையில் நடக்கின்றன. இன்னும் சிறிது தூரம் போனால் ஒரு கிளை நதி குறுக்கிடும்; அதன்மேல் அமைக்கப்பட்டிருக்கும் பாலத்தைக் கடந்து, சிறிது நடந்து, எதிர்ப்படும் படிகளில் ஏறி மேலே போனால் அவனுடைய வீட்டை—இல்லை, இல்லை, அவன் தங்கியிருக்கிற மாளிகையை அடையலாம்.

பாலத்தை நெருங்கும் போது, சிற்றாற்றின் சலசலப்புக் காதுகளில் விழுகிறது. பாலத்தைக் கடக்கும்போது அவன் உதடுகள் தம்மையறியாமல் முணுமுணுக்கின்றன. 'வாழ்க்கை ஒரு நதி. உண்மைதான். எங்கோ உற்பத்தியாகின்றன நதி, எங்கோ கடலையடைகின்றது. பிறப்பிடத்திற்கும், சங்கமமாகின்ற இடத்திற்குமிடை எத்தனை பள்ளத்தாக்குகள், எத்தனை வளைவுகள், எத்தனை சுழிவுகள், எத்தனை நிலைகள்?,

படிகளில் ஏறி மேலே நிமிர்ந்தபோது, மாளிகையின் வாசலில் நின்று, மலை ரோஜாவின் வனப்போடு சிரிக்கிறாள், சாவித்திரி—ராமையாவின் மனைவி.

●

படுக்கையில் விழுந்து கிடக்கிறான், ராஜகோபால் வெளியே 'கும்' மென்ற மையிருட்டின் ஆட்சி. 'உர்'ரென்று மலைச் சரிவில் ஏறுகின்ற காற்றின் ஓசையிடையே, இரவின் அமைதியை ஊடுருவியபடி நதியின் சலசலப்பு எழத்தான் செய்கிறது.

பாலா அவனுக்கு இன்று கடிதம் எழுதியிருந்தான். தங்களின் நட்பின் இறுக்கத்தைப் பந்தி பந்தியாக விபரித்திருந்தான். சோதனை நெருங்குவதை விபரித்திருந்த அவன், ராஜா கூட இல்லாததைப் பற்றிக் குறைப்பட்டிருந்தான்.

'ராஜ், படிப்பதற்கு வசதியும், மூளையும் இருந்தால் மட்டும் போதாது. படிப்பதற்கு மனமும், அமைதியும் தேவை என்பதை இன்று நான் உணர்கிறேன். உனக்கு நான் அடிக்கடி கூறுவேனே, ஒன்று நினைவிருக்கிறதா? சிலருக்குக் காதல் படிப்பதற்கு ஊக்கத்தைக் கொடுக்கிறது. சிலருக்குக் காதல் படிப்பைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்கி விடுகிறது. அது உன்மட்டில் எவ்வளவு நிதர்சனமான உண்மை! படிக்கும் மாணவர்கள் ஒருபோதும்காதல் வசப்படவே கூடாது. மாணவ வயதில் காதலிப்பவர்கள் காதல் தான் வாழ்க்கை என்று தவறாக நம்பிவிடுகிறார்கள். காதல் வாழ்க்கையின் ஒரு அம்சமே தவிர, அதுவே வாழ்க்கையாகாது. வாழ்க்கையில் எத்தனையோஇருக்கிறது. தனக்காக வாழ்வதோடு பிறருக்காக வாழ்வதில், வாழ்க்கையின் முழுமை இருக்கிறது. ஆனால், ஆனால்......'

அவன் சரசுவிடம் மனதைப் பறிகொடுத்திருப்பதை ஏக்கத்தோடு வரைந்திருந்தான்; அவளை மறக்க அவன் முயற்சிக்கின்றானாம். கடிதத்தின் இறுதியில் இன்னோர் புதிய விஷயத்தைப் பற்றியும் உணர்ச்சியோடு எழுதியிருந்தான்:

'ராஜ், இன்னும் இரு நாட்களில் தமிழினத்தின் உரிமை வேண்டிச் சாத்வீகப் போராட்டம் இங்கு ஆரம்பமாகப் போகிறது நேற்று முற்றவெளியில் நிகழ்ந்த கூட்டத்திற்குப் போயிருந்தேன். அப்பப்பா, எவ்வளவு சனத்திரள் தெரியுமா? எல்லாருடைய கண்களிலும் உரிமை பெறும் வேட்கை நிறைந்து தளும்பியதைக் கண்டேன். தமிழ் மொழியின் உரிமை ஆசனம் விரைவில் கிடைத்து விடும்! உன் அண்ணரும் சாத்வீகப் போராட்டத்தில் பங்கு பற்றுவார் என்று எண்ணுகின்றேன்!,

சாத்விகப் போராட்டத்தைப் பற்றித்தான் இன்று மாலை அவனும், சாவித்திரியும் விவாதித்தார்கள்.

'நீர் நினைக்கிறீரா, நீங்கள் செய்யப் போகின்ற சத்தியாக்கிரகம் வெற்றியைத் தருமென்று?' என்று கேட்டாள், சாவித்திரி.

'இப்போதுதான் துளிர் வந்திருக்கிறது! உடனேயே கனி காய்த்து விடமுடியுமா? போராட்டம் என்பது ஒரு நாள் இருநாளில் நடந்து முடிந்து விடுவதுமல்ல. பயனும் கஷ்டப்படாமல் கிடைத்துவிடப் போவதுமில்லை! தமிழினம் ஒரே அணியில் திரண்டு, தொடர்ந்து போராடினால் உரிமையை மறுத்துத் திரை போட யாரால் தான் முடியும்......?'

'பாராளுமன்றத்தின் முன் நீங்கள் முதன் முதல் சத்தியாக்கிரகம் செய்தீர்களே? அது அரசாங்கத்தால் கலைக்கப்பட்டதே. அதுபோல இப்போதும் நிகழலாம் அல்லவா?'

'நிச்சயமாக......சாத்வீகப் போராட்டம் என்பது ஒரு வேள்வி! அதில் பலர் பலியாகினால் தான் பலன்!'

தொடர்ந்து அவர்களால் விவாதிக்க முடியாமல் போய்விட்டது; சாவித்திரியின் கணவன் ராமையா வேலைத்தளத்தில் இருந்து திரும்பி வந்து விட்டதால், சாவித்திரி கணவனைக் கவனிக்க உள்ளே எழுந்து சென்றாள்.

அப்போது—

ஒருகணம் ராஜாவின் கண்களும் ராமையாவின் கண்களும் சந்தித்தன. ராமையாவின் பார்வையில் சாந்தமோ, அமைதியோ இருக்கவில்லை. அப் பார்வையில் கவிந்து கிடந்தது—வெறியா?

கைவிரல்களைப் பின்னித் தலைக்குக் கீழே வைத்துப் படுத்துக் கிடந்த அவன் இமைகள் ஒன்றையொன்று கவ்வி இறுக மறுக்கின்றன.

ராமையா அவனைப் பார்த்த பார்வை அவனுக்கு வெறுப்பை, நினைக்கும் போதும், அளித்தது. அவ் வெறித்த பார்வையின் காரணத்தைப் புரிந்துகொள்ள அவனால் முடியவில்லை. ராமையா அவனை அப்படிப் பார்த்தது முதல் தடவையல்ல. முன்பொரு தடவையும் அப்படிப் பார்த்திருக்கிறார்.

அவன் கண்டிக்கு வந்து இருபத்தைந்து நாட்களுக்கு மேலாகிவிட்டன. அந்த இருபத்தைந்து நாட்களுள், அவன் அன்பிற்கும், மதிப்பிற்கும் உள்ளானவள், அந்த வீட்டில் சாவித்திரி ஒருத்திதான். வஞ்சமற்ற மனதோடு அவனுடைய தனிமையைப் போக்கிப் பொழுதைக் கழிக்க அவள் பெருந்துணையாக விருந்தாள்.

பாலாவின் தந்தை அம்பலவாணர் அவனோடு அதிகமாகப் பேசுவது கிடையாது; அறைக்குள் இருந்து ஏதாவது படிப்பதில் பொழுதைக் கழித்துக் கொண்டிருப்பார். சாவித்திரியின் தந்தை நேர்நேராகச் சந்திக்க நேரில் புன்னகைப்பார். சாவித்திரியின் தாய் பேசுவதே கிடையாது. ராமையாவோ அவனோடு பேசுவதையே கௌரவக் குறைவாக எண்ணினார்.

ஒருநாள்—

"நீங்கள் யாரையாவது நேசிக்கிறீங்களா?" என்று கேட்டாள், சாவித்திரி. இதை ஏன் கேட்டாள், எப்படி இக்கதை ஆரம்பமானது என்பதைப்பற்றி அவனுக்குத் தெரியாது. ஒரு கணம் அவனால் பதில் கூற முடியவில்லை; முகம் வியர்த்து விட்டது.

"ஏன் வெட்கப்படுகிறீர்?......"

அவன் தலைநிமிர்ந்து அவளைப் பார்த்துச் சிரிக்க முயன்றான். பதில் கூற வாயெழவில்லை, அவள் சிரித்தாள்.

"உம்மைப் பார்க்க எனக்குச் சிரிப்பாக இருக்குது. நீர் யாரையோ காதலிக்கிறீர்?"

அவன் ஏதோ பேச வாயெடுத்தான்; அந்த நேரத்தில்தான் ராமையா உள்ளே நுழைந்தார். அவர் இருவரையும் பார்த்த பார்வை...? சாவித்திரி அப்பார்வையைப் பற்றிப் பரவாய் பண்ணியதாகத் தெரியவில்லை. அவனுக்குத் தான் ஏதோ போல இருந்தது.

மனிதனுடைய கண்கள் தான் எத்தனை வகையான பார்வைகளைப் பிறப்பிக்கின்றன! இதயத்தின் பிரதிபலிப்புத்தான் விழிகளின் பேச்சு. அவனுடைய ஆச்சியின் பார்வையில் தெரிகின்ற கனிவுக்கும், தூய்மைக்கும், அண்ணனின் பார்வையில் ஒளிர்கின்ற பாசத்திற்கும், புவனத்தின் பார்வையில் மலர்கின்ற காதலிற்கும், சாவித்திரியின் பார்வையில் உறவாடுகின்ற அன்பிற்கும் ராமையாவின் பார்வையில் தெரிகின்ற வெறிக்குமிடையில் தான் எத்தனை வேறுபாடுகள்!

(15-ம் பக்கம் பார்க்க)

**வேல் தைலம்**
**மிகச் சிறந்த சஞ்சீவி**

ஜலதோஷம், தலைவலி, ஒருதலைக்குத்து, கை கால் உளைச்சல், முதுகு வலி, விஷக் கடி, தேள்கடி, ஜன்னி, வாய்வுப் பிடிப்புகள், சுளுக்கு, வீக்கம், இரத்தக் கட்டு, கட்டிகள், புறப்பாடுகள் முதலிய சகல வியாதிகளுக்கும் பாதிக்கப்பட்ட இடங்களில் நன்றாகத் தேய்த்தால் மிக விரைவில் குணமடையும்.

ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய மகா சஞ்சீவி.

**விலை ரூபா 1-50**

தபால் செலவு வேறு

தயாரிப்பாளர்கள்:

**S. P. S. ஜெயம் கம்பெனி,**
மதுரை.

இலங்கையில் சோல் ஏஜண்ட்:

**M. A. R. S. மனுவேல் நாடார் அன் கோ.,**
34, செட்டியார் தெரு,
கொழும்பு-11.

# சிங்கக் கொடியை ஏற்றுக் கொண்டோர்

## சிறுபான்மையினர் பிரச்சினைக்கு தீர்வு காண்பது எங்ஙனம்?

## இடதுசாரி ஐக்கிய முன்னணியின் செயல் தமிழ் பேசும் மக்களுக்கு விடுக்கப்பட்ட சவால்

"இதோ வந்து விட்டது; அதோ வந்து விட்டது; ஆ...! ஊ...!!" என்றெல்லாம் அமர்க்களப்படுத்தப்பட்ட இடதுசாரிகள் ஐக்கிய முன்னணி கடைசியில் உருவாகி விட்டது. இந்த ஐக்கிய முன்னணி உருவாகுமுன் இடதுசாரித் தலைவர்களென்போர் செய்த ஆர்ப்பாட்டங்கள் சொல்லில் அடங்கா. சோஷலிசம், தொழிலாளர் அரசு, தேசிய மயம் என்றெல்லாம் இந்த வெத்து வேட்டுத் தம்பிரான்கள் நாளும் பொழுதும் பேசினார்கள். "எங்களிடம் தான் 'மூளை' இருக்கிறது; ஒரு ஐந்து ஆண்டு காலத்துக்கு ஆட்சியைத் தந்து பாருங்கள்; சரியில்லையென்று கண்டால் ஆட்சியை வேறு யாருக்கும் கொடுத்து விடுங்கள்" என்று அழாக்குறையாக என். எம். பெரேரா கேட்டுத் திரிந்தார். அவர் கட்சியிலுள்ள 'அரை வேக்காடு' களோ, "பாராளுமன்றம் என்ன பாராளுமன்றம்? நாங்கள் புரட்சி செய்வோம்; இரத்தம் சிந்துவோம்!" (தயவு செய்து யார் இரத்தம் என்று நீங்கள் வேறு கேட்டு விடாதீர்கள்!) என்றெல்லாம் அட்டகாசம் செய்தனர்.

### ஏமாற்றம்

இவர்களைவிட கம்யூனிஸ்டு கட்சி தன்னையும் ஓர் சக்தியென எண்ணிக்கொண்டு பெரும் புரட்டு (புரட்சி அல்ல) செய்து வந்தது. தத்துவத் தகிடுதத்தங்கள் வேறு நடைபெற்றனவாம். இத்தனை அமர்க்களப்படுத்தப்பட்டு ஆரம்பமான இடதுசாரிகள் ஐக்கிய முன்னணி தனது கூட்டு ஒப்பந்தத்தை வெளியிட்ட பொழுது எல்லோரும் மூக்கின்மேல் விரலை வைத்து, "பூ! இவ்வளவு தானா?" என்றார்கள். மார்க்சியபொதுவுடைமைக்கோட்பாடுகளை மதிப்பவர்களுக்கும் ஏமாற்றம். இவர்கள் அட்டகாசத்திலே அதிசயித்திருந்த சில ஏமாளிகளுக்கும் ஏமாற்றம். ஏன் இடதுசாரிக் கட்சியினரிலேயே பலருக்குப்பெருத்த ஏமாற்றம்!! பிலிப் குணவர்தனவுக்கு மட்டும் உள்ளூரக் கொண்டாட்டம்!!!

### வரட்டுக் கூச்சல்

இடதுசாரி ஐக்கிய முன்னணி வெளியிட்டிருந்த கூட்டு ஒப்பந்தத்தில் பொதுக் கோட்பாடுகள் என ஒரு பிரிவும் — உடனடி வேலைத் திட்டங்கள் என இன்னோர் பிரிவும் இருந்தன. இவற்றைப் படித்துப் பார்த்தவர்கள் எதுவும்சிறப்பம்சங்களைக் கண்டிருக்க முடியாது. பழைய வரட்டுக் கூச்சல்கள், இடதுசாரிகளின் 1956ம் ஆண்டின் கூட்டாளி காலஞ்சென்ற பண்டாரநாயக்காவின் சிறுபான்மையினரைப்பலியிட்டு பதவிக்கு வரும் அரசியல் சாணக்கியம், அதே பண்டாரநாயக்காவின் வளவளாப் பேச்சு - தொட்டும் தொடாமலும் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரையும் ஏமாளிகளாக்க முனையும் பரிதாப முயற்சி! இவைதான் இடதுசாரிகள் ஐக்கிய முன்னணியின் கூட்டு ஒப்பந்தத்தின் மொத்தச் சரக்கு!

### மார்க்ஸ் மானபங்கப் படுத்தப்பட்டார்

ஆகஸ்டு திங்கள் 12ம் திகதி பெரிதாக விளம்பரப்படுத்தி நடைபெற்ற ஹர்த்தால் நினைவு தினக் கூட்டத்திலே தான் இடது

**செங்கோன்**

சாரிகள் ஐக்கிய முன்னணி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. மார்க்சிய வாதிகள் என்று தங்களைக் கூறிக் கொள்ளும் இலங்கை இடதுசாரிகளினால் அன்று தத்துவ ஞானி மார்க்ஸ் மானபங்கம் செய்யப்பட்டார். முதலாளித்துவ களியாட்ட வேடிக்கை விநோதங்கள் அன்று வெகு விமரிசையாக நடத்தப்பட்டன. தேசிய கலாச்சாரங்கள் என்ற பெயரில் சிங்களக் கலை களியாட்டங்கள் மட்டுமல்ல வாண வேடிக்கை வேறும் காட்டப்பட்டது. வெசாக் பந்தல்களைக் கண்டித்த சமசமாஜிகளின் பழைய மார்க்சிய தத்துவம் சிரழிக்கப்பட்டது. மார்க்சிய தத்துவங்கள் இவற்றில் மட்டும் மட்டந் தட்டப்படவில்லை. மதத்தை மக்களின் அபினி என்றார் கார்ல் மார்க்ஸ். ரஸ்புடினையும் அவர் சீடர்களையும் ஒழித்துப்பொதுவுடைமைப் பூங்காவை நிர்மாணித்தார் லெனின். மார்க்சியம்-லெனினிசம் பேசும் இலங்கைச் சிடகோடிகளோ மதவாதிகளின் மஞ்சள் அங்கிக்குள் பதுங்கிக் கொண்டார்கள். ஆமாம். ஹர்த்தால் நினைவு தினக் கூட்டத்திலே முன் வரிசைகளில் பல ஆசனங்கள் அமைத்து அங்கே பௌத்த மத பிக்குகள் பலரை அமரவைத்தார்கள். ஒருவேளை இலங்கை இடதுசாரிகள் அமைக்கப் போகும் "தொழிலாளர் அரசில்" ஆட்சி பௌத்த மதகுருமார் கையிலோ என்னவோ? "கம்ரேடுகள்" சிறுகச்சிறுக "ஹாமதுருவோ" ஆகிவரும் பிற்போக்குத் தன்மையின் பிரதிபலிப்பாகவிருந்தது மேற்படி ஆசன அமைப்பு முறை.

### சிங்கக் கொடிக்கு சிரம் தாழ்த்தினர்

கூட்ட நிகழ்ச்சிகள் அனைத்தும் சிங்களத்திலேயே இருந்தன. என். எம். பெரேரா, பீட்டர் கெனமன் ஆகிய இருவர் பேச்சுக்கள் மட்டும் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டன. பிலிப் குணவர்தனவின் எம். ஈ. பி. கொடிகள், சுலோக அட்டைகள் அத்தனையும் தனிச் சிங்களத்திலேயே அமைந்திருந்தன. ஆனால் இவையெல்லாவற்றிற்கும் மேலாக தமிழ் பேசும் இனத்தின் மனதுக்கு—உரிமைப் போருக்குச் சவால் விடுவதாக அமைந்திருந்தது மேடையில் பறந்து கொண்டிருந்த இலங்கையின் தேசியக் கொடியெனப்படும் சிங்களக் கொடி. தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் ஒரு பொழுதும் சிங்கக் கொடிக்குத் தங்கள் தலை தாழ்த்தமாட்டார்கள். சிங்கக் கொடி தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தமட்டில் வணக்கத்திற்குரிய நாட்டுக் கொடியல்ல. சிங்கள ஏகாதிபத்தியத்தை எடுத்துக்காட்டும் அவமானச் சின்னம். சிங்கக் கொடி நாட்டின் தேசியக் கொடியாக வந்த நாட் தொடக்கம் தமிழ் பேசும் மக்கள் அந்த அடிமைச் சின்னத்தைப் புறக்கணித்தேவந்திருக்கிறார்கள்.

## மார்க்சின் மானத்தை விலைகூறி விற்கும் இவர்கள், வகுப்புவாத நடவடிக்கையில் ஏனைய சிங்களக் கட்சிகளுக்குச் சற்றும் சளைத்தவர்கள் அல்லர்.

சோஷலிசம், தேசியமயம், தொழிலாளர் நலன் என்ற வெறுங்கூச்சல்களில் மயங்கி, தமிழ் பேசும் மக்கள் இந்த அவமானச் சின்னத்துக்கு சிரம் சாய்ப்பார்கள் என்று இடதுசாரிகள் நினைப்பார்களானால் அதைவிடப் பெருந்தவறை அவர்கள் ஒரு பொழுதும் செய்யப்போவதில்லை.

### ஏமாறத் தயாராயில்லை

மார்க்சியப் போர்வையிலே தமிழ் இலங்கையில் ஏகாதிபத்தியச் சின்னமான சிங்கக் கொடியைப் புகுத்தி விடலாம் என்று "சிங்கள மார்க்சிஸ்டுகள்" நினைப்பார்களானால், தமிழ் பேசும் தொழிலாளர் தங்கள் இனத்தின் தன்மானத்தை காப்பாற்றுவார்கள், வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவதைப் போல தமிழ் பேசும் இனத்திடையே சிங்கள ஏகாதிபத்தியத்தை நிலைநாட்ட முடியாது, தமிழ் பேசும் இனம் முன்பு போல் ஏமாறத் தயாராகவில்லை, என்பதை இடதுசாரிகள் மனதில் வைத்துக் கொள்வது நல்லது.

### பழைய புராணம்

இடதுசாரிகள் ஐக்கிய முன்னணியின் பொதுக் கோட்பாடுகளும் உடனடி வேலைத் திட்டங்களும் எந்த அளவிற்கு தமிழ் பேசும் மக்களுக்கும் இதர சிறுபான்மையினருக்கும் நன்மை பயக்கும் என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டியதும் தமிழ் பேசும் மக்களின் கடமையாகும். இந்த வகையில் சிறுபான்மையினரின் முக்கிய பிரச்சினைகளான மொழிப் பிரச்சினை, குடியுரிமைப் பிரச்சினை, மற்றும் நில உரிமைப் பிரச்சினைகள் ஆகியவற்றை ஆராய்ந்தால் இது நாள் வரை ஆட்சிபீடம் ஏறிய ஐ. தே. க. அரசாங்கம், சிறி ல. சு. க. அரசாங்கம் ஆகியவை எந்த சிறுபான்மை மக்களின் இன ஒழிப்பு கோட்பாடுகளைக் கடைப்பிடித்து வந்தனவோ அவற்றையே இடதுசாரிகளும் ஏற்றுக் கொண்டுள்ளனர். மேலும் ஒரு படி சென்று மத சிறுபான்மையினரையும் அடக்கி ஒடுக்க முஸ்தீபுகள் செய்கின்றனர்.

### வேடதாரிகள்

ஆனால் இடதுசாரிகளின் வரலாற்றையும் — நடவடிக்கைகளையும் ஊன்றிக் கவனித்து வந்தவர்களுக்கு இவை ஆச்சரியமாக இருக்க முடியாது. சாதாரண பிரச்சினைகளிலேயே மார்க்சின் மானத்தை விலைகூறி விற்கும் இந்த வேடதாரிகள் — மனித குலத்தின் அடிப்படைப் பிரச்சினைகளான இன-மொழிப் பிரச்சினைகளிலே - வகுப்பு வேற்றுமை -மொழி வேற்றுமை கடந்து நின்று வகுப்பு வெறியை — ஏகாதிபத்திய ஆசையை எதிர்த்துப் போராடுவார்கள் என்று எப்படி நம்புவது?

(அடுத்த இதழில் முடியும்)

## மக்கள் குரல்

## விபுலாநந்த இலக்கியம்

ஈழம் தந்த அருட் கொடைப் பெருவள்ளலான விபுலாநந்த அடிகளார் தம் வாழ்நாள் முழுவதும் ஏராளமாகத் தமிழிலே எழுதிக் குவித்தார்.

அதிகமான பத்திரிகைகளில் சிதறுண்டு கிடக்கும் அடிகளாரின் கட்டுரைகளையும், கவிதைகளையும் சேகரித்து நாம் விபுலாநந்த இலக்கியத்தைப் பல பகுதிகளாக வெளியிட்டோம்.

அந்த வகையிலே சென்னை பாரி நிலையத்தார் 'விபுலாநந்தத் தேனை' யும், கொழும்பு கலாநிலையத்தார் 'விபுலாநந்த அமுதத்' தையும், சென்னை ஓரியன் லாங்மன் சார் 'விபுலாநந்த வெள்ளத்' தையும், சென்னை மலர் நிலையத்தார் 'விபுலாநந்தக் கவிதை'களையும், சென்னைக் கலைமகள் காரியாலயத்தார் 'விபுலாநந்த ஆராய்வு' என்னும் நூலையும் வெளியிட்டார்கள்.

விபுலாநந்த இலக்கிய வரிசையில் இதுவரை ஆறு நூல்கள் வெளியாகியுள்ளன.

அடிகளார் இசை சம்பந்தமாக எழுதிய அத்தனை கட்டுரைகளையும் தவிர்த்தே விபுலாநந்த இலக்கியத்தில் ஆறு நூல்களை வெளியிட்டேன்.

அடிகளார் எழுதிய இசை சம்பந்தமான கட்டுரைகள் யாழ் நூலிலே இடம் பெற்றுள்ளன. ஆகவே இசை சம்பந்தமான எந்தக் கட்டுரையையும் விபுலாநந்த இலக்கியத்திலே சேர்ப்பது உசிதமாகாதென்றே அவைகள் தவிர்க்கப்பட்டன.

எம்மால் சேகரிக்க முனைந்த அளவு சேகரித்தமையினால் விபுலாநந்த இலக்கியத்தில் ஆறு தனிநூல்களை வெளியிட முடிந்தது.

எமது தொகுப்புகளில் சேராத பல கட்டுரைகள், கவிதைகள் இன்னும் இருக்கலாம். விபுலாநந்த இலக்கியத்தைப் படித்தவர்களுக்கு அவைகள் தெள்ளிதிற் புலனாகும்.

நான் தற்பொழுது 7வது தொகுதியாக 'விபுலாநந்த இன்பம்' தொகுத்துக் கொண்டிருக்கிறேன்.

இந்தத் தொகுதியில், இதுவரை சேர்க்கப்படாத கட்டுரைகள், கவிதைகள் வைத்திருப்பவர்கள் எமக்குத் தந்து உதவினால் எமது தொகுதியில் சேர்க்க உதவியாக இருக்கும்.

தமிழ் முனிவரின் எழுத்தோவியங்கள் விபுலாநந்த இலக்கியத்தில் வரிசையாக வெளிவருவதை எல்லாத் தமிழர்களும் ஆதரிப்பார்களென்றே நம்புகிறேன்.

(13-ம் பக்கம் பார்க்க)

**ஆனந்தா லேகியம்**

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கைகளுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.

# தேமதுரத் தமிழிசைக்குப் பெருவிழா

## விவேகாநந்தசபை எடுக்கிறது

## நாடெங்கிலும் உள்ள இசைவல்லுனர்கள் காதுக்கினிய இசைவிருந்து அளிப்பார்கள்

கொழும்பு—ஆகஸ்ட்-28.

நாட்டிலே பலவிதமான விழாக்கள் நடாத்தப்படுகின்றனவே அவற்றில் இதுவும் ஒன்று. இதில் என்ன விசேடம் இருக்கப் போகின்றது என்று சிலர் எண்ணக்கூடும். நமது நாட்டிலே இது வரை காலமாகப் பலவித கலை நிகழ்ச்சிகளை உள்ளடக்கிய கலை விழாக்கள் நடாத்தப்பட்டுள்ளன. சிங்கள நாடகமும், கண்டிய நடனமும் இடம் பெறும் தமிழ் விழாக்கள் கூட நடத்தப்படுகின்றன. பல மொழிப் பாடல்கள் பாடப்படும் இசை விழாக்கள் நடாத்தப்பட்டுள்ளன. ஆனுல் தமிழ்ப் பாடல்கள் இடம் பெறும் தமிழ் இசை விழா தொடர்ச்சியாக இரண்டு நாட்களுக்கு நடாத்தப்படுவது ஒரு புதுமை—வரவேற்கத்தக்க புதுமை—போற்றத்தக்க புதுமையாகும். எனவே தமிழ் பேசும் மக்களின் முழு மன ஆதரவு இதற்கு அளிக்கப்படவேண்டும் என்பது எமது அவாவும் ஆசையுமாகும்.

தமிழனுக்கென்று ஒரு தமிழ் இசை இல்லை. அவனுக்கு உள்ளதெல்லாம் கர்நாடக இசைதான்-கடன் வாங்கப்பட்ட பண்டம், என்று பிறர் கூறுவதைக் கேட்டு மனம் வெதும்பியதன் காரணமாக, தமிழன் தமக்கெனஇருந்த இசை முறை யாது என்று ஆராயத் தொடங்கிஞன். இதன் விளைவு—தமிழனுக்கு உரிய அந்த் தமிழ் இசை எது எனத் தெரியவந்தது.

### தமிழ் இசை உதயம்

7ம், 8ம் நூற்றாண்டுகளிலே வாழ்ந்தவர்கள் மும்மூர்த்திகள்- நாயன்மார்கள்- இந்த நாயன்மார்கள் இயற்றிய மூவர் தேவாரங்கள் ஆயிரக்கணக்கானவை. அவர்களோ இப்பாடல்களுக்கான இசையினை பண் முறையில் அமைத்தார்கள். பண் என்பது இன்று இராகம் என்ற வட மொழிச் சொல்லால் அழைக்கப்படும் இசை அமைப்பாகும். அதாவது அன்று தமிழ் நாயன்மார்கள் பண் என்று கூறியதை இன்று இராகம் என்று கூறுகிறுர்கள்.

### கர்நாடக இசையாக மாற்றம்

நாயன்மார் காலத்தில்—சோழ மன்னர் காலத்தில், தமிரகமெங்கும் துலங்கிய இத் தமிழ் இசை, அதன் பின் வந்த பல்லவ மன்னர் ஆட்சிக்காலத்தில் ஆதரிப்பாரின்றித் தன் பொலிவை இழந்தது. பல்லவ காலத்தில் வட மொழிக்கு அதாவது சமஸ்கிருதத்திற்குக் கூடிய மதிப்புக் கொடுக்கப்பட்டது. இதன் விளைவு—தமிழிலிருந்த பண் முறைகளுக்கு வட மொழிப் பெயர்கள் சூட்டப்பட்டன. தமிழகத்தில் பொலிவிழந்த தமிழிசை கன்னடப் பகுதியிலே வளர்ந்து, கர்நாடக இசையென அழைக்கப்பட்டது.

### தியாகராஜ கீர்த்தனைகள்

பிற்காலத்தில் தெலுங்கு தேசத்தவரான தியாகராஜர் தமிழகம் வந்து கர்நாடக சங்கீதமாக அழைக்கப்பட்ட தமிழிசையைப் பயின்று தெலுங்கு மொழியிலே கீர்த்தனைகளை இயற்றினுர். நாளடைவில் இத் தெலுங்குக் கீர்த்தனைகள் பிரபலமடைந்து பலராலும் பாடப்பட்டு வந்தன. இப்படியாகத் தமிழ் இசை இன்று உருவம் மாறிக் காணப்படுகிறது.

இதனை ஆராய்ந்து அறிந்த தமிழ் இசை அறிஞர்கள் திரும்பவும் தமிழ் இசைதனை அதன் மாறுவேட கோலத்தினை அகற்றிப் புத்துயிர்ப்படுத்த வேண்டும் என அவாக்கொண்டு தெலுங்குக் கீர்த்தனைகளுக்குப் பதிலாகத் தமிழ்க் கீர்த்தனைகளை இயற்றி அவற்றினைப் பாடி வந்தனர். இந்த முயற்சியின் பிரதிபலனே கொழும்பு விவேகானந்த சபையினரின் தமிழ் இசை விழா.

தெலுங்கு மொழிப் பாடல்களைப் பாடுவது முதற் படி. இது ஓரளவு இலகுவானது என்று கூற வேண்டும். ஆனுல் அடுத்த படியாக இன்று வட மொழிப் பெயர்களையுடைய இராகங்களுடைய தமிழ்ப் பெயர்களை ஆராந்து அறிந்து, பழந்தமிழ் பண் இசை முறையைத் திரும்பவும் முன்னணிக்குக் கொண்டு வரல் வேண்டும்.

### தமிழ் இசை விழா

கொழும்பு விவேகானந்த சபையினர், கொட்டாஞ்சேனை விவேகானந்த மேட்டிலுள்ள விவேகானந்த வித்தியாலயத்தில் இத் தமிழ் இசை விழா நடக்கவிருக்கிறது. 31—8—63 சனிக்கிழமை, 1—9—63 ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு தினங்களும் தினமும் மாலை 4 மணிக்கு விழா ஆரம்பமாகி நள்ளிரவு வரை தொடர்ந்து நடைபெறும்.

முதல் நாள் (31—8—63) நிகழ்ச்சி இந்தியத் தூதுவர் மேன்மை தங்கிய திரு. கபூர் அவர்களின் தலைமையிலும் இரண்டாம் நாள் (1-9-63) நிகழ்ச்சி கனேடியத் தூதுவர் மேன்மைதங்கிய திரு. ஜோர்ஜ் அவர்களின் தலைமையிலும் நடைபெறும்.

### பாட்டுக் கச்சேரிகள்

இத் தமிழிசை விழாவில் ஈழத்தின் சிறந்த இசை நாட்டிய வல்லுனர்கள் பங்கு பற்ற இருக்கிறுர்கள். திரு. பரம்தில்லை ராஜா, திருமாட்டிகள்: சரஸ்வதி பாக்கியராஜா, லட்சுமி நடராஜன், பகவதி ரங்கராஜு, கமலா ஹரிஹர ஐயர், ருக்மணி சர்மா, செல்விகள்: கௌரீஸ்வரி கனகரத்தினம், வசந்தி நகுலேசு, பஜனேஸ்வரி தில்லைநாதன் ஆகியோருடைய வாய்ப்பாட்டுக் கச்சேரிகள் விசேட நிகழ்ச்சிகளாக இடம் பெறும்.


### கருவி இசை

பாட்டுக் கச்சேரிகளைவிட திருவாட்டி, சுந்தரலட்சுமி செல்வராஜா, செல்வி சத்தியவதி ராஜு இருவரது கூட்டு வீணைக் கச்சேரி, திருவாட்டி மனேரஞ்சிதம் லோகேஸ்வரம் அவர்களின் கோட்டு வாத்தியக் கச்சேரி, செல்வி பிரேமிளா ஆறுமுகத்தின் ஜலதரங்க இசை, திரு. சிறீதாஸ் அவர்களின் புல்லாங்குழல் இசையும் இடம் பெற இருக்கின்றன.

### பக்கவாத்தியம்

மேற்கூறிய இசை நிகழ்ச்சிகளுக்குப் பக்கவாத்தியங்களாக வயலின் இசையைத்

(13-ம் பக்கம் பார்க்க)



கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் நடைபெறும் இசை விழாவில் பங்குபற்றி நடனம் ஆடும் பிரபல பரத நாட்டிய விற்பன்னர் சுகுமாரன் நாயனுரையும், இலங்கையிலுள்ள கனடா தேசத் தூதுவரின் மகள் செல்வி டொல்பி ஜோர்ஜ் (திருமதி கமலா ஜோண் பிள்ளையின் மாணவி) அவர்களையும் காணலாம்.



முற்றிலும் இலங்கையிலேயே தயாரிக்கப்பட்ட தமிழ்ப் படமான கணபதி பிக்சர்சாரின் 'தோட்டக்காரி' விரைவில் சினிமாஸ் திரைகளுக்கு வருகிறுள். 'தோட்டக்காரி' கதாநாயகியான ஜெயஸ்ரீ ஆனந்தமும், ஆச்சரியமும் மேலிட புன்னகை பூப்பது யாரைப் பார்த்தோ என்பதைத் திரையில் பார்த்தால் தான் புரியும்.

**இசை வல்லுனர்களே! இசை இனிமையானதுதான்**
**ஆனுல் அதனை தேன் மதுரத் தமிழிலே இசைக்கும் போது**
**அதன் இனிமை பன்மடங்காகப் பெருகும்**
**எனவே தமிழிலே பாடுங்கள்!**
**தமிழ்ப் பாடல்களையே புகட்டுங்கள்!**

## எமது விமர்சனம்

### படிப்பினை நிறைந்த பரவசமூட்டுவார்கள் பங்காளிகள்

பணம், படிப்பு, உழைப்பு மூன்றும் ஒன்று சேர்ந்தால் வளர்ச்சிக்குக் கேட்க வேண்டுமா? ஆனுல் இம் மூன்றும் எங்குமே ஒன்று சேர்வது துர்லபம்தான்.

'பங்காளிகள்' படத்தின் மூலக் கதையும் இந்த மூன்றையும் பங்காக வைத்துத் தான் பின்னப்பட்டுள்ளது. பணம் வந்தால் பாசம் பறந்துவிடும் என்ற உண்மையையும் சேர்த்துவிட்ட பின் தான் கதை பிறக்கிறது.

ஏழ்மையில் தவழும் மூன்று குடும்பங்கள் மத்தியில் அன்புப் பிணைப்பு வளர்கிறது — இன்பகரமான வாழ்க்கை நடைபெறுகிறது. ஒருவன் பணத்திஞலும், மற்றவனின் படிப்பிஞலும், மூன்றுமவனின் உழைப்பிஞலும் திருமூர்த்தி அலுமினியத் தொழிற்சாலை சிறப்புடன் வளர்கிறது. பணம் போட்டவன் பாசத்தை மறந்ததனுல் பண்பு குன்றி விடுகிறது.

பணக்காரனுகிவிட்ட திருவாசகத்தின் (ரங்கராவ்) மகன் செல்வராஜ் (எம். ஆர். ராதா) மேல்நாட்டிலிருந்து 'ரத்தக் கண்ணீர்' பாணியில் திரும்புகிறுன். வஞ்சம் தீர்க்க தொழிலாளி (முத்தையா) மகள் மீனுட்சியை (அஞ்சலிதேவி) மணந்து கொடுமைப்படுத்துகிறுன். மீனுட்சியின் அண்ணன் பொன்னையா (ஜெமினி கணேசன்) முயற்சியினுல்



'ஹலோ! மிஸ்டர், உங்களைத் தானே! நீங்கள் என் அழகை ரசித்தது போதும். இந்தப் பாரமான மாலையை எவ்வளவு நேரம் தான் என்னுல் தாங்க முடியும்?' என்று மாலையை எடுத்து விடத் துடிக்கிறுரோ பணத் தோட்டத்தில் சரோஜாதேவி

பிரிந்துவிட்ட பங்காளிகள் ஒன்று சேருகின்றனர்.

பணச் செருக்கிஞலுண்டாகும் தீங்கு, வாழும் முறை தவறி வாழ்வதனுல் வரும் கேடு, பேராசையால் விளையும் நாசம் அத்தனையையும் எடுத்துக் கூறி, பொறுமையால் பெண்மை பெறும் பெருமையை வெளியிடும் புத்திமதிகள் நிறைந்து மிளிர்கிறது ஜரிஸ் மூவி சாரின் "பங்காளிகள்".

'ரத்தக் கண்ணீர்' ராதாவை இதில் காண முடிகிறது. ஜெமினி கணேசன் சோக ரசத்தில்தான் தோன்றுகிறுர்; நடிப்பில் முதலிடத்தை நடிகர் முத்தையா பெறுகிறுர். மற்றும் சாரங்கபாணி, அஞ்சலிதேவி, இ. வி. சரோஜா, துரைராஜ் முதலானேரும் தோன்றுகின்றனர்.

தட்சணுமூர்த்தியின் இசைக்கு இலக்கான பாடல்கள் ஓரளவு திருப்தியாகவுள்ளன. ஒலி, ஒளிப்பதிவுகளும் நன்ருயிருக்கின்றன.

படிப்பினைகள் மலிந்த 'பங்காளிகளை'ப் பார்ப்பது அவசியந்தான்.

—நாதன்.

தமிழரசுக்கட்சி

# சிறந்த ஊழியரை இழந்து விட்டது

—சி. பி. டி. சில்வா

## நீதியும் நியாயமும் கோரிப் போராடும் தலைவர்கள்

—டாக்டர். என். எம்.

## அனுதாபத் தீர்மானத்தின்மீது

### அரசியல் கட்சித் தலைவர்கள் உரை

திருக்கோணமலைப் பிரதிநிதி திரு. ந. இ. இராஜவரோதயத்தின் மரணத்திற்கு அனுதாபம் தெரிவித்துச் சபை முதல்வர் திரு. சி. பி. டி. சில்வா செவ்வாய்க்கிழமை சனப்பிரதிநிதிகள் சபையில் ஒரு தீர்மானத்தைப் பிரேரித்துப் பேசுகையில் "திரு. இராஜவரோதயம் சிறந்த சமூக சேவையாளர்; திருக்கோணமலை மாவட்டத்தில் பல சமூக, கலாசார நிலையங்களின் வளர்ச்சியில் அவருக்கு முக்கிய பங்குண்டு" என்று கூறினார்.

மேலும் சபை முதல்வர் பேசியதாவது: 'இந் நாடு சிறந்த சமூக சேவையாளர் ஒருவரை இழந்துவிட்டது. தமிழரசுக் கட்சி தனது சிறந்த ஒரு கட்சி ஊழியரை இழந்து விட்டது. சபை சிறந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினரை இழந்துவிட்டது. ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் அவரின் செயல் முறையைச் சபையில் சகலரும் போற்றி மதித்தனர்.'

தீர்மானத்தை வழிமொழிந்து எதிர்க்கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயக்கா பேசியதாவது:

'திரு. இராஜவரோதயம் பதினொரு வருடகாலமாக இச் சபையில் தொடர்ச்சியாக அங்கத்தவராக இருந்தவர். இந் நாட்டின் பலமிக்க அரசியல் கட்சியொன்றுக்குத் தலைவராக இருந்திருக்கிறார். வடக்குக் கிழக்கு மாகாணங்களில் அவருக்கிருந்த செல்வாக்குக்கு இது போதிய காரணமாகும். சபையில் சிறிது நேரம் பேசினாலும் நிதானமாகவும் நேர்மையாகவும் பேசினார். இவரது இழப்பினால் சபை சிறந்த உறுப்பினரை இழந்து விட்டது.'

தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் தமிழில் பேசுகையில் கூறியதாவது: 'நாம் சென்ற நான்கு வருடங்களாக எமது கட்சியின் நான்கு பிரதிநிதிகளை இழந்து விட்டோம். இது எமது கட்சிக்குப் பெரிய தொருநஷ்டமாகும். 1959ம் ஆண்டு திருவாளர் வன்னியசிங்கம் மறைந்து போனார். அதற்குப் பிறகு மூதூர்ப் பாராளுமன்ற உறுப்பினர் திருவாளர் ஏகாம்பரம் அவர்கள் காலஞ் சென்றார். அண்மையில் திருவாளர் வே. அ. கந்தையா அவர்கள் மறைந்தார். இப்போது கடைசியாக திருவாளர் இராஜவரோதயம் அவர்கள் மறைந்து விட்டார்.

திரு. இராஜவரோதயம் அவர்கள் எமது கட்சி தொடங்கிய காலம் முதல் உறுப்பினராயிருந்து, இரண்டு வருடங்கள் கட்சியின் தலைவராகவும் கடமையாற்றினார். தமிழ் பேசும் இனத்திற்கு வந்து கொண்டிருக்கும் இன்னல்களின் பலனே அவர்களின் பிரதிநிதிகளையும் ஒவ்வொருவராகத் தாக்கியுள்ளது. சரித்திரப் பிரசித்தி பெற்ற திருக்கேதீஸ்வர ஆலயத்தின் இருப்பிடமான திருக்கோணமலைத் தொகுதிக்கு ஏற்ற ஒரு பிரதிநிதியாகவிளங்கிய இவர், சமயப் பற்று நிரம்பியவராய், தனது சமயத்துக்குப் போதிய சேவை செய்திருக்கிறார். அவரின் ஆவி கோவிலுள்ளும், சுற்றுடலிலும் பரந்திருந்ததெனக் கூறின் மிகையாகாது.

கட்சியைச் சேர்ந்த வரையில் அதன் இலக்குகள், நோக்கங்கள் ஆகியவற்றிற்காக இடைவிடாது பணியாற்றினார். தேவையற்ற விடயங்களில் ஈடுபடாது, நிதானமான பாதையில் தனது கவனத்தையும் செலுத்தி வந்தார்.'

டாக்டர். என். எம். பெரேரா பேசியதாவது:—

'திரு. இராஜவரோதயம் என்னோடு ஆனந்தாக் கல்லூரியில் படித்தவர். அதிகமாகவும் நீளமாகவும் பேசுபவரல்ல. சுருக்கமாகப் பேசினாலும் அர்த்த புஷ்டியோடு பேசுபவர்.

தமிழரசுக் கட்சி இழந்த தலைவர்களுள் இவர் நாலாவதாவர். இது கட்சியின் துர்ப்பாக்கியமாகும். இந்த நாட்டின் இன்றைய நிலையில் நின்று பார்க்கையில், இவர்கள் அனைவரும் நீதியும் நியாயமும் கோரிப் போராடும் தமிழ் இனத்தின் நிலைக்கு எடுத்துக் காட்டாக உள்ளனர். இந்த நாட்டுக்கு நீண்ட காலம் சேவை செய்ய வேண்டிய ஒருவர் குறுகிய காலத்தில் பிரிவது மிகவும் கவலைக்குரியது.'

திரு. எம். சிவசிதம்பரம் பேசியதாவது:—

'திரு. இராஜவரோதயம் சாதி வேற்றுமையை எதிர்த்துப் போராடிய ஒருவர். சட்டத்தின் மூலம் இக் கொடுமையை ஒழிப்பதற்காக ஒரு பிரேரணையைக் கொண்டு வந்தார். கோணேசர் ஆலயத் திருப்பணி வேலையில் முன்னணியில் நின்று உழைத்த பெரியார்.'

திருவாளர்கள் பீட்டர் கெனமன், பிலிப் குணவர்த்தன, தகநாயக்கா ஆகியோரும் பலரும் மற்றும் அன்னாரின் சேவையைப் பாராட்டிப் பேசினார்கள்.

[டாக்டர் நாகநாதனின் பேச்சு பிறிதொரு இடத்தில் உள்ளது.]

## இராஜவரோதயம்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. இராஜவரோதயம், திருக்கோணமலையில் கூட்டுறவு இயக்கம் வெற்றிகரமாக இயங்குவதற்குக் காரணகர்த்தா ஆவர். கூட்டுறவு இயக்கத்தின் பெரிய தூண் அவர். நாட்டிலேயே, திறமையான, நேர்மையான கூட்டுறவு இயக்க ஊழியருள் திரு. இராஜவரோதயமும் ஒருவர்.

நான் அதிகம் கூற விரும்பவில்லை. திரு. இராஜவரோதவம் மிக நல்ல நண்பனாக, மிக அருமையான தோழனாக இருந்தார். திருக்கோணமலையில் மட்டுமன்றி, யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் கூட அன்பு பாராட்டப்பட்ட ஒருவர் இருந்தாரேயானால், அவர் திரு. இராஜவரோதயமேயாவர்.'

## மக்கள் குரல்

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

'விபுலாநந்த காவியம்' என்றொரு நூலினையும் தொகுக்கிறேன்

விபுலாநந்த இலக்கியம் பூரணத்துவமடையவேண்டுமென்று அடிகளாரிடம் உண்மையிலே பற்றுதல் அன்பர்களுக்கு இருக்குமானால் இதுவரை சேர்க்கப்படாத கவிதைகளையும், கட்டுரைகளையும் எமது முகவரியினுக்கு அனுப்பித் தருமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

கட்டுரைகள், கவிதைகள் தங்கள் கைவசம் இல்லாதவர்கள், சேர்க்கப் படாத கட்டுரை, கவிதைகள் எந்த இதழில் எப்பொழுது வெளிவந்துள்ளது, அவைகள் எங்கிருக்கின்றன என்ற தகவலைத் தரும்படி கோருகிறேன்.

கை எழுத்துப் பிரதிகள் பலரிடம் இருக்கக் கூடும். அவ்வாறு சேமித்துள்ளவர்கள் ஓர் பிரதி எடுத்து அனுப்பி உதவுமாறு வேண்டுகிறேன்.

விபுலாநந்த இலக்கியம் பூரணத்துவம் பெற வேண்டுமென்று தமிழ் கூறும் நல்லுலகில் வாழும் அத்தனை தமிழர்களும் விரும்புவார்கள். ஆகவே வெளிவர இருக்கும் இந் நூல்களிலும் சேர்க்கக் கூடியதின் எழுத்துச் செல்வங்கள் வைத்திருப்பவர்கள் தமிழ் வாழத் தந்துதவும்படி வேண்டுகிறேன்.

அருள் செல்வநாயகம்
குருமணவெளி,
கழுவாஞ்சி குடி,
இலங்கை.

## இறுதி யாத்...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒலி எழுப்ப திருமலைத் தலைவனின் பூதவுடலுக்கு இறுதி முத்திரையிடப்பட்டது. உற்றார் உறவினர், உடன் படு தோழர்கள் தங்கள் தோள்களில் சுமந்துசென்று மோட்டார் ரதத்தில் பேழையை வைத்தனர். இறுதி யாத்திரையும் தொடங்கிற்று.

### என்றும் அழியாது

வரலாற்றுப் பெருமை மிக்க கோணேசர் கோயிலுக்கு குடமுழக்கு வைத்துக் குவலயத்தில் பெருமை பெற்றுவிட்ட குணக்குன்று தன் கடமையை முடித்து விட்டு சுடுகாட்டுக் கேகியது. வீதிகளின் இரு மருங்கிலும் விழிகளைக் குளமாக்கிக் கொண்டு திருமலை மக்கள் தங்கள் இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். கற்பூரத்தை வீதிகளிலே எரித்தும் தமது பக்தியை மக்கள் தெரிவித்தனர். மலர்களைத் தூவித் தங்கள் மன்னனை மக்கள் வாழ்த்தி வணங்கினர்.

கதிரோன் மறைந்து இருள் கவிழ்ந்த சிறிது நேரத்துக்கெல்லாம் சுடு காட்டில் வைத்து தனது தந்தையின் சிதைக்கு திரு. இராசவரோதயத்தின் மகன் சிறீதரன் தீ மூட்டினான்.

## தேமதுரத்.....

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

திருவாளர்கள்: மணி ஐயங்கார், பிச்சையப்பா, சங்கரலிங்கம், சிவஞானம் ஆகியோரும், மிருதங்க இசைசைத் திருவாளர்கள்: இரத்தினம், சந்தானக்கிருஷ்ணன் கணேசசர்மா, அச்சுதன், விஸ்வநாதன், செல்வன் நேசதுரை தியாகராஜன் ஆகியோரும், கிளரினெட் இசையை திரு. சுப்பையா அவர்களும் அளிப்பார்கள்.

### நாட்டிய நிகழ்ச்சிகள்

விழாவிலே ஒரு முக்கிய அங்கமாக அமையும் நாட்டிய நிகழ்ச்சிகளில் சிறந்த நடன நட்டுவாங்கரான சுகுமாரன் நாயரின் தேரோட்டி நடனமும் அவருடைய மாணவிகளான செல்விகள்: ருக்மணி வைத்தியநாதன், விஜயலட்சுமி வைத்தியநாதன், தங்கம் வைத்தியநாதன் ஆகியோரின் நடனங்களும் விழாவுக்கு அணி செய்யும்.

### கனடா தூதுவரின் மகள்

அடுத்து மேலை நாட்டு மங்கையான கனடாத் தூதுவர் மகள் செல்வி டொல்பி ஜோர்ஜ் அவர்களின் நாட்டியம் முக்கியமானது. திருமதி ஜோன்பிள்ளையின் மாணவியான செல்வி டொல்பி பரத நாட்டியக் கலையில் பற்றுதல் கொண்டதுடன் அதனை சிறப்பாகக் குறுகிய காலத்தில் பழகியமை உண்மையில் போற்றுதற்குரியது.

சிறிது காலத்திற்கு முன்னர் சிறந்த நடன நிகழ்ச்சி ஒன்றைக் கொழும்பில் நடாத்திய வீரசத்திப்பிள்ளை உபாத்தியாயரின் கொட்டாஞ்சேனையிலுள்ள கலையரங்கம் அடுத்த நிகழ்ச்சியை அளிக்கிறார்கள். அந்த நிகழ்ச்சியில் செல்விகள் மனோரஞ்சிதம் சச்சிதானந்தம், லலிதாம்பிகை, சுகிர்தலிங்கம், விக்னேஸ்வரி காளிமுத்து, மாலினி செல்லத்துரை, கலைவாணி சுகிர்தலிங்கம் ஆகியோர் பங்குபற்றுவர். கலா ரசிகர்களுக்கு இதம் அளிக்கும் நிகழ்ச்சியாகும் இது.

### மறுமலர்ச்சி

இதுவரை காலமாக நடத்தாத இத்தகையதொரு விழாவினை நடத்தி தமிழிசையை வளர்க்க—தமிழிசையின் சிறப்பினை தமிழ் பேசும் மக்களுக்கு எடுத்துக் காட்ட இச் சபை எடுத்துள்ள முயற்சிக்குச் சபையில் ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சி காரணமாக இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது

நிகழ்ச்சி வெற்றியோ தோல்வியோ என்பது முக்கியமல்ல. முயற்சி போற்றத்தக்கது. ஆதரிக்கப் பட வேண்டியது.

---

திருமலை மக்களின் உள்ளங்களிலே தியாக உணர்வையும் தமிழின் சிறப்பையும், பக்தியின் மேன்மையையும் பரப்பிய புனிதனின் பூதவுடல் தீத் தியோனின் கொடுமைக்கு இலக்காகியது.

அன்பு நிறைந்த மக்களின் உள்ளங்களில் அழித்தெழுத முடியாத அமரச் சித்திரமாக அமைந்துவிட்ட அண்ணல் இராசவரோதயனின் உருவம் தீச்சுவாலையால் மறைந்தது தமிழ் பேசும் மக்களின் உள்ளங்களில் அத்தீ கொழுந்து விட்டெரிந்தாலும் அதே உள்ளங்களில் ஆழப் பதிந்த அமரனின் உருவை என்றும் அழிக்காது.

## பண்டாரா.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தல்களாலும் தாக்கத் தொடங்கினர். எத்தனை தரம் வாழவிருப்பது. சில இடங்களில் தற்பாதுகாப்புக்காக தமிழ் பேசும் மக்கள் திருப்பித் தாக்கினார்கள். முதுகெலும்பில்லாக் காடையர்கள் ஓட்டமெடுத்தனர்.

ஆனால், அதுவரை வாளாநின்ற பொலீஸ்படை அப்போதுதான் விழித்தது. அட்டூழியம் செய்த காடையரைக் காப்பாற்றவோ என்னவோ மாநாட்டிலிருந்து திரும்பியவர்கள்மேல் தடியடி நடத்தினர்களாம் அடி மட்டுமா காடையர்கள் உபயோகித்த அதே 'கள்ளத் தோணி' என்ற சொல்லைச் சில பொலீஸார் உபயோகித்தார்கள் என்று அறியப் படுகிறது.


கூடிச்சென்ற தமிழ்பேசும் மக்களை பொலீசார் தனித் தனியாகக் கலைத்தனர். பொலீசாரின் கயமைத் தனத்தால் தமிழ் மக்களையப் புடைக்கப்பட்டது மல்லாமல் தனித்தனியே திக்குத் தெரியாது திண்டாடினர் என்றும் செய்தி கிடைத்துள்ளது. இது போதாதா காடையர்களுக்கு. தனியாகச்சென்றோரை நையப் புடைத்து அவர்கள் உடைமைகளைக் களவாடிச் சென்றனர். பொலீசாரோ பாராமுகமாக நின்றனர்.

தனியாகக் காடையரிடம் அகப்பட்டோருக்கு அடி, உதை, வசைமொழிகள் மட்டுமல்லாமல் செருப்படியும் கொடுத்து மனம் ஆறினர்கள்காடையர்கள். ஆனால் கூட்டமாக வந்தவர்களைப் பல் இழித்து மரியாதையுடன் வழியனுப்பி வைத்தனாராம்.


பரிசுகள்

இருபாலார்க்கும்...

லிதா



ஆண்களதும், பெண்களதும் கைக்குட்டைகள்

மிகச் சிறந்த பருத்தி—சமீபத்திய, ஜனரஞ்சகமான டிசைன்கள்—மூன்றும், ஆறும், ஒரு டசனுமாகப் பாக்கெட்டுகளில்; பரிசுப் பாக்கெட்டிலும் — எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

மொத்தமாகவும், இல்லறையாகவும்

ஏக விநியோகஸ்தர்கள்:

குண்ணமால்ஸ் லிமிட்டெட்,
110 & 114, மெயின் வீதி,
கொழும்பு.

—Mylads




## எங்கள் கோரிக்கைகள்

—எஸ். அப்துல் கபூர், கொழும்பு.—

அன்புக் குழந்தையை விட எங்களைச் சீராட்டி வளர்ப்பவர்கள் உண்டு. அப்படிப்பட்டவர்களுக்கு நாங்கள் என்றும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். கிளை விட்டுக்கிளை தாவிச் செல்லும் எங்கள் அழகைக் கண்டு அற்புதமாகக் கவிதை எழுதும் கவிஞர்களும் இருக்கிறார்கள். எங்கள் இனம், கனவிலும் உங்களுக்கு உபத்திரவம் கொடுக்க எண்ணியதே கிடையாது.

நாங்கள் பாடுபட்டு எங்களுக்கு வேண்டிய கூட்டை நாங்களே கட்டிக் கொள்கிறோம். மரத்தில் விளையும் கனிகள் பழுத்ததும் அவற்றை உண்டு எங்கள் பசியைப் போக்கிக் கொள்கிறோம். ஆனால் அந்தக் காலம் மாறிவிட்டது போலும். அதனால்தான் கனிகள் காயாக இருக்கும்போதே பொது விற்பனைக்குப் பறித்துக் கோடிக் கணக்காகச் சம்பாதிக்க எண்ணி விட்டார்களோ? பிஞ்சுக் கனியைக்கூட மரத்தில் பாக்கி இல்லாமல் எல்லாவற்றையும் பறித்துக் கொள்வதுதான் எங்களுக்கு கோபத்தை உண்டு பண்ணும் செயலாக இருக்கிறது. இப்படி நீங்கள் செய்யலாமா?

நீங்களே எல்லாக் கனிகளையும் பறித்துக் கொண்டு போய்ச் சாப்பிட்டால் நாங்கள் எதைத் தின்று உயிர் வாழ்வதாம்? நீண்டு வளர்ந்திருக்கும் தென்னை மரங்களைப் பார்த்துத்தான் நாங்கள் எங்கள் கூட்டைக் கட்டிக் கொள்கிறோம். அப்படி நாங்கள் அந்தரமான இடத்தில் எங்கள் கூட்டைக் கட்டிக்கொள்ளாவிட்டால் எங்களுக்கென்று சில எதிரிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள் எங்களைச் சித்திரவதையில் கொன்றுவிடுவது உறுதி.. எனவேதான் அவர்களுக்கு எட்டாத இடத்தில் நாங்கள் வாழ்கிறோம்.

நீங்கள் வளர்க்கும் மரங்களுக்கு ஒழுங்காகத் தண்ணீர் ஊற்றி வளர்க்காததால் அவைகள் கோணலாக வளர்ந்து விடுகின்றன. இதனால் நாங்கள் கிளை விட்டுக் கிளை தாவிச் செல்ல மிகக் கஷ்டமாக இருக்கிறது. எனவே இனிமேல் மரங்களை வளர்க்கும்போது அதற்கான பக்குவத்தோடு வளர்க்கத் தவறக் கூடாது. சில மரக்கிளைகள் காய்ந்துபோய் அந்தரத்தில் தொங்குகின்றன. இதை அறியாத எங்கள் குட்டிகள், விளையாடிக் கொண்டு, இப்படிக் காய்ந்து போன கிளைக்குத் தாவும்போது, அது முறிந்து விழுந்து விடுகிறது. இதனால் எங்கள் குட்டிகள் இறந்து விடுகின்றன. அதிர்ஷ்ட வசமாக, காயங்களுடன் தப்பித்துக் கொண்டாலும், அதற்குச் சிகிச்சை செய்ய எங்களிடம் மருந்தும் இல்லை. காய்ந்துபோன கிளைகள் இருந்தாலும் வெட்டிவிட வேண்டும். உங்கள் வீட்டுக்குத் தேவையான தென்னை மரங்களை வெட்டும்போது, அதில் எங்கள் இனம் இருக்கிறதா இல்லையா என்பதைத் தெரிந்து கொண்ட பிறகுதான், அந்த மரத்தை வெட்ட வேண்டும், என்ன?

உங்கள் வீட்டில் எங்கள் இனத்தவர்களை விளக்கு வெளிச்சத்தில் வளர்க்காமல் நல்ல இயற்கை வெளிச்சத்தோடு, காற்றோட்டமும் உள்ள இடத்தில் வைத்தே வளர்க்க வேண்டும். அது மட்டுமல்ல; உங்கள் வீடுகளில் இருக்கும் பொல்லாத பூனை எங்களைக் கண்டால் கொன்றுவிடும். எங்கள் இனத்தை நீங்கள் எடுத்து வளர்க்க விரும்பினால், உங்கள் வீட்டில் இருக்கும் பூனைகளை வேறு எங்கேயாவது கொண்டுபோய் விட்டுவிடுங்கள்! இல்லாவிட்டால் எங்கள் சுதந்திரம் பறிபோக நீங்களே காரணம் ஆவீர்கள்!

[இக் கட்டுரையாளர் எந்தப் பிராணியைக் குறிப்பிடுகிறார் என்று உங்களுக்குத் தெரியுமா? தெரிந்தால், எழுதியனுப்புங்கள்.

சரியான பதில் எழுதி அனுப்புவோரின் பெயர்ப் பட்டியல் இப்பகுதியில் வெளியிடப்படும்.]

## தம்பீ! கேள்!

—'காரையூர் அருணு'—

அன்புள்ள தம்பிக்கு!

உனது மடல் கண்டேன். அதில் உனது மனக்கவலை கண்டேன். மாறாச் சோகமும் மறையாக் கவலையும் உன்னைப் பீடித்திருக்கின்றன. பாடுபட்டுப் படித்தேன், பதவி கிடைக்கவில்லையே என்று எழுதியிருந்தாய். ஐயோ! பைத்தியமே! கோழையா நீ? கோழைகள் கூடக் குமுறி எழுகிறார்கள் இன்று.

உனது வளமான நெற்காணி வாவென்று அழைக்கிறது. அதை வளங்கொழிக்கும் நிலமாக்கப் புறப்படு. "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்று உறுதி கொள். அது போதும் உனக்கு. தொழுதுண்டு வாழ்வதை விட உழுதுண்டு வாழ்வது மேலானதல்லவா?

படித்தாய், பரீட்சையிற் சித்தியடைந்தாய். சர்க்கார் உத்தியோகம்கிடைக்குமென்று எதிர்பார்க்கிறாய். இன்றைய உலகில் அது பகற் கனவு. அவர் சொன்னார் இவர்சொன்னாரென்று ஏமாளியாக இன்னும் எத்தனை காலம்தான் சுற்றப் போகிறாய்?

உனது கடந்தகாலத்தை எண்ணிப்பார். யார் யாரையோ சந்தித்தாய். எதை யெதையோ எழுதினாய். ஏறாத படியெல்லாம் ஏறி இறங்கினாய். கிடைத்ததா தொழில்? இல்லை. ஊழல்கள் மலிந்த இந்த உலகத்தில் உன்னை யார் கவனிக்கப் போகிறார்கள்? உன்னிடம் பணமென்ன கொட்டியாகிடக்கிறது, அள்ளி வீச? பணமிருந்தால் பத்துப் பேர் உன்னைச் சுற்றுவார்கள், இல்லையேல் 'இல்லானை இல்லாளும் வேண்டாள்'என்ற முது மொழியை எண்ணிப் பார்.

இன்பமும் துன்பமும் ஒருவர் பங்கல்ல. மற்றவரைக் கண்டு நீ பொறாமைப் படாதே. உனக்கும் காலம் வரும். காலம் வந்தால் வாழ்வு வரும். இந்த உலகத்துக்கு வந்து விட்டாய். அது தெரியுமுனக்கு. போவது தெரியவில்லை. பொறுத்திரு.

பொறாமையே உலகத்தின் எதிரி. கூடியிருந்து குடி கெடுக்கும் கும்பல்கள் மலிந்தது இந்த உலகம். நாலு பேர்கள் நாலைச் சொல்லுவார்கள். நமக்கென்ன அதைப் பற்றி? படித்திருக்கிறாய். பகுத்தறிவு இருக்கிறது. பண்போடு நடக்கத் தெரியுமுனக்கு. வரட்டுக் கௌரவத்தை யெண்ணி வயல் வேலையைப் புறக்கணித்து விடாதே. செய்யும் தொழிலே தெய்வம். அதையே போற்றிப் புகழ்.

மலையிலே தோன்றிக் கடலிலே மடியும் நதியைப் போன்ற தல்ல மனித வாழ்க்கை. வளர்ந்து வரும் சமுதாயத்தின் வளமிக்க வாலிபன் நீ. உன் சமுதாயத்துக்கு நீ செய்ய வேண்டிய வேலைகள் அனேக முண்டு. வீட்டிலே பூட்டுண்டு கிடக்காமல் நாட்டுக்குச் சேவை செய்யப் புறப்படு. அதுவும் தமிழ்ச் சேவை செய்யப் புறப்படு. அன்று தமிழைப் புகழ்ந்தவர்கள் இன்று இகழ்கிறார்கள். ஏன்! தமிழனே தமிழை இகழ்கிறான். காரணம் பதவி வேட்கை.

இந்த இழிநிலை மாற வேண்டும். மாற்றியமைக்க வேண்டும். "தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவவேண்டும்". இதுவே பாரதி கண்ட கனவு. இதை நிறைவேற்றிவை. அதுவே சிறந்த தொண்டு.

இப்பணியைச் செய்யும் போது உனக்கு எத்தகைய இன்னல் வந்தாலும் பரவாயில்லை. போற்றுவதும் தூற்றுவதும் மனித இயல்பு. அதைக் கண்டு அஞ்சாதே.

நாமும் வாழ வேண்டும், சீரும் சிறப்பும் பெற்றுப் பேரோடும் புகழோடும் வாழ வேண்டுமென்ற எண்ணமிருந்தால இதுவே உனக்குச் சிறந்த தொழிலாகும்.

இப்படிக்கு,
அண்ணன் பாண்டியன்.

அன்புள்ள மருமக்களே!

எம்மிடையேயிருந்து இன்னுமோர் தலைவர் பிரிந்து சென்றுவிட்டார். ஆமாம், திருமலைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. இராஜவரோதயத்தைத்தான் குறிப்பிடுகிறேன்.

தனது இனத்தின் உரிமைகளைப் பாதுகாக்கப் பாடுபட்ட செம்மல், பேச்சில் சுருக்கமும் செயலில் பெருக்கமும் கொண்ட பெரியார், தமிழ் பேசும் இனத்தின் போராட்டத்தின் முக்கிய கட்டத்தில் எம்மிடமிருந்து பறிக்கப்பட்டு விட்டார்.

காலத்தை வெல்ல யாரால் முடியும்?

மறைந்த தலைவருக்கு மருமக்களாகிய நீங்கள் அனைவரும் அஞ்சலி செய்வீர்களாக. அவருடைய இலட்சியம் ஈடேற நீங்கள் அயராது உழைப்பீர்களாக.

வணக்கம்.

உங்கள் அன்பின்,

வளர்மதி மாமா

மர்மத் தொடர் கதை:

## புதுமைத் திருடன்

—மாஸ்டர் சிவலிங்கம்—

வழியில் தென்பட்ட ஒரு ஹோட்டலைச் சற்று நேரம் பார்த்துக்கொண்டே நின்றான். என்ன முடிவிற்கு வந்தானோ தெரியவில்லை... திடுதிப்பென்று உள்ளே நுழைந்தான்.

வயிறு முட்டச் சாப்பிட்டு விட்டு, பையன் கொடுத்த 'பில்'லுடன் கணக்காளரின் மேசையை நோக்கி வந்தான். கணக்காளர் பத்திரிகையுங்கையுமாக 'புரட்சி சதி' வழக்குச் செய்தியைச் சுவாரஸ்யமாகப் படித்துக் கொண்டிருந்தார். இலேசாக இருமினான். கணக்காளர் அசையவில்லை. புன்முறுவலுடன் 'பில்'லைக் கசக்கிப் பையில் திணித்துக் கொண்டு மெள்ள நடையைக் கட்டிவிட்டான்.

சிறிது நேரம் கோட்டை முனைப் பாலத்தின் இயற்கை அழகை ரசித்தபடி நின்றான். எதிரில் வந்த பொலீஸ்காரர் ஒருவரைக் கண்டதும் அவன் உடல் இலேசாக நடுங்கியது. குற்றமுள்ள நெஞ்சல்லவா? குறுகுறுக்குந்தானே?

அரைகுறை ஆங்கிலத்தில் அப்பொலீஸ்காரருடன் பேசித் தபால் நிலையத்திற்குச் செல்லும் பாதையைத் தெரிந்துகொண்டு அங்கு சென்றான். அவசர அவசரமாக சிங்களத்தில் கடிதமொன்றெழுதித் தபாற்பெட்டியில் சேர்த்தான். அப்போது, அவனுடைய வாய் 'டிங்கிரி பண்டா' என்று முணுமுணுத்தது.

தந்தி அனுப்பும் பகுதியில் காணப்பட்ட ஒரு கனவானிடமிருந்த விலையுயர்ந்த தங்கமுடி போடப்பட்ட பவுண்டன் பேனா அவனது கவனத்தை ஈர்த்தது. அவசரத் தந்தி ஒன்று எழுதி விட்டுத் தருவதாகக் கூறி அக் கனவானிடம் பேனாவை வாங்கிக்கொண்டு சிறிது நேரம் அப்படியும் இப்படியும் நடந்து கொண்டிருந்தான். அக்கனவான் தன்னைக் கவனிக்கவில்லை என்பதை நிச்சயப்படுத்திக் கொண்டதும், பவுண்டன் பேனாவுடன் பஸ் நிலையத்தை நோக்கி விரைந்தான்.

பஸ் நிலையத்தை அடைந்து, 'தினத்தந்தி' படித்துக்கொண்டிருந்த ஒருவரிடம் சென்று "கல்முனைக்குப் போக பஸ் இப்போது கிடைக்குமா?" என்று கேட்டான். "அதோ கிடக்கிறதுதான் கல்முனை பஸ். இன்னும் கொஞ்ச நேரத்தில் புறப்படும்" என்றார் அம்மனிதர். "தினத்தந்தியைக் கொஞ்சம் தாருங்கள் பார்த்துவிட்டுத் தருகிறேன்" என்று கூறி, பத்திரிகையைப் பெற்றுச் சினிமாச் செய்திகளைப் படித்துக் கொண்டிருந்தான். அப்போது... கல்முனை பஸ் புறப்பட்டுக் கொண்டிருந்தது. திடீரென்று பாய்ந்தோடி அந்தப் பஸ்ஸில் தொத்திக் கொண்டான். "தம்பி! தினத்தந்தியைத் தந்துவிட்டுப் போ......" என்று கத்திக் கொண்டே ஓடினார் உரிமையாளர். பஸ் உறுமலுடன் கரும்புகையைக் கக்கிக் கொண்டே நகர்ந்தது. கறுப்புக் கண்ணாடியின் முகத்தில் வெற்றிப் புன்னகை படர்ந்தது.

அரசடிச் சந்தியிலிருந்து அப்பஸ்ஸில் ஏறிய ஒரு ஆசிரியர் கறுப்புக் கண்ணாடி ஆசாமிக்குப் பக்கத்தில் அமர்ந்து கொண்டு, "நான் சரியாக ஒன்றரை மணி நேரமாகக் காத்துக் கொண்டிருந்தேன்...... பஸ் கிடைக்கவேயில்லை. தேசியமயமாக்கப்பட்ட பின்பு பஸ் சேவை மகா மோசம்...... முன்பெல்லாம் அடிக்கடி 'வான்'களாவது ஓடும்... இப்போ அவைகளைக் கூடக் காணோம்" என்று அலுத்துக் கொண்டார்.

அந்த ஆசிரியரின் கூற்றை அப்படியே ஆமோதித்து ஒத்துப் பாடினான் அந்த இளைஞன். சற்று நேரச் சம்பாஷணைக்குப் பின் இருவரும் நண்பர்களாகி விட்டனர். இளைஞனின் கையிலிருந்த 'தினத்தந்தி' ஆசிரியரின் கைக்கு மாறியது. ஆசிரியர் பத்திரிகையில் ஆழ்ந்து விட்டார்.

இளைஞன் சுற்றுமுற்றும் பார்த்தான்... யாரும் தன்னைக் கவனிக்கவில்லை என்பதை அறிந்ததும், ஆசிரியருடன் மிகவும் நெருங்கி உட்கார்ந்து கொண்டான். சற்று நேரத்தில் அவனுடைய கை ஆசிரியரின் வாலாமணிப் பையை மெதுவாகத் தடவிக்கொண்டிருந்தது. பையில்... கனமான ஒரு 'மணிபர்ஸ்' தட்டுப்பட்டது. தனது பையில் கையை விட்டு ஒரு புத்தம் புதிய கத்தரிக்கோலை வெளியே எடுத்தான். சிறிது நேரத்தில், ஆசிரியரின் வாலாமணிப் பை, 'மணிபர்ஸ்' சகிதம் கறுப்புக் கண்ணாடியின் பையில் நுழைந்தது. அடுத்த கணம்... "ஹோல்டோன்! ஹோல்டோன்!!" என்று பதறிப்போய்க் கத்தினார் ஆசிரியர். கறுப்புக் கண்ணாடிக்கு வியர்த்துக் கொட்டியது. அப்போது......

(தொடரும்)

### புகழ் பெற்ற இரட்டையர்கள்!

அணு ஆயுத தடை ஒப்பந்தத்தை அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா ஆகிய நாடுகள் கைச்சாத்திட்டதை யொட்டி, தனக்குப் பிறந்த இரட்டைக் குழந்தைகளுக்கு, இங்கிலாந்து நகைச்சுவை நடிகர் ஒருவரின் மனைவி, அமெரிக்க ஜனாதிபதி கென்னடியினதும், ரஷ்யப் பிரதமர் குருசேவினதும் பெயர்களைச் சூட்டியிருக்கிறார்.

# இடத்திற்கேற்ப...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கலையின் தழுவல் பெற்றது என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்ட பொழுது, ஆணித்தரமாகப் பதிலிறுத்து அதன் தனித்துவ மகிமையைச் சிறப்புற விளக்கினர்.

## இலங்கையும் இந்தியாவும்

இந்தியாவின் அண்மை நாடாகிய இலங்கையில் திராவிட கலை, சமூகக் கலப்புகள் தொல் பழங்காலம் முதலே இருக்கிறது என்று அவர் ஆராய்ந்து எடுத்துக் காட்டியுள்ளார்.

"இலங்கையின் சாதிப் பாகுபாடுகள் தென்னிந்தியாவில் திராவிட சாதிப் பாகுபாட்டை ஒத்திருக்கிறது. இந்துக்களின் நால் வர்ணச் சாதிப் பிரிவிலிருந்து பெரிதும் வேறுபட்டது இது. சிங்கள மக்கள் தொல்காலம் தொட்டு தென்னிந்தியத் தமிழருடன் இடையரு நெருங்கிய தொடர்பு பூண்டிருந்தனர். "இந்த அமைப்பில் உழவன் (வேளாளன்) முதலிடம் பெற்றுன். ஆரிய நாகரிகத்தின் பரவலுடன் பிராமணீய அமைப்பு, உழவனுக்கும் (வேளாளன்) மேலான இடத்தில் பிராமணனையும், சைத்திரியனையும், சாதி அமைப்பில் வைப்பதற்காக திராவிட அமைப்பின் மீது வலுக்கட்டாயமாகத் திணிக்கப்பட்டது." கலைத் திறனுய்வில் திறமையுடன் இலங்கிய ஆனந்தக் குமாரசுவாமி தானும் ஒரு கலைஞனுகவும் இருந்தார் என்பது பெருமைக்குரிய அரிய வாய்ப்பு என்றே சொல்ல வேண்டும். கலைஞனைப் பற்றிக் குறிப்பிடும் போது "கலைஞன் விசித்திரமான மனிதனல்ல; ஒவ்வொரு மனிதனும் சிறப்புறும் ஏதோ ஒருவகைக் கலைஞனுக இருக்க 'முடியும்'' என்ருர். மேலும் கலைஞனின் கடமையை விளக்கும் போது பின் வருமாறு கூறினர்.

## கலைஞன் யார்?

"கலைஞரின் கடமை திருப்தி அளிப்பது மட்டுமல்ல; கட்டாயம் அறிய வேண்டிய ஒன்றைக் காணும் போதோ கேட்கும் போதோ மகிழ்வூட்டுவதாக இருக்க வேண்டும்; உறுத்தக் கூடிய அளவில் அது விளக்கப்படவும் வேண்டும்''

இதிலிருந்து கலைஞனின் பணி உயர்ந்த பணி; கலை வெறும் பொழுது போக்குக்கு உரியதல்ல, கலை வாழ்க்கையுடன் ஒட்டிய கட்டாய நிலை என்பன போன்ற கருத்துக்களை அன்னுர் வலியுறுத்திஞர் என்பது தெளிவாகத் தெரிகிறது.

கலை வாழ்வில் ஊறித் திளைத்த ஆனந்தக் குமாரசாமி, உலகில் உள்ள நிலப் பரப்பில் ஒவ்வொரு இடத்து மண் ஒவ்வொரு பயிர்ச் செய்கைக்கு மட்டும் ஏற்றதாக இருப்பது போல், மனித கலாசாரமும் ஒவ்வொரு இடத்துக்கு இடம் வேறுபட்டிருக்கிறது என்கிருர். அதில் ஒரு பயிர் வளர வேண்டிய இடத்தில் இன்னெரு பயிரை நடவோ, இருப்பதைப் பிடுங்கி எறிவதோ செய்வது வெறும் அறிவீனம் என்ருர். அதுபோலவே ஒரு கலாசாரத்தின் மீது இன்னென்றைத் திணிப்பதும், இருக்கும் கலாசாரத்தை அழித்துத் தனியொன்றைப் பரப்ப முயல்வதும் வெறும் அறிவீனம் என்ருர். பல்வேறு கலாசாரங்கள் ஒன்று கூடி ஒரு தேசிய கலாசாரத்தை உருவாக்க வேண்டும், அல்லது உலக கலாசாரத்தை உருவாக்க வேண்டும். ஆனல் இந்தத் தனித் தனி கலாசாரங்கள் தத்சம் தனித் தன்மையை இழக்காது பாதுகாத்து இந்தக் கூட்டுத் திரட்சிக்கு உதவ வேண்டும் என்பது அவர் கருத்து. "ஆத்மீகம் என்ற மொழியின் பல்வேறு கிளை மொழிகளே மனித கலாசாரங்கள்'' என்று அவர் அதற்கு விளக்கம் தந்துள்ளார்.

## பொன் மொழிகள்

இந்தியா சுதந்திரம் பெற்ற பொழுது இந்தியக் கலைகளுக்குப் புத்துயிர் அளித்துப் பல்வேறு நாடுகளிலும் அதன் மகத்துவத்தைப் பரப்ப வேண்டும் என்ற எண்ணம் ஆனந்தக் குமாரசாமிக்கு உதயமாகிற்று. அவர் சொன்ன பொன்மொழிகள் இங்கு குறிப்பிட வேண்டியவை.

"பிரான்சைப் போலவும் ஏனைய நாடுகளைப் போலவும், ஒவ்வொரு வெளிநாட்டுத் தூதுவராலுவலகங்களிலும் எங்கள் கலாசாரத் தொடர்பு அதிகாரி ஒருவரை நியமிக்க வேண்டும். இந்தப் பணியை மேற் கொள்பவர்கள் ஆதியும் அந்தமும் இந்தியர்களாக இருக்க வேண்டும். அவர்கள் அதே நேரத்தில் உலகக் குடிகளாகவும் இருக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும்''

இந்தக் கருத்துப்படி, ஒரு வங்காளியன் தான் வங்காளியன் என்றும், ஒரு குசராத்தி தான் குசராத்தி என்றும் ஒரு தமிழன் தான் தமிழன் என்றும் உணர்ந்தால் தான் தன் மொழியையோ, கலையையோ, கலாசாரத்தையோ காக்கவும் முடியும்; மற்ற மொழி கலை, கலாசாரங்களை மதித்து நல்லுறவுடன் உலக அடிப்படையிலும் வாழ முடியும். தன் நிலைகெட்ட ஒரு இன மக்கள் சர்வதேசியம், ஐக்கியம் பேசுவது வெறும் பித்தலாட்டம்- தன்னை மறந்த அடித்தளமற்ற வெறும் கற்பனைக் கோட்டை அசல் வெளிப் பூச்சேயன்றி உருப்படியாக இதில் ஒன்றுமில்லை.

இந்த உணர்விஞலோ என்னவோ, பாக்கிஸ்தான் பிரிந்த பொழுது ஆனந்தக் குமாரசாமி அவர்கள் இந்தியா பல்வேறு தனி நாடுகளாக அல்லது ஒரு கூட்டணியிலுள்ள பல நாடுகளாகப் பிரிவது நல்லது என்ற கருத்தைத் தெரிவித்தார்.

"இந்தியா பல தனி நாடுகளாகப் பிரிவது நல்லது. அல்லது மத்திய அரசுக்கு வேண்டிய அதிகாரங்களை விட்டு விட்டு ஒரு கூட்டணியில் தனிப் பிரதேசங்களாகப் பிரிவது நல்லது." ஆனந்தக் குமாரசாமியின் இந்தப் பழுத்த தீர்க்கதரிசனம் இன்று முழுமை பெருவிட்டாலும் ஓரளவாவது அமைவுற்றிருப்பது கவனிக்கத் தக்கது. வருங்காலம் இதை உண்மையாக்கலாம்.

## சிரஞ்சீவிக் கலைஞர்

பன்மொழிப் புலவனுய், பல்கலை விற்பன்னனுய், பிற நாட்டார் மதிக்கும் நல்ல புலமையுடன் வாழ்ந்தார். பொசுட்டன் கவின் கலை அரும்பொருட் சாலைக்குப் புது மெருகு தந்தார். இலங்கை அரும்பொருட் சாலையின் உதவியுடன் "ஈழத்தின் (சிலைகள்) வெண்கலங்கள்" என்ற ஆராய்ச்சி நூலை வெளியிட்டார். ஈழத் தமிழரின் புலமையை எடுத்துக் காட்டிய அறிஞருள் இவரும் ஒருவர். இவரது ஆராய்ச்சிப் புலமைக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாது இன்றுவரை இருப்பது அவர் புலமையின் தனிச் சிறப்பினைக் காட்டுகிறது. அவர் 1947-ம் ஆண்டு செப்றம்பர் மாதம் 9-ம் திகதி இறந்தார். ஆனல் அவர் கலையுலகில் இன்னும் வாழ்கின்ருர்; என்றும் வாழ்வார்.

# பயிற்றப்பட்டு வேலையற்றிருக்கும் ஆசிரியர்களின் நிலை

அண்மையில் கிழக்கிலங்கையில் வேலையற்றிருக்கும் ஆசிரியர்கட்கு நியமனங்கோரி வெளிவந்த அறிக்கையை யாவரும் அறிந்திருப்பர். அவ்வறிக்கையில் கிழக்கிலங்கையில் வேலையற்றிருக்கும் ஆசிரியர்கட்கு மாத்திரம் விமோசனம் கோரப்பட்டிருந்ததே தவிர ஏனைய பகுதிகளில் வேலையற்றிருக்கும் தமிழாசிரியர்கள் சம்பந்தமாக எதுவும் குறிப்பிடப்படவில்லை. எனினும் நாம் எமது கஷ்டங்களைக் குறிப்பிடும்போது இலங்கையில் உள்ள வேலையற்றிருக்கும் பயிற்றப்பட்ட தமிழாசிரியர்கள் எல்லோரையுமே குறிப்பிடுகின்றேம். எல்லோருக்குமாகவே கீழ்வரும் விடயங்களை ஞாபகமூட்டுகிறேம்.

மேற்கண்டவாறு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பயிற்றப்பட்ட வேலையற்ற ஆசிரியர் ஒருவர் சுதந்திரனுக்கு ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார். அவ்வறிக்கையில் அவர் தொடர்ந்து கூறியதாவது:-

1959ம் ஆண்டு டிசம்பரிலும் அதன்பின்னரும் பயிற்சி முடித்து வெளிப்பட்ட நூற்றுக்கு உட்பட்ட தொகையினரான தமிழாசிரியர்கள் தமது பெயர்களைக் கல்விப் பகுதி வேலையற்ற ஆசிரியர் அட்டவணையிற்பதிவுசெய்துவிட்டு நியமனங் கிடைக்கும், கிடைக்கும் என எதிர்பார்த்துக் கொண்டு இதுவரை ஏறக்குறைய நான்கு வருடங்களாக வேலையற்றிருக்கின்றனர். வேலையற்ற தமிழ் ஆசிரியர் சங்கம், அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழாசிரியர் சங்கம், பாராளுமன்ற அங்கத்தவர்கள் முதலியோர், இவர்களது கஷ்ட நிலையை கௌரவ கல்வி மந்திரிமார்கள், கல்விப்பகுதி மேலதிகாரிகள் முதலியோரிடம் நேர்முகப் பேட்டி மூலமாகவும், பத்திரிகை வாயிலாகவும், எடுத்துக்காட்டி விமோசனம் வழங்குமாறு கோரிக்கைகள் விடுத்துள்ளனர். எனினும் விமோசனம் பிறக்கவில்லை. "இந்த ஆசிரியர்கள் விமோசனத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் இந்த நீண்ட கால இடைவேளைக்குள் கௌரவ கல்வி மந்திரிகள் மூவர் மாறி மாறிப் பதவி பெற்றும் பயன் ஏதும் கிட்டவில்லை. புதிய கனம் கல்வி மந்திரி அவர்களாலேனும் புனர் வாழ்வு ஏற்படும் என்ற நம்பிக்கையோடு அதனை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேம்.

கனம் கல்வி மந்திரி அவர்கள் பெருந்தொகையினரான எஸ்.எஸ்.சி. காரருக்கு ஆசிரிய நியமனம் வழங்கப் போவதாக அடிக்கடி பத்திரிகைகள் வாயிலாக அறிந்து அறிந்து மகிழ்ச்சி அடைகின்றேம். அதற்காக எங்கள் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேம். அதே வேளையில் பயிற்சியை முடித்துவிட்டு நான்கு வருடங்களாக வேலையற்றிருக்கும் தமிழ் ஆசிரியர்களுக்கு முதல் நியமனம் வழங்குமாறும் தயவாக வேண்டுகிறேம்.

1959ம் ஆண்டுக்கு முன்பு பயிற்சி முடித்தவர்கள் எல்லோரும் நியமனம் பெற்று விட்டனர். 1961ம் ஆண்டுக்குப் பிற்பட்டவர்களும் சிலர் நியமனம் பெற்று விட்டனர். வேலையற்ற அட்டவணையிற் பதிந்த கிரமப்படி நியமனம் கிட்டும் என எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்களே தற்போது மிச்சமாகவிருக்கும் இச் சிறு தொகை ஆசிரியர்கள். இவர்கள் நியாயத்தையும் நீதியையும் எதிர்பார்த்துக்கொண்டு இருந்தமை காரணமாக இந்தத் துர்ப்பாக்கிய நிலைக்குள்ளாக்கப் பட்டிருக்கிருர்கள் எனக் கருத இடமேற்படுகிறது.

(கிழக்குமாகாணத்தில் 1958ம் ஆண்டு பயிற்சி முடித்துவிட்ட சிலர் இன்னும் நியமனம் பெருதிருப்பதாக அறிகிறேம். அவர்களுக்கு எஸ். எஸ். சி. சம்பளத்தோடு ஒக்டோபர் முதல் நியமனம் கொடுக்கப்படலாம் என்றும் வாக்களிக்கப்பட்டதாகவும் தெரிகிறது. கல்வி இலாகாவிலுள்ள அதிகாரிகளின் எண்ணற்ற சோதனைகளுக்கும் ஆளாக்கப்பட்டு அவர்கள் அனுபவித்த துன்பங்களை 'சுதந்திரன்' அடிக்கடி அம்பலமாக்கியிருக்றது.

1958ம் ஆண்டு பயிற்சி முடித்து விட்டு இதுவரை நியமனம் பெருதோர் தயவுசெய்து தங்கள் விபரங்களை எமக்கு அறியத் தருமாறு கோருகிறேம்.)

—ஆ-ர்

## பாரதப் பிரதமர் நேருவுக்கு அண்ணு அழைப்பு

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அறிஞர் அண்ணு அவர்களின் வளர்ப்புப் புதல்வர்களான, பரிமளம், இளங்கோவன் ஆகியோருக்கு முதலாம் திகதி காஞ்சிபுரத்தில் திருமணம் நடைபெறுகிறது.

தமிழ் நாட்டுச் சட்ட சபை உறுப்பினர்கள், மற்றும் முக்கிய பிரமுகர்களுக்கும் பாரதப் பிரதமர் நேருவுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டிருக்கிறது.

# நிழல்கள்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

அவன் படுக்கையில் நித்திரை வராமல் கிடக்கின்ருன். நேரம் நடுச்சாமத்திற்கு மேலாகி விடுகின்றது.

அமைதி என்பது மனிதனுக்கு எத்தனை விதங்களில் தான் தேவைப்படுகிறது. படிப்பதற்கு அமைதி தேவை. துயில்வதற்கும் அமைதி தேவைப்படுகிறது. வாழ்க்கையின் நிறைவு மன அமைதியில்தானிருக்கிறது என அவன் உள்ளம் எண்ணுகிறது.

மாளிகை, அமைதியில் சூழ்ந்து உறங்கிக் கிடக்கிறது.

சிற்ருற்றின் சலசலப்பு சுவையாக எழுந்து கொண்டிருக்கிறது; யன்னல் கம்பிகளுக்கூடாக அறையில் நுழைந்த மதிக கதிர்கள் மங்கிய ஒளியை அறையில் பரப்புகின்றன.

தம்மை அறியாமல் தூக்க மயக்கத்தில் வசமிழந்த விழிகள் ஏதோ ஒருவித சலனத்தில் திடீரென விழித்துக் கொள்கின்றன.

— வைகறை இதழ்களாகி மலர்ந்து கொண்டிருக்கின்றது.

(தொடரும்)

---

## கைதடி கிழக்கு இந்து வாலிபர் சங்கம்

மேற்படி சங்கத்தின் விஷேச பொதுக் கூட்டம் 28-7-63 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 6 மணியளவில் திரு. க. ச. சுவசுப்பிரமணியத்தின் தலைமையில் கைதடி கிழக்கு ஜன சமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்ட ஆரம்பத்தில் ஊர்காவற்றுறைப்பாராளுமன்ற உறுப்பினர் திரு வே. அ. கந்தையா அவர்களின் மரணம் குறித்து இரு நிமிட நேரம் மௌனம் அனுட்டிக்கப்பட்டது. பின்பு 'விபுலாநந்த அடிகளும் யாழ் நூலும்' என்னும் பொருள்பற்றி திரு. த. சுப்பிரமணியம் அவர்கள் பேசினுர்கள்.

இந்து மக்களின் புராதன தலங்களான கேதீஸ்வரம், கோணேஸ்வரம் ஆகிய இரண்டையும் சுற்றியுள்ள பகுதிகளைப் புனித நகரங்களாகப் பிரகடனப் படுத்தும்படி அரசாங்கத்தை வேண்டிக் கொள்வது என்னும் தீர்மானம் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.


# இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 12 பொயிண்ட் ரேமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரேமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் சுதந்திரன் ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

8, 10, 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விவரத்துக்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

**சுதந்திரன் ரைப் பவுண்டரி,**

194 ஏ. பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு—12.

5வது வெற்றி வாரம்!

# கிங்ஸ்லி பிளாஸா

(கொழும்பு) (வெள்ளவத்தை)

**வெலிங்டன் ராஜ் ஸ்ரீகிருஷ்ண**

(யாழ்ப்பாணம்) (நீர்கொழும்பு) (திருகோணமலை)

மற்றும் 4 திரைகளில்!



பார்த்தோரை மீண்டும் பார்க்கத் தூண்டும் சித்திரம்!

**பி. பானுமதி, எஸ். வி. ரங்கராவ், சௌகார் ஜானகி, சந்திரபாபு**

மற்றும் பலர் நடித்த

# அன்னை

இந்திய ஜனாதிபதியின் பரிசு பெற்ற படம்

---

## ஆவலோடு எதிர்பார்த்த அற்புதப் படைப்பு!

**விரைவில் எதிர்பாருங்கள் சினிமாஸ் திரைகளில்!**

இலங்கையின் சரித்திரத்திலேயே முதன் முறையாகத் தயாரித்து வெற்றி கண்ட படம்!

**பி. எஸ். கிருஷ்ணகுமார், ஜெயஸ்ரீ, மோகன்ராஜ், வி. தங்கவேலு, சாந்தி, மாஸ்டர் பிரகாஷ் முத்துவேலு**

மற்றும் பலர் நடித்த



# தோட்டக்காரி

டைரக்ஷன்:
**பி. எஸ். கிருஷ்ணகுமார்**

இசையமைப்பு:
**கே. எம். சவாஹிர்**

---

**2வது இன்ப வாரம்!**

**கெப்பிட்டல்** (கொழும்பு) **சபையர்** (வெள்ளவத்தை)

சந்தியா—வி. சாந்தாராம்—ராஜ்ஸ்ரீ—சாந்தாராம்—பகவான்—கே. டாட்டா நடித்த

**ஸ்த்ரீ** (டெக்னிக் கலர்)

---

## இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

# சென்ட்ரல் ராணி ராஜேஸ்வரா


[மருதானை] [யாழ்ப்பாணம்] [மட்டக்களப்பு]

## ஜோதி லிபர்ட்டி

[திருகோணமலை] [பதுளை]

ஜெமினி கணேசன், எம். ஆர். ராதா, எஸ். வி. ரங்கராவ், டி. எஸ். துரைராஜ், கே. சாரங்கபாணி, அஞ்சலிதேவி, ஈ. வி. சரோஜா, பி. எஸ். ஞானம், தேவிகா

**மற்றும் பலர் நடித்த**



ஜரிஸ் மூவிஸ்

# பங்காளிகள்

பாடல்கள்: கண்ணதாசன், மருதகாசி

---

4வது வாரம்!

# செல்லமஹால்

(கொட்டாஞ்சேனை)

மற்றும் 7 திரைகளில்

*சிவாஜி கணேசன்—தேவிகா — பாலாஜி — வசந்தி*
*எம். ஆர். ராதா—சந்தியா*
*எம். எஸ். எஸ். பாக்கியம்*
*நடித்த*

# பலே பாண்டியா



ஆயிரக்கணக்கான இரசிகர்கள் மீண்டும் மீண்டும் பார்த்து மகிழும் இந்த நகைச்சுவை சித்திரத்தில்

**சிவாஜி கணேசன்**
மூன்று வேடங்களிலும்
**எம். ஆர். ராதா**
இரட்டை வேடத்திலும்
தோன்றுகின்றனர்.



---

வருகிறது!

சாவித்திரி, ஜெமினி கணேசன்
கமலா லட்சுமணன்,
நடித்த

# கொஞ்சும் சலங்கை

(டெக்னிக் கலர்)

---

எதிர்பாருங்கள்!

எஸ். எஸ். ராஜேந்திரன்,
விஜயகுமாரி
நடித்த

# நீங்காத நினைவு

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1963-ம் வருடம் செப்டம்பர் மாதம் 1ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.